ஓம்

# கடையருக்கும் இங்கு கடைத்தேற்றம்.

(A Translation of Ruskin's "Unto this Last.")

இழுக்குடைமை ஏழைமைக் கில்லை;
அஃதில்லாமை கோழைமைக்கு மில்லை.

மொழிபெயர்த்துப் பிரசுரிப்போன்:
ரா. அனந்தகிருஷ்ணன்,
பரத்துவாஜ ஆசிரமம்;
சேரமாதேவி.

கலி ருOஉகூ.

[Rights Reserved.] [விலை அணா உ௦.

"FRIEND! I DO THEE NO WRONG. DIDST NOT
THOU AGREE WITH ME FOR A PENNY? TAKE THAT
THINE IS, AND GO THY WAY. I WILL GIVE UNTO
THIS LAST EVEN AS UNTO THEE."

"IF YOU THINK GOOD, GIVE ME MY PRICE; AN
IF NOT, FORBEAR. SO THEY WEIGHED FOR M
PRICE THIRTY PIECES OF SILVER."

" நண்பனே! உனக்கு ஒரு பொல்லாங்கும் நான் இழைக்
வில்லை. என்னோடு ஒரு காசுக்கு (பென்னிக்கு) நீ சம்மதித்
வந்தாயல்லவா? இந்தா, உனக்கு உள்ளதை நீ எடுத்துக்கொள்
எடுத்து, உன் வழியைப் பார்த்து நடந்திடு. உனக்குத் தந்த
போலவே, இங்கு நிற்கும் இக் கடையனுக்கும் நான் அளி
திடுவேன்."

" தக்கது எனத் தோன்றினல், எனக்கு உரிய விலை
என்னிடம் தந்திடுக; இன்றேல், அங்ஙனம் செய்யற்க.
லால், முப்பது வெள்ளிகளை அவர்கள் எனது விலையாக நி
துக்காட்டி யளித்தனர்."

ஓம்.

# கடையருக்கும் இங்கு கடைத்தேற்றம்.

## ஆசிரியன் எழுதிய நூன்முகம். *

"கார்னில் மாசிகை"யில் பின்வரும் கட்டுரைகள், நாலும் பதினெட்டு மாதங்களுக்கு முன்பு பிரசுரம் செய்யப்பட்டன. முடிந்த மட்டுக்கும் நான் கேட்டுத் தெரிந்துகொண்ட அளவில், அவற்றை வாசிக்க நேர்ந்தாரில் அதிகதமமானவர்களாலும், அவை கொடுங் கோபத்தால் சபித்துப்பழிக்கப்பட்டன என்னல்வேண்டும்.

௧

அதனுல் அவை சிறிதும் தாழப்போவதில்லை. அக் கட்டுரைகள் சர்வோத்கிருஷ்டமானவைகள் என்று நான் திடமாக நம்பியிருக்கிறேன். சர்வோத்கிருஷ்டமானவைகள்: அதாவது:—நான் எழுதியவற்றுள் எல்லாம், மெய்ம்மையால் தலைசிறந்தன; நடையால் "நிறைமொழி" பொதிந்தன; தரும் பயனுல் நிகர் தீர்ந்தன; என்க. மேலும், அவற்றுக்கு மகுடமாகச் சமைந்து இருக்கும் வியாசத்தை எழுதும்பொருட்டு நான் சிறப்பாக மிக்க முயன்று வருந்தியிருக்கிறேன். எனவே, என்னுல் எழுத முடிகிறவை எல்லாவற்றுள்ளும் மேலான சிறப்பு அதற்கே உரியதாகலாம்.

---

* கஅகூயில் முதன்முதலாக இவை "கார்னில் மாசிகை"யில் வெளியிடப்பட்டன. அவற்றைத் தொகுத்து நூல் வடிவினில், கஅகூஉ-ல் நூலாசிரியன் பிரசுரித்தான். அதுகாலை எழுதிய நூன்முகம் இது.

படிப்போன் உத்தரம் தரலாம்: "அது அவ்வண்ணமே ஆகலாம். அந்த ஒரு காரணம் கொண்டே, அவை செப்ப முற எழுதப்பட்டிருக்கின்றன என்று ஆகிவிடா," என. இக்கூற்றை மனமார ஏற்றுக்கொண்டு நான் பணிந்து கொடுக்கிறேன். கேலிக்குப் பாசாங்கு செய்கிறேன் என்றது, நிஜமாகவே நான் பணிகிறேன் என்று கருதுக. இருப்பினும், அந்த கிரந்தத்தை எழுதினது பற்றி நான் சந்துஷ்டி நிறைந்து அமர்கிறேன். வேறு எந்த நூலை எழுதியகாலத்தும், இத்துணை சந்துஷ்டி எனது உள்ளத்திற் பிறந்தது கிடையாது. இக்கட்டுரைகளில் காணும் விஷயங்கள் வெறும் சூசகங்களே யாம். ஆதலால், இவற்றைத் தொடர்ந்து எனக்கு ஒழிவு கிடைத்த உடனே விரிவாக எடுத்தாள வேண்டுமென்று நான் கருத்துக் கொண்டிருக்கிறேன். இது நடைபெறுவதற்கு இன்னும் நெடு நாள் செல்லாது. ஆதலால், அவை வெளிவரும்பொழுது, அவற்றுக்குப் பூர்வபட்சமாய் அமைந்திருக்கிற இக்கட்டுரைகளை மேவிட நினைவாருக்கு, அவை எளிதிற் கிடைக்கும்படி இருக்கவேண்டும் என்பதே இங்கு எனது ஆசை. ஆதலால், வெளிவந்த வண்ணத்திலேயே அவற்றை மீண்டும் நான் பிரசுரஞ் செய்திருக்கிறேன். நிறை மதிப்பைத் திருத்தியதால் ஒரு சொல்† மட்டுமே இங்கு மாற்றம் அடைந்திருக்கிறது; அவ்வளவேயல்லது ஒரு வார்த்தை கூடப் புதியதாகச் சேர்க்கப்படவில்லை.‡

---

† கீழே ௪௮-வது ரசனையில் "பதினேழு" என்று காண்பது முதலில் "பதின்மூன்று" என எழுதப்பட்டிருந்தது.

‡ இரண்டாவது வெளியீட்டின் குறிப்பு: இந்த நூலின் மு[illegible]வுரையில், ௫-ாவது ரசனையின் குறிப்புக்குப் புதிதாக ஒரு விஷயஞ் சேர்க்கப்பட்டிருக்கிறது. அதன் சாரபூதமாகப் பொதிந்து விளங்கும் விஷயம், ஆற்றல் கிளர்ந்து என்னால் எழுத முடிகிறவை

திருத்தி அமைப்பதற்கு உரியதாம்படி இக்கட்டுரைகளில் யாதானும் இருப்பதாக எனக்குத் தோன்றவில்லை.

அப்படி யிருந்தும், நானும் வருந்தக் கூடியதான
உ ஒன்று இங்கு சம்பவித்து விட்டது. இந்த நூலினிடமாக, பல தத்துவ நிர்ணயங்கள் அமைந்திருக்கின்றன. அவை யனைத்தினும் வைத்து அதிகமாக மகா ஜனத்தைப் பதறவடித்துத் தூக்கி வாரிப் போட்டதாக ஒன்றுளது. அதுவும் முதற் கட்டுரையிலேயே தானம் பெற்றுக்கொண்டது. **நியத வேதனம்** (திட்டமான கூலி) அளித்தலை மூலாதாரமாகச் சமைத்துக்கொண்டு, **பிருத்ய விதானம்** (தொழிற் கட்டமைப்பு) செய்வதன் ஆவசியகத்தை எடுத்துக் கூறும் அந்த தத்துவம் தான், மேற்கண்டவாறு மிகவும் பலமாக ஆட்சேபிக்கப்பட்டு வரும் தர்மம். அனையது முதற் கட்டுரையிலும் புகுந்து கொண்டது என்றால் வயிற்றெரிச்சலுக்குக் கேட்பானேன்? இவ்வளவிற்கும், இந்த நிர்ணயம் அத்தனை பிரமாதமான ஒரு சங்கதியும் இல்லை. இங்கு நிறுவப்பட வேண்டியதான சித்தாந்தங்களில் முதன்மை பெறுமவற்றின் வரிசையில், ஓர் இடமேனும் இதற்கு அளிக்கப்படாது. முதன்மையை நோக்க, இதனைக் கடையான ஓர் நிர்ணயம் என்றே சொல்லும்படி யிருக்கும். என்றால், மெய்யறத்தின் இயல் வகுப்பில், உரம் ஊன்ற நிறுவ வேண்டியதான தத்துவங்களது வரிசையிலும் இது தானம் பெறாது தாழ்ந்து கடை போய்விடும் என்று கருதற்க. இவ் வியாசங்களது உள்ளுறை சூட்சுமம் யாது? அவற்றது

அனைத்தினும் வைத்து விஞ்சிய விலை பெறுவதாகும். அதனைச் சேர்த்தபிறகு, பக்கத்துக்குப் பக்கம், வார்த்தைக்கு வார்த்தை, சிறிதும் மாற்றாமல், அப்படியே நான் வெளியிடுகிறேன். என்றால் ஆனமட்டும், யாவருக்கும் எளிதில் கிடைக்கும்படியாக இந்நூல் இருப்பதற்கான ஏற்பாடுகளையும் நான் செய்துள்ளேன்.

நடுநாயகமான பொருளும் குறிப்பும் யாவை? என்றால், சம்பத்து என்பதற்கு (தர்க்க) சாஸ்திரோக்தமாக நிர்த்தேசனம் தருதலாகும். நியாயப் பிரமாணங்களால் செவ்வையாக நிச்சயம் செய்து, சம்பத்து என்பதற்கு தெள்ளிய ஆங்கில மொழிகள் கொண்டு இலக்கணம் வகுக்கும் இக்காரியத்தில் முனைந்து முன் வருவாருக்கெல்லாம் நானே 'ஏறு'ஆக இருப்பேன் என்று கருதுகிறேன். செஞ்சொற் செறிவு சமைய, கிரேக்க மொழியில் ஸேனபனும் பிளாத்தனும், லத்தீன் லிபியில், ஸிஸிரோனும் ஹோரேஸனும் அகஸ்மாத்தாக இதற்குப் பலதடவைகளில் இலக்கணம் வகுத்துள்ளார்கள். ஓர் தனதாய சாஸ்திரத்துக்கு மூலாதாரமாகச் சமைத்தற்கு இப்பெற்றித்தாய இயல்வகுப்பு இல்லாமற்தீராது. எக்காரணங் கொண்டும், இத்தகைய நிர்த்தேசனம் நழுவவிடுதற்கு உரிய ஒரு பொருளன்று. இக்கலையைத் தொட்டுப் பலநூல்கள் நிகழ்காலங்களில் வெளிவந்திருக்கின்றன. அனையவற்றுள் எல்லாம் மிக்க பிரசித்தி பெற்று விளங்குகிற ஓர் கட்டுரை, இவ்வசனங்களைக் கொண்டு தொடங்கப்பட்டிருக்கிறது. "சம்பத்தின் இயல்பை எடுத்தோதலோ, அல்லது துருவி யாய்தலோ தான் தேசிய தனதாய கிரந்த கர்த்தர்களது விருத்தியாயிருக்கும்."* என்று தொடங்கிய இவ்வுரைகளைத் தொடுத்து நூற்பொருளை விளக்கப் புகும்போது அது இன்னவாறு கூறியிருக்கிறது: "சம்பத்து என்றால் என்ன வென்பது பற்றி ஒவ்வொருவனும் ஒரு உத்தேசம் வைத்திருப்பன், சாமானியமாக, இந்த உத்தேசம் போதிய அளவிற்குத் திருத்தம் பெற்றதாக இருக்கிறது,"............"நிர்த்தேசனம் செய்யு-

* எது? எடுத்தோதலா? ஆராய்தலா? ஆராய்தல் அவசியமாயிருக்கு மிடத்துப் பிறருக்கு அதனை எடுத்தோதல் சாத்தியமாகாது.

பேரால், பொறி புலம் கடந்த அதிசூட்சுமமான இடங்களில் நுழைந்து, உட்புகுந்து மயிர் பிளந்து பார்த்து, நுண்மையினும் நுண்ணிய நுணுக்கங்களையெல்லாம் சீர்தூக்கி எடைபோட்டு நிறுத்தல் என்பது, இந்நூலை எழுதப்புகுந்த போது முன்கொண்ட உத்தேச லட்சியத்தில் ஒரு லேசாம்சம் தானும் ஆகாது. ”§

திட்டமாகப் புலம் கடந்த நுணுக்கம் நமக்கு வேண்
டியதில்லைதான். ஆனால், அத்தனை திட்டமாக நமக்கு வேண்
டி யிருப்பதாய பொருள்கள் இவையாம்: பூதப்
௩ பொருள்களைக் குறித்தமட்டில், பூதநோக்கால் நுண்
மையும், தர்க்க நியாயங்களால் அளக்க நிலைபெறவல்ல
நுணுக்கமும் என்க. இவை நமக்கு இங்கு இல்லாமல்
கழியாது.

இப்பொழுது விசாரணைக்கு வந்த பொருள், இல்-அறம் (Oikonomia-(Economy): House-Law) என்பதாக விராமல், ஜ்யோதிஷம் என்பதாயிற்று என நாம் கற்பித்துக் கொள்ளுவோம். இங்கு, நம் ஆசிரியன், **பாஸ்வத சம்பத்துக்கும் பிரதி பாஸ்வத சம்பத்துக்கும்** (ஒளிரும் செல்வமும் பளிக்கும் செல்வமும்) இடையே வேற்றுமை யாதும் கண்டுகொள்ளாது நழுவவிட்டது போல, தாரகைகளின் வரிசையிலும் நிலையானவற்றுக்கும் திரிபனவற்றுக்கும் இடையே இருக்கக்கூடிய வேற்றுமையில் பார்வை வையாமற் படிக்கே அவற்றின் நூல் ஆசிரியன் இவ்வாறு தன் நூலைத் துவக்குகிறான் என்று இருக்கட்டும். “நட்சத்திரம் என்றால் என்னவென்பது பற்றி ஒவ்வொருவனும் ஒரு உத்தேசம் வைத்திருப்பன். சாமானிய ரீதிக்கு அந்த உத்தேசம் போதிய

§ **தேசீய தனாதாய தத்துவங்கள்**: ஆசிரியர்: **மில்**. முகவுரை பக்கம் ௨.

வளவிற்குத் திருத்தம் பெற்றதாகவே இருக்கும். ஒரு நட்சத்திரத்துக்கு இலக்கணங்களை வரையறுக்கும் பொழுது புலம் கடந்த நுண்பார்வை கொண்டு ஆராய்வது இந்நூலின் நோக்கமாயிராது.'' இப்படியாக அவ்வாசிரியன் தனது ஜ்யோதிஷ நூலை ஆரம்பித்திருக்கிறன் என்றபோதிலும், அவ்வாரம்பம் முன்னதினும் சிறந்ததாகவே விளங்கும். மகா ஜனத்தின் கருத்துவடிவத்தை யாதாரமாகச் சமைத்து, சம்பத்தைப் பற்றிய முடிபுகளை நிறுவ முன்படுகிற ஓர் தனுதாய சாஸ்திரத்தைக்கொண்டு, ஒரு தேசிய தனுதாயிகன் எத்துணை பயனை அடைவன்? அதினும் பார்க்கப் பன்மடங்கு உயர்ந்த பயன்களை ஓர் மாலுமி பெற்றுக்கொண்டு விடுவான் பிரஸ்தாபத்திலுள்ள அந்த ஜ்யோதிஷ சாஸ்திரக் கட்டுரையைக்கொண்டு, என்று நிராட்சேபமாகச் சாற்றலாம். உபரி, அது துணியவல்ல முடிபுகளும், தனுதாய நூலைப்பார்க்கிலும், மெய்ம்மையான் மிக்க மாண்பு தவழக் கதிர்த்துக் கொண்டிருக்கும் என்றும் சொல்ல வேண்டியதில்லை.

அதனுல்தான், துல்லியமாக வரையறுக்கப்பட்டு ஸ்திரமான நிலைபெறவல்ல பாங்கினில், சம்பத்துக்கு நிர்த்தேசனம் தருதல், என்பது பின்வரும் இக்கட்டுரைகளுக்கு முதற்குறியாக நிறுத்தப்பட்டது. அவற்றது இரண்டாவது குறியாக: ஜனஸமாஜத்திலே குறிப்பிட்ட சில அறநிலைகள் வேருன்றிச் சமைந்திருந்தால் மட்டிலுமே, அத்தகைய சம்பத்தின் ஈட்டம் அந்தியம் வரைக்கும் நடைபெற்றுவர முடியும் என எடுத்துக் காட்டுதலாகக் கருதி வைக்கப்பட்டது. அவற்றுள் (அவ் அறநிலைகளுள்) எல்லாவற்றுக்கும் முந்தி முதன் முதலாகத் தோன்றியாக வேண்டுவது; "நேர்மை : **ஆர்ஜவம்**"—என்ற வஸ்து ஒன்று

உளது என்பதிலும், இம்மையிற் காரிய நடபடிக்கைகளில், தப்பாமல் அதனை அனுசந்தித்து வருதலும் கூட முற்றும் சாத்தியம் என்பதிலும் விழும் திட நம்பிக்கை யாகும் என்க.

பரமன் படைப்புக்களில் எல்லாம் வைத்து விஞ்சுபீடு பெற்று உயர்வது யாதாகும் அல்லது யாதாகாது என்று நாம் இங்குத் தீர்ப்புச் சொல்லும் வினையிற் புகவேண்டாம். ஏனென்றால், அத்தகைய ஓர் பெரிய விஷயத்தை சர்ச்சை செய்து முடிவு காண்டற்கு உரிய அதிகாரம் மானுடராய்ப் பிறந்தாருக்கு வாய்த்தல் அரிதினும் அரிதாம். அதையும் கவனியாது, அதை விசாரணை செய்து தீர்ப்புக் கூறுவதாயினும், கூறும் அத்தீர்ப்புக்கு அசையாத ஓர் சித்தாந்தத்தின் நிலையைக்கொடுத்திட எவ்வாற்றானும் இயலாது.—எனவே, அதை விடுத்து **போப்பு** எனும் கவியின் சூழ்ச்சி முடிவில், இந்த அம்சத்தை மட்டும் நாம் தைரியமாகச் சுவீகரித்துக் கொள்ளலாம். ஆண்டவன் படைத்துப் பிரத்தியட்சத்தில் அருளியிருப்பவற்றுள், அதி சிரேஷ்டமானவாக விளங்கும் பொருள்களின் வரிசையில் நேர்மையாளனுக்கும் ஓர் தானம் அளிக்கப்படும் என்க. இன்றைக்கு உலகம் இருக்கிற தோரணையை நினைக்க, அது (நேர்மையாளனுய படைப்பு) சற்று அருந்தலான பண்டம் என்றும் தோன்றும். அதனால், அப்பண்டம் என ஒன்று இருத்தற்கு ஒல்லும் என்பதே நம்பமுடியாதது; அல்லது, அது இயற்கையின் நடையிலே தானகத் தோன்றமாட்டாமல், தெய்வத்தின் அத்புத லீலா மகிமையாலேயே தோன்றக் கூடியது என்று அதனை நாம் கருதிவிடவும் படாது. ஆயின், அது அப்பிராகிருதமான விகிருதிப் பொருளாகப் பவித்திடாது என்ற சூசனை தானும்

தேவையில்லை யன்றோ?—தனுதாயத்தின் நடைவீதியினைச் சாய்த்து வெட்டி வாங்கிப் பாழாக்கி, இம்மையில் அல்லல் விளைக்கப் பிறந்த ஓர் பலம் அன்று நேர்மை எனப்படுவது. மற்று, இங்கு வியவஸ்தையை நிறுவி ஆட்சி செலுத்தப் பிறந்த ஓர் வேகமேயாகும் அது என்று அறியவேண்டும். தவிர, ஊழிச் சுழியனையதோர் குழப்பம் பொங்கியெழுந்து வாரி இழுத்துக்கொண்டு போவதற்குரியதான இடத்தில் இல்லாமல், உறுதியான தடங்கரைகளில் அத்தனுதாய வீதிகள் என்றென்றும் அசையாது நின்று உய்வு பெற்றிட வேண்டுமாகில், அவை இந்த சக்தியின் நியமங்களையும் ஆணைகளையும் கடவாது அடங்கி நடந்துவரக் கடவன; வேறு எதன் ஏவலைத்தாங்கிப் பணிந்து நடப்பதாயினும், அவற்றுக்கு உய்வு இல்லை.

௫ யாதற்கேனும் போப்புக்கவி பழிசுமந்திடற்கு உரியன் ஆவான் என்றால், (அறவாழ்விற்கு) ஓர் உன்னதமான அளவையை அவன் நிறுத்திச் சென்றுவிட்டான் என்ற சொல்லுக்காகவே பழியேற்கவேண்டும். ஆனால் இப்பொழுது, அவ்வாறு அவன் பழிக்கப்படுகிறான் இல்லை. மற்று, இத்துணை தாழ்வானதாக ஓர் அளவையைப் பார்த்து நிறுத்தியிருக்கிறானே என்று சொல்லியே, ஒரோ வேளைகளில், அக்கவிமீது மாந்தர் தோஷாரோபஞ் செய்கின்றனர். அதனை நானும் நேரில் கேட்டிருக்கிறேன். அன்னார் பிரலாபிப்பர்: "நேர்மை எனப்படுவது ஓர் கணிசமான தர்ம விசேஷந்தான்; ஆட்சேபமில்லை. ஆனால், அதனிலும் பார்க்க இன்னும் எத்துணையோ உயர்ந்த வைபவங்களை மானிடர் அடையவிருக்கின்றனர். ஆக, (அவற்றை விடுத்து) நேர்மை கொண்டு வாழ்தல் எனும் அந்த ஒன்றில் மட்டும் நாம் சித்திபெற்றுக்

கொண்டால் போதுமோ? அதற்கும் மேலாக யாதொன்றும் நம்மிடம் கேட்க வரமாட்டார்களே," என.

தற்பொழுதைக்கு, நலமிக்க நேயர்களே, உங்களிடம் கேட்பது யாதொன்றும் இல்லை. அதனினும் மிக்கு உயர்ந்து பறந்துவிட வேண்டும் என்ற ஆர்வத்தின் இடையில், பிரதம பட்சம் அதன் தரத்திற்கேனும் தாழாது தரித்து நிற்பதே நமது யோக்கியதைக்கு அழகாயிருக்கும் என்பதில் திருஷ்டி வையாமற்படிக்கே நாம் திட்டமாக மோசம் போயிருக்கிறோம் என்று தோன்றுகிறது. இதனைப் பின்சார்ந்து, வேறு என்னவற்றில் எல்லாம் நாம் சிரத்தை வையாமல் மோசம்போய் வந்திருக்கிறோம் என்று பிராய்ந்து கொண்டிருக்க இது இடமில்லை. ஆனல், சாமாநிய நேர்மையினிடமாகவும், அதைக் கொண்டு வினைகளையாற்றி முடிக்கும் திறமையினும், நாம் சிரத்தையையும் நம்பிக்கையையும் கழற்றி எறிந்துவிட்டோம் என்பதற்கு யாரும் ஆட்சேபணை கூறமுடியாது. ஆதார பூதங்களான அம்சங்களோடு சேர்த்து மீட்டி, இந்த சிரத்தையை நாம் பிரதிஷ்டை செய்துவிட வேண்டும். முதலாவதாக, நாம் பார்த்துத் தீர்க்கவேண்டிய அலுவல் இதுதான். இம்மையில் பொய் புனைசுருட்டுக்கள் செய்யாமற்படிக்கு மக்களைக் கட்டுப்படுத்தி நிறுத்தித் தடுத்தாண்டுவர வல்லது, அல்வழித் தம் வயிற்றுப் பிழைப்பில் மண் விழுந்திடும் † என்ற

† "வரம்பு இகவாமல் உள்ளடங்கி வாழுமாறு தொழில் மக்களைத் தடையிட்டு நிறுத்தி வைத்து வருவன, அவர்தம் மரபு வழக்கும், அவரை ஏவலுடைமை கொண்ட முதலாளரது சங்கமும் ஆகா. மற்று, அன்னூர் கைப்பணி கழித்துத்தரும் பண்டங்களை விலைகொண்டிடும் போக்தாக்களே யாவர். அந்த போக்தாக்களின் வசமாகத் தமக்கு வரக்கூடிய வேலைகள் ஒழிந்து நழுவிப்போய் விடுமே என்ற வெருட்சி ஒன்றுதான் ஏவல் மக்கள் செய்யக்கூடிய

பீதி ஒன்று தான் என்பதற்கு இல்லை. மற்று, வேறு காரணங்கள் கொண்டும் அவற்றைக் கடிந்து ஒழுகிவரக் கூடிய புமான்கள் இப்புவியில் வாழ்தலும்ஒல்லும்.வெறுமே, இதனை நாம் உள்ளத்தால் நம்பிக்கொண்டு வாழ்தல் ஒன்று மட்டும் போதாது. அதனைப் பின்தொடர்ந்து, அனுபவத் தாலும் கண்டுதேறி, அவ்வுண்மையை நமது அந்தராத்மா வில் அசையாதவாறாக பிரதிஷ்டை செய்து நிறுத்தியும் கொண்டுவிட வேண்டும். அவ்வண்ணம் செய்து முடித்த பிறகு, நம் உள்ளத்தில் வேரூன்றவேண்டிய அடுத்த நிச் சயம் அடியில் வருவது என்னலாம். அதாவது: ஓர் ஸம்ஸ் தானத்தில் மேற்சொன்ன சீரியர் (வேறு காரணங்களை முன்னிட்டு வஞ்சக மோசங்களைக் கடிந்து ஒழுகவல்லார்) எத்தனை வாசியராக இருப்பர்; தத்துல்யமாக அந்த வாசிக் குச் சமமாக இருக்கும், சொன்ன அந்த ஸம்ஸ்தானம், தன் னுடைய பவிஷ்யத்துக்குப் பங்கம் நேராமல் ஸ்திரமாக நிலைநின்று வருகிற யோக்கியதையும்;—அல்லது நிற்க வியலுகிற சக்தியும் என்க. என்ற இக்காட்சியின் தேற்ற மும் அடுத்த படியில் நமக்கு இன்றியமையாத தாகும்.

ஆகவே, இவ்விரண்டு விஷயங்களையும் தீரவாராயும் தலைநோக் கங்கொண்டே, அடுத்து வரும் கட்டுரைகள் முக்கியமாக எழுதப் பட்டன. பிருத்ய விதானம் இங்கு ஓர் தலைப்பொருளாகக் கருதி யமைக்கப்படவில்லை. மற்று, ஓர் வழிப்பொருளின் தன்மையாலே யே அது இங்கு தானம் பெற்றுக்கொண்டது. ஏனென்றால், நாம் கிருதநிச்சயமாக நிறுவிக் கொள்ளவேண்டியது, "நமது வைசிய நாயகர்களிடம் போதியவளவிற்கு நேர்மை நடையை எதிர்பார்த் தால் ஒல்லும்" என்பதே யாகும். இது ஈடேறி விட்டால், பிருத்ய

ஏமாற்றுக்களையும் புரட்டுக்களையும் தகைந்து, அவரது ஆலசி யத்தைத் திருத்தி வருகிறது."

(ஜாதிகளின் சம்பத்து. புத்தகம் ௧. அதிகாரம் ௧௦.)

விதானம் பின்னர் ஒரு மலையாகாது. யாதொரு தடுமாற்றத்துக்கும் கலகத்துக்கும் இடம் வையாமல், அது தன்னைப்போலவே வளர்ந்து ஓங்கிக்கொள்ளும். ஆனால் நமது நாயகர்களிடம், அவ்வாறுடைய நேர்மையை எதிர்பார்க்க முடியாத நிலை தோன்றி விட்டதானால், பிருத்ய அனுசாஸனம் பின்னர் என்றென்றைக்கும் அசாத்தியமான தொன்றாகப் பலித்து விடும்.

---

**இரண்டாவது பதிப்பின் குறிப்பு:** இத்தடவல், இந்நூற் பொருளுக்கு நான் புதிதாகச் சேர்க்க விருப்பது அடியில் வருவதேயாகும். யாரானும் ஆகட்டும். இதனை வாசிக்க நேரும் கிறிஸ்து மார்க்கத்தியர் அனைவருக்கும், மனவொருக்கத்துடன் நான் செய்து கொள்ளுகிற பிரார்த்தனை இதுதான். இதனை யொத்த வோர் வசனத்தை வாசித்து அங்கீகரித்திடவோ, அல்லது இன்னும் ஓர்கை மேற்சென்று எழுதி வைத்திடவோ செய்தல் சாத்தியமா யிருக்கிறதென்றால், அந்த நிலை வரைக்கும் வழுக்கி வீழ்ந்து கிடக்கிற ஒரு ஆத்மா எத்துணை கொடிய நரக வாதனையை யனுபவித்துக் கொண்டிருக்கவேண்டும் என்பதை உங்களுக்குள்ளே போட்டு நெடிது நினைத்துப் பாருங்கள். இப்பொழுது, இதற்கு நேர் எதிர்த் தட்டில், நான் வைக்கும் பிறிதோர் வாக்கியத்தையும் சீர்தூக்கிப் பார்க்கக் கடவீர். முதன் முதலாகத் தன்னகத்தே நிருமித்துக்கொண்ட வேதப் பள்ளியில், தான் சங்கல்பித்துக் கொண்டிருக்கிற வர்த்தக நெறியைத் தொட்டு, வேனிஸ் நகரம், கன்மேல் எழுதி வைத்துக்கொண்ட பிரதம வசனங்களாக்கும் அவை. அவற்றை அங்கு முதன்முதலாகக் கண்டு குறித்தவனும் நானே யாவேன்.

"இந்தக் கோட்டத்தைச் சுற்றிலும் வாழும் வர்த்தகர் வகுத்துக்கொள்ளும் சட்டம் நீதி சான்றதாகவும், அவரது

இந்தக் காரியம் கைகூட வேண்டுமானல், பூர்வபட்சத்தில் அவசியம் அமைந்தாக வேண்டிய நியாயோபாயங்கள் பலவற்றையும் விஸ்தாரமாக, அடுத்து வெளிவரும் நூல்களில் நான் பரிசீலனை செய்யலாமென்று உத்தேசித்து ஒதுக்கி வைத்திருக்கிறேன். பிரஸ்துத கிரந்தத்தில், தத்துவ மூலங்கள் மட்டுமே பரிசீலனை செய்யப் படப்போகின்றன. என்றாலும் அதன் போக்கிலே பல சூசகங்கள் தெறித்து விழுந்திருப்பவாகக் காணப்படலாம். அவற்றைக் கண்டமாத்திரத்தில், தடுமாற்றம் தோன்ற

படி நிறைகள் யதார்த்தமானவையாகவும், அவர் செய்யும் உடன்படிக்கைகள் கபடந் தீர்ந்தவையாகவும் விளங்கக் கடவன.''

இந்தக் குறிப்பில் நான் வழங்கியிருக்கிற உரைக்கட்டு இறந்து பிறந்தது, அல்லது தகுதி கழிந்தது என்று இந்நூலைப் படிப்போர் கருதாமல் இருப்பாராக. கருத நேர்வாரை, **மந்திரமும் மலரும்** என்ற எனது நூலில் பதினெட்டாவது ரசனையை ஒருமையுடன் படிக்குமாறு நான் விரும்பிக் கேட்டுக்கொள்ளுகிறேன். எந்நாளும் எனக்கு வழக்கம் இல்லை; அப்படியே இன்றைக்கும் நான் வழங்கியிருக்கவில்லை. என்னையெனில், நான் எழுதக்கொண்ட வாசகம் எதிலும் கருத்தொருமையுடன் சீர்தூக்கிப் பார்த்து, உள்ளவற்றில் எல்லாம் வைத்து, அவ்வேளைக்குத் தகுதியான் மிக்கன, யுக்ததமமாவன வென்று துணியாத எவ்வுரைகளையும் நான் வழங்குகிறதில்லை என்று அது தெரிக்கும். அதனைக் கண்டு அவர் ஐயந்தெளிவாராக.

வேநிஸ்.

ஞாயிறு. கஅ - மார்ச்சு. கஅளஎ.

லாம். அவை எங்கே தம்மைப் படுகுழியில் தள்ளி இடர் விளைக்கக் கண்ணைப் பொத்திவிட்டுத் தந்திரமாகக் கூட்டிக் கொண்டுபோய் விடுமோ என்று ஒருவேளை வாசகர் உள்ளம் பதறலாம். அன்னார் தடுமாற்றம் தவிர்த்துத் தெளிவு பெறுவாராக! ஏனென்றால் ஒளிவு மறைவாக நான் ஒன்றையும் அடக்கிவைத்துக் கொள்ளப் போவதில்லை. அனையவர் அங்கீகரிக்க வேண்டும் என்று விரும்பி அவர் முன் நான் நிறுத்த வெண்ணியிருக்கிற எனது அரசியல் துணிபுகளில் எல்லாம் வைத்து மிக்கப் பொல்லாதன வாகத் தோன்றக் கூடிய வற்றை தத்க்ஷணத்திலேயே நான் உடைத்துச் சொல்லித் தீர்த்து விடுகிறேன். மேற்கொண்டு அவர்கள் யாதொரு சந்தேகமும் இல்லாமல், திறந்த வெளியில் நிர்ப்பயமாக நடந்து செல்லுவதாகத் தேறி உறுதிப்பா டடைவாராக.

(க). முதலாவதாக :— நாட்டின் பரப்பெங்கணும் சிறுவர்க்கான கல்விப் பயிற்சிச்சாலைகள் தெளிக்கப்படல் வேண்டும்.* அவற்றின் பொருட்டு நேரக்கூடிய தனவிரயம்

* அத்தகைய பள்ளிக்கூடங்களை விதைத்து வளர்ப்பது சாத்தியமாக வேண்டுமேயானால், அதற்கு அபரிமிதமான திரவியம் வேண்டுமே. வேண்டும் அத்தனையையும் வரையாது வாரியள்ளி விட்டுக்கொண்டிருக்கத் தோதாக இருக்கும்படி, (தயாராய்க் கட்டிப் போட்டு வைப்பதற்கு) உரிய நிதிகளுக்கு அரசாங்கம் எங்குசெல்லல் வேண்டும்; முடியும்? என்று குறுமை நோக்குடையார் சிலர் ஒருவேளை கடாவலாம். அத்தனை நிதிகளையும் கட்டிப்போடுவதில், நமக்கு சித்தி வரவேண்டுமானால், யதாக்கிரமமாக நாம் அனுஷ்டிக்க வேண்டியிருக்கும் காரிய தந்திர முறைகளைப்பற்றிப் பின்னால் நான் சர்ச்சை செய்து கொள்ளுகிறேன். ஸாக்ஷாத்தாக நமக்கு சித்திவாங்கித்தருகிற உபாயங்களைக் கைக்கொண்டு, நிதிகளைப் பகுத்து வைப்பதற்கு இங்குத் தேவையே தோன்றாமற் போகலாம்

முழுமைக்கும், அரசாங்கமே தன் கையிலிருந்து பணத்தை இறக்கிவைக்க வேண்டும். பிரதியாக, அப் பள்ளிக் கூடங்

---

என்று நான் கூறவல்லேன். ஏனென்றால், அப்பள்ளிகளின் சார்பில் பிறந்து பொலிந்திடும் பக்க ஆதாயத்துறைகளில் நின்றும் திரளக்கூடிய நிதிகளைக்கொண்டு, அப்பள்ளிகள் முற்றும் தன்னைக் கட்டிக்கொண்டு போகவல்லனவாயிருக்கும்; அம்மட்டும் இன்றி, மேற்கொண்டு ஆதாயத்தையும் அவை காட்டிவிடும். சொல்லும் தரத்தில் அவ்வித்தியா சாலைகள் மட்டும் நிலைபெறுத்தப்படவேண்டும். அப்படியானால், ஓர் பால் அவற்றினகத்தில் வைத்துச்செய்யப்படும் போதனையின் பிரபாவம் காரணமாகவும், மறுசார், அவற்றுக்குச் சுற்றிலும் ஏற்படக்கூடிய வியாபகசக்தி, ஊர்ஜ்ஜிதம் காரணமாகவும், மக்களிடையே முன்பு நிகழ்ந்துவந்த பழிச்செயல்களும் பாவவினைகளும் தம் வயத்தானேயே தலைகாட்டாது மாய்ந்து மறைந்துபோய்விடும். இந்நாட்களில், "ஐரோப்பாவின் சந்தைகளில் விலைக்கு வருகிற வெறுக்கையின்பப் பொருள்கள் அனைத்துக்கும் ஒன்று சேரக்கொடுக்கும் தொகைக்கு மேற்போய் விடுகிறது: இப் பழியின் (தண்டனை) பொருட்டுக் கொடுக்கப்பட்டுவரும் விலை" என்னும்படியான நிலை தோன்றியிருக்கிறது. அப்படி மண்டி மலிந்து போய்விட்டிருக்கின்றன குற்றங்களும் பழிகளும் இன்று. அவற்றை ஒறுக்கும்பொருட்டுக் கொட்டுகிற அத்தனை பணம், தனியாக வேறு எத்துறையிலும் ஐரோப்பாவில் இன்று விரயம் செய்யப்படுகிறதில்லை. என்னில், அத்தனை பழிகளும் நைந்து மாய்ந்து, அப்பொருட்டுத் தாரை வார்க்கப்பட்ட அத்தனை திரவியங்களும் ஒருவாக்கிலே மீதம் என்று ஆகிற வேளையில் பணம் செழித்து கொழித்துவிடாதோ? அவ்வினத்தில் மீதமாகிற பொருளைக்கொண்டு, பத்தத்தனை பள்ளிக்கூடங்களைத் தாபித்து நடத்திவிடலாமே. உபரியும், அதனால் சித்தியாகிற வேலைமீதம் முழுமையையும், அப்படியே அலக்காக லாபம் என்று கட்டியும் போட்டுவிடலாம். அவ்வாறு, கட்டிப்போடக் கூடியதாகப் பெருகும் லாபமோ, இங்கு, இப்பொழுதே முழுவதும் கணக்கிட்டுச்சொல்லவியலாத தன்மையில், அத்துணை அமோகமாகத் திரண்டுவிடும்-

கள் சர்க்காரின் நியமத்தையும் ஆணைகளையும் தலைமேற் கொண்டு நடந்து வரவேண்டும். பெற்றோர் விரும்பி யனுப்புகிற குழந்தை யொவ்வொன்றுக்கும், ஏன்? நாட்டிலே பிறந்த குழந்தை ஒவ்வொன்றுக்கும், அவற்றில் வித்தியா வசதி அமைத்துக் கொடுக்கப்படும். (சில சந்தர்ப்பங்களில், பிள்ளைகளைத் தாமாக விரும்பி யனுப்பிவராத பெற்றோரைத் தண்டனைக் குட்படுத்தி நிர்ப்பந்தம் செய்தேயும் அவருடைய, குழந்தைகளை அனுப்பிவரும்படி ஏற்பாடு செய்யவேண்டி நேரலாம்.) தவிர: கட்டாயமாக, அடியில் வரும் மூன்று துறைகளும் ஒவ்வொரு பள்ளியிலும் கற்பிக்கப்பட்டு வரவேண்டும். (இவற்றைப் பின்சாரப் போதிக்க வேண்டியதான வேறு சிறு துறைகளைப்பற்றி இங்கு ஆராய்ந்து கொண்டிருக்க வேண்டியதில்லை; பின்னர்ப் பார்த்துக் கொள்ளலாமென்று தள்ளி வைப்போம்.) போதகாசிரியர்களின் தானத்துக்கு ஊரில் இருக்கும் 'ஏம்போக்கி'களைப் பார்த்து அனுப்பக்கூடாது; மற்று, சிட்சைத் துறையில் இனி அவர்களை விஞ்சக்கூடியவ ரிலர் என்று அமையும்படியாகத் தேர்ந்து தெளித்த சிஷ்டர்களையே, அப் பள்ளிக்கூடங்களில் போதகாசிரியர்களாக வேலை பார்த்து வரும்படி நியமனம் செய்யவேண்டும்.

சொல்லிய துறைகள் மூன்றும் ஆவன :

(அ) சுகவிதிகளும் அவை நியமிக்கும் வியாயாமங்களும்.
(ஆ) அறப்பயிற்சியும் குடிமை யொழுக்கமும்.
(இ) ஜீவனோபாயத்திற்கான ஓர் கலை.

உ. **இரண்டாவதாக :** இந்தப் பயிற்சிச்சாலை ஒவ்வொன்றையும் தொகுத்துப் பக்கத்தில் ஓர் "கையாளம் பண்ணையும்," ஓர் தொழிற் பட்டடையும் கட்டி வைக்க வேண்டும். இவையும், மேற்சொன்னது போலவே, சர்க்

கார் கட்டளைகளின்படியும் திட்டங்களின்படியுமே பூராவும் வேலை நடத்தி வரப்படும். ஜீவாதாரங்களாகக் கூடிய ஸமஸ்தமான ஸம்பாரங்களும் இவற்றில் உற்பத்தி செய்யப் பட்டு விற்று வரப்படும். அப்படியே, பயன்தரவல்ல கலை ஒவ்வொன்றன் பயிற்சிக்கும் இப்பட்டடைகளில் போதிய வசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட்டிருக்கும். இவ்வேற் பாடுகளை தனி மனிதரது தொழின் முயற்சிக்கு எட்டுணை யும் இடர் விளைக்கும்படியான பாங்காக நிறுவப்படாது. எனில், வேண்டுமென்றே வரிகளையோ அல்லது நிர்ப்பந் தங்களையோ சுமத்தி, அவ்'வியக்திகத' வியாபாரங்களுக்கு எவ்வகையிலும் அழிவுமதி செய்தல் பொருந்தாது என்று கூறவேண்டியதில்லை. மற்று, அவற்றுக்குப் பாதையை ஒழித்துக்கொடுக்கவேண்டும். கையாலான மட்டுக்கும் பிர யாசைப்பட்டு வருந்தியுழைத்து அவை முனைத்து மேநிலை யை எய்திக்கொள்ள சர்க்கார் சௌகரியமும் செய்து வைக்கவேண்டும். தவிர, சாத்தியப்படுகிறதா யிருந்தால், சர்க்காரைக் கீழ்ப்படியில் தாழ்ந்துநிற்கும்படி வைத்து விட்டு, அவ் 'வியக்திகத' வர்த்தகமும் உத்யமமும் வெற்றி முழங்கிக்கொள்ளலாம். இதில் அரசாங்கத்தின் சார்பி லிருந்து மாற்சரியமோ, தடையோ தோன்றக்கூடாது. அவற்றைத் தம் போக்கிலே போக விடுத்துவிட்டு, அரசாங் கத்தார் உன்னிப்பாயிருந்து கவனித்து வரவேண்டியதெல் லாம் இன்னவைதாம் என்னலாம்: மேற்சொல்லியவண்ணம் நிர்மாணஞ் செய்யப்பட்டிருக்கிற அந்த சர்க்கார் பட்டடை களிலும் பண்ணைகளிலும் வைத்து, அதிகாரிகளின் மேற் பார்வையின் கீழ்ச் செய்து காட்டப்படும் வேலை திருந்திய தாகவும், பேர் சொல்லும்படியாகவும் பொலிந்து விளங்க வேண்டும். அவ்விதமே, சர்க்கார் அங்காடிகளில் வைத்து விற்று வரப்படும் சரக்குகள் நிர்மலமானவையாகவும் எவ்

வகையானும் மோசத்துக்கு இடம் இல்லாதவையாகவும் இருத்தல் இன்றியமையாததாம். எனவே, அரசாங்கம் கூறும் விலையை ஒருவன் கொடுத்தால், அவனுக்குக் கிடைக்கும் பண்டம் பேரளவோடு நில்லாமல், பண்பாலும் பொருளாலும் சொயமானதாக இருக்கவேண்டும். கூறிய விலையைக் கொடுத்து அவன் வாங்கிக்கொள்ளுகிற அன்னம், நாம மாத்திரமாயில்லாமல் வாஸ்தவத்திலும் அன்னமாகவே இருக்கும்; பானம் என்று பேர் சொல்லித் தரப்படுவதும் அப்படியே பேரளவன்றிப் பண்பாலும் சிறந்த பானமாகவே இருக்கும்; தரும்கூலிக்கு வரும்சேவகம், முற்றும் வாசாகயிங்கரியமாகவே போய்விடாமல், மெய்வருந்திச் செய்து தரப்படுவதாய உண்மைக் கைங்கரியமாகவும் இருக்கும். என்று இன்னவாறான திடநிச்சயம் மக்களது மனத்தில் வேரூன்றிக்கொள்ளும் பான்மையினில், அவ்வரசாங்கப் பிரவிருத்திகள் நடத்தி வரப்படல் வேண்டும்.

௩. மூன்றாவதாக: ஆண்மகனோ, பெண்மகளோ, சிறுனே, அல்லது சிறுளோ யாரானும் ஆகட்டும்: எவ்வித வேலையிலும் ஏவல்கொள்ளப் பெறுமல் வெறிதே நின்று கழிக்க நேர்வாராயின், அவர் அனைவரையும் அடுத்தாற்போல் பக்கத்தில் இருக்கக்கூடிய 'சர்க்கார் கானு'விற்கு வருவித்து வேலை ஏவிடவேண்டும். அவ்வகையாகப் போந்தாரைப் பரீட்சித்துப் பார்த்ததில் அவர்க்குத் தகுதியாகக் கண்ட வேலையை அவர் வசம் ஒப்படைக்கவேண்டும். பிரதியாக, அதாதன் தரத்திற்கு ஏற்றாற்போல, ஆண்டுதோறும் அறுதிசெய்து வைத்திருக்கும் நிர்ணய விகிதங்களின்படி வரக்கூடிய வேதனங்களை அவர்க்கு அளித்துவரவேண்டும். அதின்றி, அன்னார் ஒரு வேலையும் செய்யவேலாதவரா யிருப்பாராகில், முதலில் அதன் காரணத்

தைக் கண்டு தெரிந்துகொள்ள வேண்டும். அறியாமையே காரணம் என்று தோன்றினால், அவர்க்கு அறிவைப்புகட்டி வைக்க வேண்டும். நோயால் நைவதன் காரணமாக ஏலாத வரா யிருப்பரேல், ஆதரவுடன் அவரைப் பேணிப் போஷித்து வரவேண்டும். இரண்டும் இல்லாமல், திமிர் பிடித்துக் கழுவன் சாதனையே சாதித்து வருவதாகத் தென் பட்டால், அப்பொழுது, அதிகதமத்தில் கண்டிப்பும் 'காய் தாவும்' சேர்ந்த தன்மைகொண்டு, அவரை வலுக்கட்டா யப்படுத்தி, வேலையில் மாட்டிப் பிணைத்துவிட வேண்டும். உள்ளத்துக் குள்ளே, அதிகக்கஷ்ட சாத்தியமாகவும் மான ஹீனமாகவும் இருக்கக்கூடிய - ஆனால் சமுதாயத்துக்கு முற்றிலும் அவசிய மாவதான, கொடும் பாடுகளாகப் பார்த்து ஒதுக்கிவைத்திருந்து இவ் 'அண்ணள்'ருக்குக் கொடுத்துவிட வேண்டும். முக்கியமாகச் சுரங்கங்களில் சென்று செய்யவேண்டியிருக்கிற வேலைகளுக்கும், இன் னும் அவைபோல் ஆபத்து நேரக்கூடிய இடங்களுக்கும் அன்னவரை யனுப்பி வைக்கலாம். (ஆனால், முன் ஜாக்கிர தையுடன், அத்தகைய ஸ்தலங்களில் நேரக்கூடிய ஆபத் துக்களை யெல்லாம் கூடியவரைக்கும் பரிகரித்து வைத்து இருக்கவேண்டும். தப்பாமல் இது காரிய நடிபடிக்கைக்கு வரும் பொருட்டாக வேண்டிய சட்ட திட்டங்களையும் கட்டுப்பாடுகளையும் வகுத்து ஒழுங்குபடுத்தி வைத்திருக்க வேண்டும்.) அதோடு, அத்துணை கஷ்டமான வேலைகளைச் செய்து வருதற்குக் கிரமமாகக் கொடுக்கவேண்டிய கூலி யை ஒழுங்குப்படி கணக்குச்செய்து அன்றாடம் கட்டிப் போட்டு வரவேண்டும். நாளடைவில், மதந்தீர்ந்து, வினை யறத்தின்பால் அவர்க்கு கௌரவபுத்தி பிறந்துவிட்டது என்று தோன்றும் பொழுது, அதுவரை சேர்த்துக் கட்டி

வந்திருக்கிற கூலிகளை முதலில் அவரிடமிருந்து கட்டாய வேலை வாங்கும் பொருட்டாக நேர்ந்த செலவுகளைப் பிடித்துக் கழித்து வந்த மீதித்தொகையை மட்டும், அவர்கையில் ஒப்படைத்து மேலாவில் தகுதிபெறச் சுவாதீனமாக வாழுமாறு வாழ்த்தி அனுப்பிவிட வேண்டும்.

ச. கடைசியாக:—விருத்தருக்கும் அநாதையருக்கும் சுகபோகமும் இன்பமனையும் சமைத்துத் தரப்பட வேண்டும். பெறுவாருக்கு, தம் பெருமை பொன்றிடும் பாங்கில், இச் செய்யும் துணை அமைதி பெறப்படாது. அதிலும், கசடுகளையெல்லாம் கழித்துக்களைகட்டிவிட்டால், எஞ்சி நிற்போர் இந்நிலை வந்துற்றதற்கு, காலம் போதாமை யொன்றுதான் காரணம்: என்ற உண்மை யார்க்கும் துலங்குவதாகப்போய்விடும். எனவே, அப்பொழுது, இத்தகைய விநியோகம் பெறுவாருக்கு உயர்வும் பெருமையையே அளிப்பதா யிருக்கும். ஏனென்றால் "தனது கைவாள் கொண்டோ, இறகுமுனை கொண்டோ, சத்திரங் கொண்டோ தன் நாட்டுக்குப் பணியாற்றி வருவான் நடுக்குலங் களைச் சார்ந்த ஓர் புமான். அவனுக்கு முற்றும் சமமானவனே யாவன்: தன் கை மண்வெட்டி கொண்டு தன் நாட்டுக்குப் பணியாற்றி வரும் ஒரு தொழில்மகனும். தரத்தாற் றாழ்ந்தது என்ற காரணம் கண்டே, பிற்சொல்லிய பணியாளன் திட சரீரியாயிருந்து தான் வேலை செய்து வந்த காலத்திலும், தாழ்வான கூலிகளை மனமொப்பிப் பெற்றுக் கொண்டு வந்திருக்கிறான். அது போலவே, சுகநலம் குலைந்து தளர்ந்து கைதாழ்ந்துபோன முதுமைப் பருவத்திலும், அவனுக்கு அளிக்கப்படும் சம்பாவனை, கணக்காற் குறைந்து படுவதாகலாம்; அவ்வளவுதான் : அம்மட்டேயன்றி, அதுகாரணத்தால், கண்ணியத்தாலும் அது

குறைந்து படும் என்பது ஒரு போழ்தும் பொருந்ாது. ‘நாட்டின் நலத்தைப் பேணினான்; தகைமையடைந்தான்’ —என்று சொல்லி, குடிப்பிறப்பாளன் ஒருவனுக்கு “விருத்த வேதனம்” அல்லது “மூப்புக்கடமை” யளிப்பதைக் காண்க. அதனைப் பெறுவது, ஒளிவு மறைவாக நடக்கவேண்டிய ஓர் காரியமாக்கும்; அல்லது, இயற்கை நெறியினின்று வழுவிய ஓர் காரியமாக்கும்; என்று நினைந்து அக்குடிப்பிறந்தான் சிறிதேனும் எங்காவது பம்முவானோ? மாட்டவே மாட்டான். மற்று, பஹிரங்கமாக, நேர்மையுடன் தன் சகஜ சுபாவம் வாய்ந்து, நிமிர்ந்து, சென்று அவன் அதனைப்பெற்று வருவான். இதற்கு நேர் நிகராகவே தன் கிராம நலம் காத்துத் தகைமை செறிந்தோன் என்ற காரணத்தால் அந்த கிராமத்தினின்று அளிக்கப்படும் மூப்புக் கடமையைப் பெறுவது ஓர் தொழில் மகனுக்கு, அத்துணை நேர்மையும் தன்மையும் பொருந்திய ஓர் வினையாக அமைந்திருக்கும்.” என்று அறிக. (“கலையும் தேசியதனுதாயமும்;” * என்ற எனது நுலிலுள்ள இவ்வாசகங்களை இங்கு மீண்டும் நான் உரைத்திருக்கிறேன். ஆக, வேண்டின் அந்நூலை வாசகர்மேவிக் கொள்ளுவாராக.)

மேற்கண்ட வாய்மொழியுடன் இங்கு, நான் ஒன்று மட்டும் அதிகம் கூட்டியுரைப்பேன். **வலீரியன் புலிகோலன்** என்பானைப்பற்றி, லிவி எனும் ஆசிரியன் எழுதிவைத்திருக்கிற சரமவசனங்களின் முடிவில், “உலக மக்கட்குப் பேரின்ப மூட்டிய பெரியோன்” என்று குறித்திருக்கிறான். வாழ்ந்த காலத்தும் வீய்ந்தகாலத்தும் அன்னபெற்

* இப்பொழுது, “**நித்தியானந்தம்**” என்று அந்த நூலுக்குப் பெயர் கொடுக்கப்பட் டிருக்கிறது. அதனிடத்து ௧௪௩-ாவதுாசனையில் இவ்விஷயங்கள் காணப்படும்.

றியாளனுடைய விதியொழுக்கத்தையும் வேதனத்தையும் இவ்வுரைகள் நன்கு விளக்க வல்லனவாயிருக்கின்றன. தோட்டியாகட்டும் தொண்டமான் ஆகட்டும்: அனைவருக்கும் ஒன்றுபோல, அவரவரது சமாதுகளில் அவர்தம் வாழ்வு சாவுகளைக்குறித்து இவ்வுரைகளை மகுடமாக வைப்பது பொருந்தும் என்று சொல்லும்படியிருந்தால், அத்தகைய மகுடம் பெறுவது உண்மையில் யாருக்கும் அபகீர்த்தி தரும் ஒன்றாயிராது.

ஆகவே, நான் திட நம்பிக்கை வைத்திருக்கும் பொருள்கள் இவையே என்னலாம். எனக்கு ஆற்றலும் உரமும் ஊற ஊற, அத்தனையையும் பொழிந்து, எ இப்பொருள்களின் பல்வேறாய நிலைகளையும் தன்மைகளையும் ஆராய்ந்து நிரூபணஞ்செய்து விடவேண்டும் என்பதற்குத் தான் நான் பெரிதும் ஆசை கொண்டிருக்கிறேன். இங்கு, சங்கிரகமாக மிகவும் சுருக்கி, அவற்றையெல்லாம் தொட்டு மாத்திரமே நான் காட்டியிருக்கிறேன். இவ்வண்ணம் நான் இப்பொழுது செய்து விட்டபடியால், இதோடு, எனது உட்கிடையும் நோக்கமும் என்னவாறு போகுமோ என்று பலவாறான சந்தேக விபரீதங்களைக் கிளர்த்திக்கொண்டு, வாசகர்கள் உளம் பதறுவதற்கு இருந்த காரணமெல்லாம் ஒழிந்து போகலாயிற்று. அவர்கள் தடுமாற்றந் தவிர்த்துத் தேற்றம் பெறவேண்டும் என்ற ஒரு முகாந்தரத்துக்காகவே, முதலில் இவற்றையெல்லாம் நான் தெரியப்படுத்திக் கொண்டிருக்கிறேன். இருந்தாலும், தற்பொழுதைக்கு மனத்தில் நன்றாக வாங்கித் தரித்துக் கொள்ளும்படி வாசகரை நான் கேட்டுக் கொள்ளக்கூடியதும் ஒன்று உண்டு. இந்த கிரந்தத்தின் முகமாக ஆராய்ச்சிக்கு எடுத்துக்கொள்ளப் பட்டிருக்கிற

விஷயங்களோ, மனுஷ்யஸ்வபாவத்தையும் அதை யொட்டிப் பிறக்கக்கூடியவற்றையும் போன்ற அதிநுட்பமான தாதுப் பிரகிருதிகளையாக்கும் அடக்கிக் கொண்டிருக்கின்றன. ஆதலால், இத்தகைய ஒரு சாஸ்திரத்தில் அடங்குகிற தத்துவங்களின் முடிவான மெய்ம்மைக்கு மட்டுமே ஒருவனுல் உத்தரவாதம் செய்யமுடியும். அவ்வளவே யல்லாமல், வகுத்துக்காட்டியிருக்கும் உபாயங்களால், 'ஸத்யப்பல'மாக (கைக்குமெய்யாக) அத்தனையிலும் சித்திவாய்த்திடும் என்பதற்கும் சேர்ந்து உடன் உத்தரவாதம் வகிப்பது யாருக்கும் சாத்தியமாவ தொன்றன்று. இவ்வுபாயங்களிலெல்லாம் ஸர்வசிரேஷ்டமாயிருப்பதன் சங்கதியிலுங்கூட, 'ஸத்யப்பல'மாக லபிக்கக்கூடிய சித்திகள் எப்பொழுதும் ஐயுறவுக்கே இடந்தருவனவா யிருக்கும்; ஆனுல், அதைக்கொண்டு, காலாந்தரத்தில் பெறக்கூடியதாகிற சித்தியோ எண்ணரிய மகத்துவம் பொருந்தியதாயிருக்கும்.

தென்மார்க்கு குன்று.

௧0. மே. ௧௮௬௨.

ஓம் :

# கடையருக்கும் இங்கு கடைத்தேற்றம்.

## முதல் அத்தியாயம்.

### கௌரவ மூலங்கள்.

அனாதிகாலம் தொட்டு, மனுஷ்ய கணங்களை ஆட்டி அலைத்துக்குலைத்து வந்திருக்கிற மாயா மோகங்கள் எண்ணரியன. ஏதேனும் ஒரு மோகத்தின் வாய்ப் பட்டுத் தலைவிரித் தாடாமல், எந்தப் பருவத்திலேனும் மானுடம் விட்டாத்தியாக வாழ்ந்து கண்டிருக்கிறது என்று சொல்ல முடியாது. பருவந்தோறும் வேறு வேறு மாயாமோகங்கள் மாறிமாறித் தோன்றி, அதன் மனத்திற் குடிபுகுந்து, பேய் பிடித்தா லன்னப் பிடித்துக் கொண்டு அதனை ஆட்டுவித்து வந்திருக்கின்றன. இன்னவற்றில் எல்லாம் வைத்துப் புதுமையின் விந்தையில் விஞ்சிடுவது யாது என்ற கேள்வி நிகழுமாயின், இற்றை வழக்கில் உலவிவரும் **தேசீய தனாதாயம்** எனும் ஓர் சாஸ்திர பாஷண்டமேயாகும் எனும் பதிலே, ஓர் வேளை, பிறக்கும். ஓர்வேளை - தான்; திட்டமாக இல்லை. ஆனால் வேறு ஒரு அம்சத்தால் இந்த சாஸ்திரத்திற்கு யாராலும் மறுக்க முடியாத ஒரு கீர்த்தி பொருந்தி யிருக்கிறது. அதாவது, அதனைக் கடைப்பிடித்து ஒழுகி வருவாருக்கு அபகீர்த்தி வாங்கித் தருவதில் அதனை வெல்லவல்லதாக யாதொன்றும் இனித் தோன்ற முடியாது என்பதிலென்க.

இந்த விஷயத்தில் இதற்கே தான் மகுடம் புனையவேண்டும். இத்தனை அபார யோக்கியதை நிச்சயமாக வேறு எதற்கும் வாய்க்க முடியாது என்று நாம் சொல்லிவிடலாம். இவ்வருமை பெருமைகளைக் கொண்ட இந்த தேசீய தனுதாய சாஸ்திரத்தின் பிராணுதாரம் யாது? அதற்கு தர்மபீஜமாக உயிர்நிலையில் அமைவது யாது? என்பதை அடியில் வரும் உரைகளால் குறிக்கலாம். ஒரு ஸமாஜம் பற்றியொழுகுதற் பொருட்டாக ஒரு அறத்தாற்றை, வினைவழியை அதற்கு வகுத்துவிடவேண்டும்; வகுக்கப்படும் அவ்வினை அறத்தின் வாயிலாக அதனை வந்தடையும் நலங்கள், யாவினும் உயரியவா யிருத்தல்வேண்டும். என்ருலும், அதன் அந்தராத்மாவிலே இழைந்து தவழும் ஸாங்கத்ய அனுராகங்களை முற்றிலும் திக்காரம் செய்துவிட்டே அத்தகைய வினையறத்தை வகுத்துக்கொடுத்துவிடலாம் என்க. இத்துணிபின் பெருமையை என்னென்பது?

இல்லையா! ரசவாதம், ஜோசியம், மோடிவித்தை போன்ற வகையினங்கள். இவற்றையும் பிடித்துக்கொண்டு ஒரோ காலத்தில் மகாஜனம் கூத்தாடி யிருக்கிறது. வெள்ளைப்புளுகைப் பச்சையாகச் சொல்லிக்கொண்டா இவை அன்று திரிந்தன? இல்லை; இல்லை. ஓர் தர்மத்தை, ஓர் நியாயத்தை மூலாதாரமாகக் கொண்டிருப்பதாகத் தான் அவையும் அன்று சொல்லிக்கொண் டிருந்தன. அந்த தர்மமும் அந்த நியாயமும் வெறும் போலிகளே என்று பின்னர் வெட்ட வெளிச்சமாகிவிட்டது. அவற்றிற்குப் போல, பிரஸ்தாப சாஸ்திரத்திற்கும் ஓர் நியாயப்போலி அகப்படாது போகவில்லை. அதற்கு மூலதாரத்தில் பொலிந்து விளங்கும் நியாயப்போலியின் சாராம்சம் அடியில் வருவதாகும். அந்நூலோரே கூறுகின்ருர்கள்: "ஸாங்

கத்ய அனுராகங்கள் எனப்படுவன மானுடப்பிறவியில் உடன் பிறந்து பிரியாது சேர்ந்து இயங்கிவரும் பிரகிருதிக ளாகா; மற்று, அவை நிமித்த மாத்திரங்களே யாவன; விபரீதம் விளைக்கவே பிறந்திருப்பன. ஆனால், லோபமும் ஆருருக்ஷையும் - பேராசையும் பெருமை வாழ்வில் விழை வும் - தாம், வியவஸ்தை குன்றுது நிரந்தரமாக நிற்கவல் லன. ஆக, நிரந்தரமல்லாத ஸாந்தரங்களான பிரகிருதி களைக் கழித்துவிடுவோம். விட, கேவலம் ஓர் பேராசைப் பொறியாக மாத்திரமே ஒரு மானுடஜீவன் சேஷிப்பன் என்று நாம் தேறலாம். அப்பால், பொருளீட்டத்தில் ஒரு வற்கு உத்தமமான வெற்றி வாய்க்க வேண்டுமானுல், 'தொழில்' 'கொள்வினை' 'கொடுப்பினை' முதலிய துறை களுக்கு என்ன என்ன விதிகளையும் சட்ட திட்டங்களையும் நாம் வரையறுத்து வைக்கவேண்டும் என்று சாவதான மாகப் பரிசீலனை செய்து கொண்டிருக்கலாம். ஒரு தீர்வை யாக அவற்றுக்கு வேண்டிய சட்டதிட்டங்களை நாம் வகுத்து வரம்புகட்டிவிட வேண்டும். அதன் பிறகு நமக்கு யாதொரு வேலையும் அங்கு இராது. ஆக, இத்துறைகளின் வரம்புகளுக்குள்ளே, ஸாங்கத்ய அனுராகங்களாகிற விப ரீத பிரகிருதிகளைப் புகவிடுவதற்கு அத்துறைகளில் இறங் கும் ஒவ்வொருவனும் தனிமையில் பொறுப்பேற்றுக் கொள்ளுவான். அந்த பிரகிருதி விபரீதங்களுக்கு எது வரையிலும் இடங்கொடுக்கலாம் என்று அவனவனும் மனங் கொள்ளுகிறுனே, அவ்வெல்லை வரையிலும் தாராளமாக அவற்றுக்கு 'மணியம்' கொடுத்துக் கொள்ளலாம். ஆனால், அதோடு சேர்த்து, அந்த பிரகிருதி விபரீதங்களுக்குத் தன் பொறுப்பாய்க் கொடுத்த அம்'மணியம்' காரணமாக நேரக் கூடிய அனர்த்தங்களை அவனே நிர்ணயித்துக் கொள்ளுவ

துடன் அவை அத்தனையையும் அவனே வாய் பேசாமல் தலைமேற் போட்டுக் கொள்ளத் தயாராகவும் இருக்க வேண்டும். அந்த இடத்தில் பிறர் தலைமீது பழியைச் சுமத்திவிட அவன் நாடக்கூடாது.''—என்று.

மேலே கண்ட இந்த தத்துவ நிரூபண முறை நிராட்சேபமானதும் வெற்றி தருவதுமாக இருந்துவிடும், இந்த
உ ஆட்சேபம் ஒன்று மட்டும் அதற்குப் பொருந்தியிராத விஷயத்தில். அதாவது, மேற்சொன்னவாறு செய்யும் தத்துவ ஆராய்ச்சியில், பின்னுடிப் பிரேரேபிக்க வைத்திருக்கிற நைமித்திக ஸாந்தர சக்திகள், முதலிடத்து வைத்துக் கணக்குப் பார்க்கப்படும் நிரந்தர சக்திகளுக்கு இனத்தால் ஒத்தவையா யிருந்திடுவதாயின் என்க. அப்பொழுது, அந்த முறை, யாதொரு தோஷத்துக்கும் இடம் வையாமல் நியாயப் பிரமாணங்களை முழுமையும் அனுசரித்தாகப் போய்விடும். இப்பொழுது ஒரு திருஷ்டாந்தத்தைஎடுத்துக் கொள்ளலாம். ஒரு வஸ்து சலனத்தில் நிகழ்கிறது. அதன் பால்சலனத்தைத் தூண்டி, இயக்குவிக்கும் சக்திகள்: நிரந்தரமாகவும் ஸாந்தரமாகவும் இருக்கின்றன. என, அந்தப் பொருளுடைய சலன கதியை ஆராய்ந்து நிர்ணயம் நாம் செய்யவேண்டும். அதற்கு நிரந்தர சக்தியைமட்டும் நாம் முதலில் வைத்துக் கொள்ளுவோம். அந்த ஒரு சக்திமட்டுமே தனியாக நின்று தாக்கி வருவதாயின், அப்பொழுது அந்த வஸ்துவின் சலனகதி என்ன நிலையில் இருந்திருக்கும் என்று கணக்குத் தீர்ந்து வைத்துக்கொள்ளுவோம். அதற்கப்புறம், பேதஹேதுவைப் பிரேரேபித்து, முடிவாகப் பேராயத்தைத் தெளிந்துகொள்ளுவோம். இதுதான் நாடோடியாக எங்கும் பழக்கத்தில் இருந்துவருகிற சம்பிரதாயம். ஆனல், பிரகிருதத்தில், விசாரணையில் இருப்ப

தாய, சமுதாயப் பிரசினையிலேயோ என்றால், பிரேரேபிப் பதற்கு வைத்துக்கொண்டிருக்கிற விபரீத பிரகிருதிகள், நிரந்தர பிரகிருதிகளுக்கு இனவொப்புக் கொண்டவை யாக இருக்கவில்லை; மற்று, பிரேரேபித்த மாத்திரத்தில் ஆராயும் ஜீவனது உயிர்ச்சாரத்தை அவை முழுமையும் திரித்துவிடுகின்றன. கணித நியாயப் பிரகாரமாகச் சேட் டிப்பனவல்ல அவை; மற்று, ரசாயன வழியில் சேட்டித்து வரும் பண்பின என்க. ஆதலால், அம்முறையாக உட் புகுந்து நினைவரிய புதுமைகளை அவை புரிந்துவிட்டு, முன் னுகத் தேடி வைத்து நாம் கெட்டியாகப் பிடித்துக்கொண் டிருந்த பூர்வக்ஞானத்தை யெல்லாம், ஒரு அடியில் அவை நிஷ்ப்பலமாக்கித் தீர்த்துவிடுகின்றன. சொயமான க்ஷாரகன் (Nitrogen) என்னும் வாயுவை வைத்து விதி பூர்வ மாக நாம் பரீட்சைகள் செய்துகொண்டு வருகிறோம். செய்து பார்த்துவிட்டு, நமது பிடிக்குள் முற்றும் அகப்பட் டுப்போன ஓர் சங்கதிதான் அது என்றும், அதன் விஷயத் தில் நாம் பூரண பாண்டித்யம் அடைந்துவிட்டோம் என் றும் நம்பி ஏமாப்புற்றிருக்கிறோம். ஆனால், இப்பொழுது நாம் கையாள வேண்டியிருப்பது, அதன் ஹரிதானகம்— (Chloride) ஆக இருக்கிறது. என்றால், இதையும் நாம் ஏற்கெனவே திடம் செய்து வைத்திருக்கிற பந்தாவில் தொடுகிறோம்: அவ்வளவுதான்! முகட்டைப் பிய்த்துக் கொண்டு நம்மையும் நமது கைக்கருவிகளையும் ஒன்று சேர்த்து, அது ஆகாசத்துக்கனுப்பி வைத்துவிடுகிறது. நமது பாண்டித்யத்துக்கு எத்துணை பொருத்தமான முடிவு! (வெடி மருந்து இவ்விதமாகவே செய்யப்படுகிறது.)

காண்மின்! அந்நூல் வைத்துக்கொண்டிருக்கும் ஸங் கேதங்கள் கேள்விக்கு இடந்தராமல் ஏற்றுக்கொள்ளக்

ந கூடியவாக இருந்தால், அந்த சாஸ்திரத்தினிடமாக ஆட்சேபமோ, அல்லது சமுசயமோ என் பக்கமாகத் தோன்றுது. அவ் வண்ணம் இருந்துவிட்டால் ஒரு பொருளென மதியாமல் அப்படியே அதைத் தள்ளிவிட்டு விடுவேன். எதைப்போலவென்ருல், மனிதனுக்குப் பிறவியிலேயே எலும்புக்கூடே இல்லையென்று வைத்துக் கொண்டு தேகப்பயிற்சியின் இயலை வகுக்க இறங்கிய ஒருவனது நூலைப்போல வென்க. அங்ஙனம் ஒரு நூலை அவன் எழுதினுல், அவனுடன்கூட நான் தகராறு செய்து கொண்டு நிற்கமாட்டேன். அந்த நூலிடத்தில் திருஷ்டியே வையாமல் உதாசினனுக நான் வாளாவிருந்து விடுவேன்; அவ்வளவுதான். இருந்தாலும், அந்த வியாயாம நூலின் கற்பனையை ஒரு மட்டுக்கு நிலைபெறுவதாகச் சுவீகரித்துக் கொள்ளுவதாயிருந்தால், அதனுல் எத்தனை அனுகூலங்கள் சித்திக்கும் என்று எடுத்து விரிக்கலாம். மாணவர்களை அப்பளத்துண்டைகளைப்போல் உருட்டுவதோ, அல்லது துவைத்து விசிறிடச் செய்வதோ, அல்லது அடைபிற் கோத்துக் கம்பியிழுத்து நீட்டுவதோ, வாக நினைத்த வண்ணமெல்லாம் அவர்களைப் பிடித்து வைத்துவிடலாம். இப்படியெல்லாம் செய்யும்பொழுது, தோன்றக்கூடும் அனுகூலங்களையெல்லாம் கணக்குப்போட்டு அறுதிசெய்து காட்டிவிடக்கூடும். அதன்மேல், அவரவரது மனம்போல எலும்புகளை உள்ளே திணித்துக்கொண்டு, அதாதனுல் அவரவர் உடற்கட்டுக்கு விளையக்கூடிய பிரதிகூலங்களையெல்லாம் அவ்வம்மாணவரே அனுபவத்தால் நேரில் கண்டு தேறிக்கொள்ளட்டும் என்று விட்டுவிடலாம். இப்படி அந்த சாஸ்திரம் செய்யுமானுல், அதன் யுக்தி மெச்சற்குரியதாகவும், அதன் துணிந்த முடிபுகள் மெய்ம்மை

சான்றவாகவும் விளங்கும். ஆனால், இவ் வருமந்த சாஸ்திரத்துக்கு நடுவிலே, ஒரு ஒச்சம் மாத்திரமே இருக்கும். அதாவது, அதனால், ஆம் காரியம் மட்டும் ஒன்றுமிராது; பிரயோக யோக்கியதை மட்டும் அதற்குச் சற்றேனும் பொருந்தியிராது என்ற ஒரு ஒச்சம்தன் அதற்குப் பொருந்தியிருக்கும். எடைக்கெடை, இதற்குள்ள அத்தனை யோக்கியதைதான் பெற்றிருக்கிறது இற்றை வழக்கில் உலவிவரும் 'தேசீய தனுதாய வித்தை'யும். ஆனால், இது ஆசிரயிக்கிற மித்தை மானுடனுக்கு எலும்பே கிடையாது எனும் கற்பனையன்று; மற்று அதற்கு நேர்விரோதமான ஒன்று. முழுக்க முழுக்க அஸ்திப் பிண்டமாகவே அவன் இருக்கப்பட்டவன் என்று ஒரு தலையாச் சாதித்து அது தன் கோட்டைகளைக் கட்டிவருகிறது. அது ஆன்மா போன்ற வேறு எப்பொருளுக்கும் அவனிடத்தில் இடமில்லை என்னும். இன்ன தன்மைத்தாய ஒரு நிராத்ம சித்தாந்தத்தை பிராணுதாரத்தில் நிறுவிக்கொண்டு, மக்களின் ஊர்த்துவ கதிக்கான ஓர் ஆஸவதரிசனத்தை அது நிர்மாணித்துத் தரும். அதன் போக்குப்படி, எலும்புகள் தொடுத்த ஒரு பாவை எனும்படியான நிலையில் மாத்திரமே மனிதன் அந்தியம் வரைக்கும் திகழ்ந்து வருவானாயின், அன்ன வெலும்புகளால் என்னவெல்லாம் அனுகூலங்கள் சித்திக்கலாம் என்று அது விரிவாக விளக்கிக் காட்டும். தனது துணிபை மெய்ப்பித்து நிதர்சனமாகப் பரீட்சை காட்டுவதாகி, கபாலத்தையும் ஏனைய ஸ்திகளையும் தொடுத்துப் பின்னிப் பூட்டி விந்தை விந்தையான பல கணித சக்கரங்களை அது வரைந்து படமும் போட்டுக் காட்டிவிடும். இத்தனை நலங்களையும் ஒருங்கே பொழியவல்ல சுத்த நிர்ஜ ஜடமான அந்த சட்டகங்களுக்குள்ளே, சேதனம் எனும்

ஒன்று நுழைந்து புரியும் விபரீதங்களை யெல்லாம் துலக்கிக் கண்டுபிடித்துத் தந்துவிட்டு அது தன் பிரதாபங்களைப் பாராட்டி வெற்றி முழங்கிக்கொள்ளும். அதன் வெற்றியே வெற்றி! இப்பெற்றித்தாய தத்துவ தரிசனத்தின் மெய்ம்மைச் சால்பை நான் மறுக்கவில்லை. இந்தப் பூதலம் தற்காலம் இயங்கி வருகிற தோரணையில் ஒரு போழ்தும் இது வினைமாட்சிக்கு உரியதாகப் பலிக்காது என்றுமட்டும்தான் நான் கட்சி செய்கிறேன்.

சமீபத்தில், நமது தொழில் மக்கள் வேலை மறியற் போட்டார்கள். அதன் காரணமாகப் புகைந்து மண்டிய திகைப்பில், மேற்சொன்ன 'வினைமாட்சியுருமை'
௪ என்ற அந்த ஒச்சம் ஒரு புதுமையான வழியில் மலர்ந்து வெடித்துக் காட்டியது. இந்தத் தறுவாயில் ஒரு வழக்குப் பிறந்திருக்கிறது. அதுவும், தேசிய தனுதாயம் என்று பேர் சொல்லிக்கொண்டு புறப்படும் ஒன்று, எல்லாவற்றுக்கும் முந்தி நமக்குத் தீர்த்து வைத்திருக்கவேண்டிய ஜீவாதாரமான வழக்காகும். அதாவது, ஏவிடும் உடையானுக்கும்—நியாமகனுக்கும், ஏவல் ஏற்றிடும் ஏவலாளனுக்கும்—நியோஜிதனுக்கும், இடையே நிகழ்ந்து வரவேண்டிய உறவுமுறைகளைத் தொட்டதா மென்க. இத் தொடர்பில் நேரும் இவ்வழக்கு, சிக்கலுக்கும் பிணக்குக்கும் சிறிதும் இடம் வையாமல், மிக்க சுலபமானதாக யதாக்கிரமமான பாங்கினில் உடம்பாட்டு வகையாலேயே கிளர்ந்து காண்கிறது. இதன் தன்மையைக் கண்டார் யாரும் எவ்வித சங்கடமுமில்லாமல், அதிசுலபமாகத் தீர்த்து வைக்கக்கூடிய வொன்றாகத்தானே இருக்கிறது என்பார்களேயல்லாமல் அந்நியமாகச் சொல்லமாட்டார்கள். என்றாலும், இதனை நடுக்காலாக ஊன்றிக்கொண்டு ஒரு

பெரிய தேரி (சுழற்காற்று) கிளம்பி எல்லாவற்றையும் வாரி வீசிக்கொண்டிருக்கிறது; இதுவே ஒரு பெருஞ் சூறையாக வந்து தாக்கி, ஓர் கையில் படைபடையாக எண்ணற்ற மக்களும், அடுத்த கையில் மலைமலையாகக் குவிந்த திரவியங்களும், நிலைபேர்ந்து அந்தரத்தில் ஊசலாடிக்கொண்டிருக்கும்படி தொங்கவைத்துவிட்டது. இத்தகைய ஓர் மகத்தான விப்லவத்தில், ஓர் கொடுமையான தறிவாயில், நமது தேசிய தனதாயகர்கள் என் செய்கின்றனர்? கையைப் பிசைந்து பறக்கப்பறக்க விழிக்கின்றனர்; இவ்வளவேயல்லது ஒரு துளியாவது துணை செய்து தரலாமென்று ஒரு அடியையேனும் அவர் முன்னல் எடுத்துவைக்கின்றாரிலர். ஏன்? இந்தக் கண்டாந்தத்திலே வாய்திறந்து சொல்ல, ஒரு வார்த்தைக்குக்கூட அவர்க்குப் பஞ்சமாகப் போய்விட்டது. 'உற்ற தடுமாற்றந் தவிர்க்கவல்ல மருந்து ஈதாகும்' என்று சொல்லி, போரிற்பிணைந்து முண்டி நிற்கும் இருதிறத்தினருக்கும் ஒருங்கே உள்ளஞ் சமைந்து தேற்றமும் நிறைவும் தோன்றக்கூடிய வண்ணத்தில் ஓர் தீர்வையையேனும், அன்னவர்க்கு அளிக்க அவரால் முடிகின்றதில்லை. காரியானுபவ சோதனையில் தாழாது பரீட்சை கொடுக்கவல்லதாக அன்னவரால் கண்டு தரக்கூடிய தீர்வை ஒன்றுனும் இல்லை. ஆகவே, இவ்வழக்கிலே, தாம் பிடித்த வழியேதான் செல்லுவோம் என்று ஒருதலையாச் சாதிக்கின்றனர் உடையவர்கள்; சிறிதுந் தாழாது, அத்தனை காழ்ப்புக் கொண்டு, 'நேர் எதிரான வழியேதான் சென்று வருவோம்' என்று ஊழியர்கள் 'முரண்டு' செய்வர். அன்னவர் இருவரையும் ஒத்து இணங்கிப்போம்படி செய்வதற்கு வேண்டிய ஆற்றல் சமைந்ததான ஒருராஜ தந்திரம் இதுவரைப் பிறந்ததுமில்லை; இனிப் பிறக்கப் போவதுமில்லை.

இவ்வாறு செய்வது எந்த ராஜதந்திரத்தினுடைய கைக்குள்ளும் அண்டி அடைபடக்கூடிய ஓர் காரியமன்று.

அதற்கு முடிந்து விட்டதானால், அப்பொழுது அதனைப் புதுமை என்றே சொல்லவேண்டும். ஏனென்றால்,மனி
௫ தரைப் படைத்து இங்கு அனுப்பியவர் யாரானும் ஆகட்டும். அவ்வாறு படைத்தவர், "உங்களை ஒன்றாக இணக்குவிப்பதன்பொருட்டு விக்ஞான சாஸ்திரம் - அது எவ்வகையினதாகவானும் ஆகட்டும் - ஒன்றன் காலைப்பிடித்துக் கடைத்தேறுங்கள்" என்று சொல்லி மனிதரை இங்கு நேர்ந்து அனுப்பியிருக்கவில்லை யென்பது மட்டும் உறுதி. உடையவருடைய யோக க்ஷேமங்கள் ஊழியருடையவற்றுக்கு நேர்முரண்படுவன என்று கட்சி பேசுவான் ஒருவன்; முரண்படவே செய்யாமல், ஒத்து இசைவனவென்று கட்சிப்பிரதி செய்வான் அடுத்தவன். இவ்விரண்டு கட்சிகளில் யாதானும் ஒன்றில் தலையிட்டுக்கொண்டு, தம் சொல்வன்மையை விழலுக்கிரைத்து வருவார் பலராவர். "யோகக்ஷேமங்களும் 'லாபரதி'களும் முரண்படுகிற காரணம் ஒன்று மாத்திரங்கொண்டு, அவற்றை அவலம்பனம் செய்யும் புருஷர்களும் தம்முள் முரண்பட்டுக் குடுமியைப் பிய்த்துக்கொண் டிருப்பர்" என்ற இந்த சித்தாந்தத்தை ஊழ்வினையைப் போன்று தவிர்க்கமுடியாது நேர்வதொன்றும் எனவோ, அல்லது ஸமஸ்தமான காலதேச வர்த்தமானாதிகளுக்கும் ஒன்றுபோலப் பொருந்தி நிகழக்கூடிய 'பரமைகாந்த' விதியாகும் எனவோ நாம் தீர்மானம் செய்துவிடப்படாது; என்ற இந்தச்செய்தி நமது 'மொழிமல்லர்'களுடைய மூளைக்கு எட்டுகிறதில்லை என்றே எமக்குத் தோன்றுகிறது. இப்பொழுது இதனை நோக்குவோம். பானையிலோ ஒரு குத்துச்சோறுதான் இருக்கிறது.

அதற்காக ஏங்கிப்போய், பட்டினி கனன்றுமூண்டெரிய வாடி வதங்கிக் காத்து நிற்பார் தாயும் குழந்தைகளும் ஆக ஒரே வீட்டில் இருக்கிருர்கள் என்று நாம் பாவித்துக் கொள்ளுவோம். இந்த அவஸ்தையில், குழந்தைகளுடைய யோகக்ஷேமமும், தாயுடைய யோகக்ஷேமமும் தன்மையால் ஒப்புக்கொண்டன வாயிரா. அச்சோற்றை எடுத்துத் தாய் விழுங்கிவிடுவா ளாயின், சேய்களின் அபேட்சை பூர்த்தியாகாமல் அப்படியே நின்றுவிடும். அன்றிச் சேய்களே அதனை உண்பதாயின், பட்டப் பட்டினியே தாய் வேலைக்களத்துக்குச் செல்லவேண்டி யிருக்கும். என்ருல், அவரது யோக க்ஷேமங்களுக்கு இடையே தோன்றிடும் இம் முரண்பாடு காரணமாக, அவற்றை ஆசிரயிப்பாருக்கு இடையேயும் 'பிணக்குப்போர்' மூண்டுவிடும் என்ருவது, அந்த ஒரு உருண்டைச் சோற்றுக்காக அவர்கள் குடுமியைப் பிடித்துக்கொண் டிருப்பர் என்ருவது ஸ்வதஸித்தமான விதியாகச் சாற்றிடவொண்ணுது. அதுபோலவே, அவ் வீட்டிலுள்ளாருள் வலிமையான் மிக்கவள் தாயே யாதல் பற்றி, மற்றவரிடமிருந்து அச்சோற்றைப் பிடுங்கிப்பறித்துக்கொண்டு அவளே தன் வாய்க்குள் போட்டுக் கொண்டுவிடுவள் என்றும் உறுதியாகத் துணிந்துவிட முடியாது. ஒருவேளை இதனை அசாமானியமான வழக்காகக் கொள்ளலாம். என்ருலும், சாமானியமானதாகக் கருதப் படக்கூடிய வேறு எந்த வழக்கை எடுத்துக் கொண்டாலும் சரி; அவ் வழக்காடும் மாந்தருக்கு இடையே நிகழ்ந்திடும் உறவுமுறைகள் வேறு என்ன பண்பில் அமைந்திருந்தாலும் சரியே; தம்முடைய யோக க்ஷேமங்கள் வேறுபடுகின்றன என்ற காரணத்தினுல், பகைமூண்டு ஒருவரையொருவர் வெஞ்சினங் கொண்டு நோக்கி வருவர் என்பதையாவது நாடிய நலம் எய்தும் பொருட்டாக ஒருவர்பால்

மற்றவர் கொடுமையோ வஞ்சகமோ புரிவர் என்றுவது நிச்சந்தேகமாக நாம் 'நிஷ்கரிஷை' செய்து வைத்துவிட முடியாது.

'நிஷ்கரிஷை'யே செய்ய முடிகிறதாக நாம் வைத்துக் கொள்ளுவோம். ஆயின், அதைப் பின்சார்ந்து, இதனையும் நாம் உறுதி செய்துவிடலாம். எத்தகைய தர்மா
௬ வேசம் உந்தியதால் பெருச்சாளிகளும் 'பூரப்பன்றி'களும் தமது வாழ்க்கையை நடாத்தி வருகின்றன? அதற்கு இம்மிகூட மேற்போன தகைமை பெற்றதாயிராது மனிதனது வாழ்க்கையை நடைபெறுத்தும் தர்மாவேசமும் என்ற, இந்த நிச்சயத்தையும் நாம் வரையறுத்துக் கொள்ளலாம். அவ்வாறு கருதிக்கொள்ளுவது நமக்கு நிரம்ப சௌகரியமாயிருக்கும் தான்: ஆட்சேபமில்லை. அதைப் போலவே, அது அத்தனை தர்ம நியாயம் பொருந்தியதாகவும் இருக்குமா வென்னும் ஓர் ஐயவினு எஞ்சி நிற்கும். அவ் வையத்தையும் நீக்கி, உடம்பாட்டு வகையால் 'அது தர்ம நியாயமாகவும் இருக்கும்' என்று வைத்துக்கொண்டாலும் கூட அதோடு தொல்லை முற்றுந் தீர்ந்துபோகிறதாயில்லை. ஏனென்றால், அப்பொழுதும் இந்த வழக்கை நமது பட்சமாகத் தீர்த்து வைத்துக்கொள்ளும் பொருட்டு வேண்டிய சான்றுகளைத் தரவல்ல தர்க்க நியாயப் பிரமாணங்களை ஆராயுமிடத்து நமக்குத் திகைப்புத் தோன்றிடும். ஒரு தீர்வையாக, உடையவனுடைய யோக க்ஷேமங்களுக்கு ஊழியரது யோக க்ஷேமங்கள் ஒப்புமை கொண்டு இணங்குவன வென்றோ, முரண்கொண்டு பிணங்குவன வென்றோ ஒருதலைப்பில்நின்று நம்மால் நியாய பூர்வகமாக சித்தாந்தஞ் செய்து வைக்க முடியாது. வாய்த்திடும் சூழல்களுக்குப் பொருந்திடும் தன்மைகளுக்கு ஏற்ப, இரண்டு வகையான தன்மைகளையும் அவ்விருவரது யோக க்ஷேமங்களும் மாறி

மாறி, நிலையில்லாது பூண்டுகொள்ளும். தொட்ட பணி பழுதுபடாமற் சீராக முடித்துத் தரப்படவேண்டும்; அதற்குரிய நியாயமான விலையும் வாங்கப்பட வேண்டும்; என்ற இந்த இரண்டு சங்கதிகளிலும் இருவகையினருடைய யோக க்ஷேமங்களும் எப்பொழுதும் ஒப்புமைகொண்டவாக இருக்கும். ஆனல், எஞ்சிய லாபத்தைப் பங்கு வைத்திடும்போது, ஒருவனுக்கு ஆதாயம் ஆவது, மற்றவனுக்கு ஆதாயமாகவோ அல்லது சேதாரமாகவோ சமயத்துக்கேற்றுற்போல மாறி மாறி யமைந்துகொள்ளலாம். நோய்வாய்ப்பட்டு நலியும் நிலையிலோ, குன்றி மனம் சாம்பும் புழுக்கத்திலோ தன் கீழ் உள்ள தொழிலாளரை நிறுத்திவைக்கும் முதலாளி தனது யோக க்ஷேமங்களைப் பூர்த்தி செய்துகொண்டவனுக மாட்டான். அப்படியே, பிரவிருத்தியை விஸ்தரித்துப் பெருக்குதற்கோ, அல்லது இடர்க்கண் ணழியாது உரம் ஊன்றி உதாரம் தவழும் வழியில் நடத்திக்கொண்டு வருதற்கோ இயலாது போம்படி லாபத்தில் அத்துணை அற்பமான பாகத்தை மட்டுமே உடையவனுக்குச் சேரும்படி விடுவதனல், தொழிலாளர்களும் தமது யோக க்ஷேமங்களை நிறைசெலுத்திக் கொண்டவராகார் என்பதும் நிச்சயந்தான். இடைநடுவே முறிந்து நின்றுவிடாமற்படி யந்திரங்களை உடனுக்குடனே பழுது பார்த்து, என்றைக்கும் தட்டில்லாதபடி 'ரோதை ஓட்டி' வருவதற்கே, முதலாயத்துக்குச் சாத்தியப்படாதிருக்கும் தருணம்பார்த்து, 'யஜமானன் சிரித்தபோது சம்பளம் கூட்டக் கேட்பது' போல, உலையூதி தன் சம்பளத்தை அதிகப்படுத்தித் தரவேண்டுமென்று கேட்பது அடாது.

இவருடைய யோக க்ஷேமங்கள் அந்நியோந்நியமாக இணைபிரியாது இயங்குவன. அவற்றின் தோற்ற நிகழ்ச்சி

எ களில் வியாபகம்பெற்று ஆட்டுவித்து வரக்கூடிய சந்தர்ப்ப விசேஷங்கள் எண்ணரிய வகைகளால் வேறுபடுவனவா யிருக்கும். ஆதலால், மாறுபடும் அத்தனை காலங்களினூடும், தனக்கு வரக்கூடிய லாப ஆதாயங்கள் சற்றும் குறைந்துவிடப்படாது என்பதில் மட்டும் எப்பொழுதும் குறி வைத்திருந்து,அந்த நோக்கத்தை ஈடேற்றித்தரவல்லதாக இருக்கும்படி வினை விதிகளை வகுத்து அறுதிசெய்து வைத்துக் கொள்ளுவதற்கு ஒரு முதலாளி எடுக்கும் பிரயாசையெல்லாம் முற்றும் வியர்த்தமே யாம்; ஏன்? வியர்த்தமாகப் போவதற்கென்றே அவை பிறந்திருக்கின்றன வென்றுகூடச் சொல்லிவிடலாம். ஏனென்றால், "ஸமயோசித லாபசேஷங்களை முன்னிட்டு உமது வினைநெறிகளைச் சமைத்துப் பயின்று வரக்கடவீர்" என்னும் ஆணை தந்து கர்த்தன் மானிடரை இங்குப் படைத்து அனுப்பியிருக்கவில்லை. மற்று, "தர்ம நியாய சேஷங்களைச் சீர்தூக்கி உமது வினைகளை ஆற்றிவரக்கடவீர்" என்று வாழ்த்தியே அவன் மானிடரை அனுப்பி வைத்திருக்கிறான். ஆதலால், 'ஸமயோசித சேஷங்கள்' என்பன என்றென்றைக்கும் பயன் ஈனுப்பாழ் மலடாகவே இருந்துவர வேண்டுமென்று அவன் கற்பித்து வைத்துவிட்டான். 'இதோ, இந்த நெறிபற்றி நான் வாழ்கின்றேன்; அதனால், காலாந்தரத்தில் எனக்கேயோ, அல்லது ஏனையருக்கேயோ இத்தனை பயன்கள் தாம் மொத்தத்தில் உதிக்கக்கூடும்' என்று, முன் கூட்டியே கணக்கறிந்து கொண்டு பிறந்தான் இவ்வுலகில் யாருமிலன். ஒருநெறியின் வாய்ப்பட்ட நடையின் காரணமாக அந்தியம் வரைக்கும் விளையக்கூடிய பயன்களைத் துல்லியமாகக் கணக்குப்பார்த்தல் யாருக்கும் முடியவும் முடியாது என்க. ஆனால்; 'அறவினை இன்ன, அல்வினை இன்ன'வென்று, தெரிந்து கொள்ளுவது உலகில்

உள்ளார் அனைவருக்கும் எளிதில் கைகூடும் ஒருகாரியமாகும்; நம்முள் பெரும்பாலோர் அவற்றைத் தெரிந்தும் வைத்துக்கொண் டிருக்கிறோம். அதுபோலவே, எய்தற்கு இங்கு கூடுகிற பயப்பேறுகள் அனைத்தினும் வைத்து, தர்ம நியாயத்தின் வாயிலாகப் பிறக்கக்கூடிய பயப்பேறுகளைக் கொண்டு அடையும் நலங்கள் தாம், கடைசிக்கந்தாயம் வரையும், இங்கு அடையப்படுகிற சுபங்கள் அத்தனையிலும் உயர்ந்தவாக யிருக்கும் என்றும் சகலரும் சுலபமாகத் தெரிந்து கொள்ளலாம். ஆனால், ஒருவனுக்கு வாய்க்கக் கூடிய ஸமஸ்தமான பலசித்திகளிலும் வைத்து ஸர்வோத்கிருஷ்டமாவது யாது என்றோ, அல்லது அதனை எவ்வழி பற்றினால் எய்தி விடலாம் என்றோ அறிவது புருஷயத்தனத்துக் கெட்டக்கூடிய தொன்று இல்லை.

மேலே, 'தர்ம நியாய (நீதி) சேஷங்கள்' என்று நான் சொல்லி யிருக்கிறேன். அதனுள்ளே 'அனுராகம்' (உடன் அன்பு) என்பதும் புதை பொருளாக அடங்கியிருக்கிறது என அறியற்பாலதாம். அனுராகம்; அதாவது:—ஒரு மனுஷ்யன் இன்னொரு மனுஷ்யன் பால் வைக்கக் கடமைப் பட்டிருக்கிற கேண்மை, அல்லது மைத்ரீபாவம் என்று கொள்க. ஆராயுமிடத்து, நியாமகனுக்கும் நியோஜிதனுக்கும் இடையே நிகழ்கிற உறவுமுறைகள் எல்லாம், அவ்விருவருமடையவல்ல 'ஸத்தம'ங்களான யோகக்ஷேமங்கள் எல்லாம், முடிவில், இவ்வனுராகங்களையே முழுமையும் ஆசிரயித்து நிலை பெறுவனவாகச் சமைந்திடும்.

அ உடையவனுக்கும் உழைவலனுக்கும் இடையே நிகழும் பொருத்தங்களை விளக்குவதற்கு, யாதினும் சிறப்பேறியதும் ஒள்ளியதுமான திருஷ்டாந்தத்தை, நாம் வீட்டு வேலைக்காரரது வியவகாரத்தினில் காணலாம்.

இந்த வியவகாரம் தொட்டு, அடியில் வருமாறு நாம் பாவித்துக் கொள்ளுவோம். தன் வீட்டு வேலைகளைச் செய்து தருவதற்கு வேலைக்காரர்கள் அவசியமாக இருக்கிறார்கள் என்று ஓர் மனைக்கிழவனது மனத்தில் தென்படுகிறது. ஆகவே, அவன் வேலைக்காரர்களை வேலைக்கு அமர்த்திக் கொள்ளுகிறான். அவரை ஏவலுடைமை கொள்ளுகையில், தனக்குத் திராணியிருக்கிற மட்டுக்கும் அவர்களை வேலைவாங்கி 'சக்கைசாராகப்' பிழிந்தெடுத்துவிடவேண்டும் என்ற அந்த ஒரு காரியத்தில் மட்டும் தான் முழுக் கண்ணையும் கருத்தையும் அவன் வைத்திருப்பன். மனங்கொண்ட மட்டுக்கும் அவன் பிழிந்து எடுக்கிற அத்தனை வேலைகளையும் செய்து கொடுத்துவிட்டு, தான் மனம் இசைந்து கொடுக்கிற கூலியை அப்படியே அவ்வூழியர்கள் வாய்பேசாது வாங்கிக் கொண்டு போகவேண்டும் என்பதையும் அந்த மனைக்கிழவன் வலியுறுத்தி வருவான். இமையடிக்கும் நேரத்துக்குத் தான் என்றாலும் அவர்கள் வெறிதே நின்று கழிக்கச் சகிக்கமாட்டான். ஆனால், தான் அவர்களுக்குக் கொடுக்கப்போகிற உண்டியோ மிகவும் பஞ்சையானதாகவும், தங்கவிடும் நீழல் மிக்கக் குடிலமானதாகவும் தான் இருக்கும். அவ்வூழியர்களுக்கு அளிக்கும் ஊணையும் உறையுள்ளையும் நலங்குலைத்து வைப்பதில், அவன் முடிவு கட்டி வைத்திருக்கும் வரம்பு, 'அப்பணிமக்களது சட்டகங்கள் சாய்ந்து வீழ்ந்து விடாமல், தாளிலே தரித்து நிற்பதற்கு வேண்டிய திராணி பொருந்தியவாக இருக்கவேண்டும்' என்பதாகவே இருக்கும். அப்படியே தான், எந்த எல்லை மட்டுக்கும் நெருக்கினால் பரிசனர் சகித்துக் கொண்டு தன்னை விட்டு நீங்காமல் இருப்பர்? என்று ஒரு நிச்சயம் செய்து வைத்துக்கொண்டு, ஒவ்வொரு சங்கதியிலும் ஏவலாணைகளைச்சுமத்தி அப்பரிசனரை அவ்வரம்பு

முட்டவும் இடித்து நெருக்கி வருவன். இதில் ஒரு சிறிதும் அம்மனைக் கிழவன் கைதளர்த்திக் கொடுக்கமாட்டான். பொது வழக்கின்படி நோக்குவதாயின், 'தர்மநியாய'த்தி னின்றும் பிறழ்ந்து கொடுமைபுரிகிறான் என்று அவ்வில்லக் கிழவனைச் சிறிதும் பழிக்கமுடியாது என்றே சொல்ல வேண்டும். நிற்கிற நேரம் அத்தனையிலும், மாளுகின்ற பணிகள் அத்தனையையும் ஆற்றித்தரவேண்டும் என்று ஏவலாளனோடு முன் கூட்டியே அவ் யஜமானன் உடன் படிக்கை செய்து வாங்கிக்கொண் டிருக்கிறான். என, அந்த உடன்படிக்கையிற் கண்டபடி அவ் வேவலாளனிட மிருந்து அவனது பணியையும் பொழுதையும் அவன் கறந்து வாங் கிக்கொள்ளுகிறான்; அவ்வளவுதான். அதற்குமேலாக அவன் ஒன்றுமே செய்யவில்லை.—முதலில் உடன்பட்டிருக் கிறான் என்றே வைத்துக்கொண்டாலும், அங்ஙனம் உடன் பட்டுக்கொண்டவன் இடியுண்ண வேண்டிய கொடும்பாட் டுக்கு ஓர் எல்லை இல்லாமற் போகலாமா வென்பாரை, அண் டை அயல்களில் இருக்கும் முதலாளிகளைப் பார்த்துக் கொள்ளுங்கள் என்று சுட்டிக் காட்டிவிட்டு அவன் அனுப்பிவிடுவான். சுருக்கமாக, நடப்பிலே பரிசாரகத் தொழிலுக்குக் கூலிவாசி இத்தனைதான் உண்டு; அதைப் பெற்றிடும்போது, வேலை செய்வதற்கு என்ன கொள்ளை என்றே அவன் இடித்துக் கேட்பான். தன்மனையினும் பார்க்க சிலாக்கியமான இடம் அகப்பட்டுப் போவதாயிருக் கிற பட்சத்தில், பணிமகனை யாரும் கையைப் பிடித்து நிறுத்தி வைக்க மாட்டார்கள்; ஆதலால் அவன் தடையின் னியில் போய்க்கொள்ளலாம் என்பான். இந்த சமயத்திலே அந்த யஜமான் செய்யக்கூடிய தெல்லாம், தான் கொடுக்கிற அளவுக்குக் காசைக் கூலியாகக் கொடுத்து, அத்தனை வேலை யையும் வாங்கி வருவதில் யாதொரு புதுமையும் இல்லை

யென்றும், பரிசாரகத் தொழிலுக்கு இப்பொழுது சந்தை யிலே நடப்பு விலை அதுதான் என்றும் எடுத்துக் காட்டு வதே யாகும். அதற்கு மேலாக அவ் யஜமான் செய்யக் கூடியதோ, செய்யவேண்டியதோ வேறு ஒன்றுமே இல்லை.

இதுதான் இம்மாதிரியான ஒரு வழக்கில், தேசீய தனதாய சாஸ்திரம் வகிக்கக்கூடிய நோக்குநிலை என்ன லாம். மெய்யோ என்னே? அந்த சாஸ்திர விற்பன்னர் அதுதான் அதன் நிலைநோக்கு என்று கூறி வருகிறார்கள். அவ்விற்பன்னர், பின்வரும் யுக்தி கொண்டு அதற்குக் கார ணமும் காட்ட வருவர். "இந்த மார்க்கத்தின்படி சென் றால், நிரந்தரத்தில் அதிகதம மாவதான வேலையைப் பணி மக்களிடமிருந்து வாங்கிக் கொண்டுவிடலாம். அதனால், சாத்தியமாயிருப்பதில் அதிகதம மான நலம் சமுதாயத் துக்கு விளைவதாயிருக்கும். மாறுகோடன் முறையால், அவ்வதிகதமமான நலம் அத்தனையும் சமுதாயத்தின் துவா ராவாகத் தொழில் மகனுக்கே முடிவில் போய்ச் சேர்ந்து விடும்" என்றவாறு.

காரியம் மட்டும் அவ்வண்ணமாகப் பலிக்கின்றதில்லை. நீராவி, காந்தம், கிராஸம் (பூதங்கள் ஒன்றையொன்று தத் தம் வசமாக ஆகருஷிக்கிற சக்தி) இவற்றின் தரத்ததாய ஓர் சக்தி நின்று கருத்திருத்துவம் வகித்து ஓட்டிக்கொண்டு வருகிற ஒரு பொறி மாத்திரமாக அத் தொழில்மகன் நிகழ்வானயின், மேற்கண்ட சுபங்கள் சித்தித்திருக்கும். ஏனென்றால், கருத்திருத்துவ சக்தியின் தானத்தில் இன்ன தரத்ததாய ஓர் சக்தியே நின்று இயக்கிக்கொண்டு வருகிற தாயிருந்தால், அதனல் விளையக்கூடிய காரியசித்திகளை நாம் சுலபமாகக் கணக்கு முடித்துக்கொண்டு விடலாம். அவ்வழியால், இன்னனைய ஓஜஸ்ஸுகளெல்லாம், மானி

டன் கணக்குக்கு முற்றும் அடங்கியவாகவே யிருக்கும். ஆனால், **ஆத்மா** வெனும் ஒன்று உள்ளே உறைந்து 'யாபன சக்தி'யின் நிலையில் நின்று இயக்கி வருதல் காரணமாக வேலைகளை 'உருவாக்கி'த் தரவல்ல ஓர் யந்திரம் அன்னவே மனுஷ்யன் விளங்குகிறான். இதுதான் நடப்பாயிருக்கிறது. இந்த **ஆத்மா** எனும் சக்தியோ, புதுமைப் பிறவியாகத் தோன்றுகிறது. மானுடனுடைய கணக்குச் சென்று எட்டிப் பார்க்கவும் இயலாதவாறு அத்துணை உன்னதமாக இருக்கிறது அதன் சஞ்சாரவீதி. ஆகவே, மனுஷ்ய கணிதத்துக்கு அண்டபெடாமல், ஓர் அக்ஞாத சங்கியையாக இயல்வதாகின்றது இந்த சைதன்யம். அறிவரிய அவ் வேகாந்தத்தில் தங்கி யியன்றுவந்து, தேசிய தனதாய நிபுணர்கள் வெற்றி ஏமாப்புடன் தீர்த்துக் கட்டி வைத்துவிட்டதாகக் கருதுகிற "சமன் எடை" களாகிற பேராயங்களில் அவருக்கு அறிவு கொடாமலே உட்புகுந்துகொண்டு, அக்கணக்குகள் பொத்துப் படும்படியாக அது சீர்குலைத்து வைத்து விடுகிறதாயிருக்கிறது. கரி, எண்ணை, விறகு முதலிய எரிவாடுகளைப் போட்டு வேண்டிய வகையினதாய சக்திகளை உத்தீபனம் செய்து வைத்துக்கொள்ளுகிறதுபோல, இந்த (ஆத்மா வாகிற) சக்தி உத்தீபனமாம்படி செய்யவல்ல எரிவாடு தேசிய தனதாயத்தின் 'கப்பரை'யின் அகத்து அகப்படக்கூடிய தொன்றன்று. வேறு எத்தனையோ எரிவாடுகளை அக் கப்பரையினின்றும் அவர் பிறப்பிக்கலாம்; ஆனால், ஆத்மாவை உத்தீபிவிக்கும் எரிவாடு ஒன்றைமட்டும் அதன் வாயிலாகப் பிறப்பிக்க முடியாது. தொழில் மக்களுக்கு வேதனத்தில் மோகத்தை உண்டாக்கிப் பார்க்கலாம்; அல்லது அன்னாரை இடிபுரிந்து நையவைத்துப் பார்க்கலாம்; இவ்வாறாகப் 'பலித்த வித்தை பதினெட்டு'ம் கொண்டு பார்த்தா

லும் எதற்கும் அதனிடம் காரியம் மாளாது. அந்தப் புதுமைச் சக்தி இயக்கிவரும் அந்த யந்திரத்திலிருந்து, அதிகதமமான வேலையை முடித்து வாங்கித் தரவல்ல ஆற்றல் மேற்சொன்னபடி அந்த தேசீய தனாதாய விற்பன்னர் காணக்கூடிய உபாயங்களில் ஒன்றுக்கேனும் சமைந்திடாது. அதிகதமத்தில், இதைக்கொண்டு பணி யெடுப்பிக்க வேண்டு மென்றால், கண்டு தெளியுங்கால் போதரும் ஏற்புடை எரிவாட்டை இட்டு, மூட்டி, அவ்வியந்திரத்தின் கருத்திருத்துவ சக்தி அதிகதமமான தேஜஸ்ஸுடன் பொருந்தியிருக்குமாறு செய்து வைக்கவேண்டும். வேறு எவ்வழி பற்றிச் சென்றவிடத்தும் காரியசித்தி கைகூடி வாராது. இந்த ஜீவயந்திரத்தில், கருத்திருத்துவம் வகித்து இயக்கிவரும் சக்தியை "ஸங்கல்ப சக்தி" அல்லது "ஆத்ம உத்வேகம்" என்று கூறுவோம். அது கொழுந்துவிட்டு எரிந்து வளருவதற்குப் போட வேண்டுவதான எரிவாடு—"அனுராகங்கள்"—எனப்படும்.

நிற்க, அடியில் வருவதும் சம்பவிக்கக் கூடியதுதான். அப்படிப் பலகாலும் சம்பவிக்கவும் செய்திருக்கிறது.

௩ என்னையெனில், உடையவன் மட்டும் மனத்திட்பமும் ஊக்கமும் பொருந்தியவனாக இருப்பனேல், அப்பொழுது அவனது ஏவன்மாட்சியின்கீழ்‘கண்டுமுதல்’ செய்யப்படுகிற வேலை ஜடத்தன்மையால் குன்றாத அளவினதாகவிருக்கும். தெள்ளறிவால் தெளித்த முறைவழி வளையாத திடஸங்கல்பம் எனும் தனது விசைப்பொறியைச் செலுத்தி, தன்கீழ் உள்ள பணிமக்களை ஆலையில் கொடுத்து ஆட்டினாலென்ன நைத்து அத்தனை பணியையும் அவன் கழற்றிக்கொண்டு விடுவன். ஆகவே அத்தகையோனுடைய ஏவலின்கீழ் உருப்பெறும் பொருட்பணி பேரளவினதாகஇருக்கும் என்பதற்குஆட்சேபமே யில்லை.

இதற்கு நேர் விரோதமான பட்சமும் நிகழக்கூடாத தொன்று இல்லை. ஏன்? காரியத்தில் பல வேளைகளில் நடந்தேறியும் விட்டிருக்கிறது. அதாவது :—அவன் (ஒரு யஜமானன்) பரம சாது பிரகிருதியோடு கூடியவனாக இருந்து கொஞ்சம் நெஞ்சிளைத்த பேர்வழியாகவும் தென்படுவானேயாகில், அவனது ஆணையின்கீழ் உருவாகும் வேலையின் அளவு மிகமிகக் குறைவுதலாகச் சுருங்கிவிடுவதோடு, அக் குறைவான வேலை முழுமையும் 'ஆக்கங்கெட்டாற்' போலவுந்தான் அமைந்திருக்கும். தகுதியுற ஏவப்படாமையான் பணியாளர்தம் கைத்திறன் எல்லாம் கூர்மழுங்கி மொண்ணையாகப் போய்விட்டிருக்கும். விதந்து, உடையாளிபால் உழைவலர்க்குத் தோன்றும் நன்றி யாதானும் இருப்பதாயின், அது அவர்தம் எக்களிப்பு நின்றுமே பிறந்ததாக இருக்கும். ஆக, ஆளுடைமையிலும் அன்புடைமையிலும் குறிதப்பிய அன்பையுடைய ஏவலுக்கு வேலை தீராதமைவதைக் கண்டு நாம் அதிசயப்படுதற்கொன்றுமில்லை. இப்படி இரண்டு கூறுகளாலும், அனுராகத்தால் ஆளுடைமை கொள்ளும் முறை காரிய நடபடிக்கைகளைக்கொண்டு நோக்க விபரீதம் புரிவதுபோலவே தோன்றலாம். என்றாலும், இப்பேர்ப்பட்ட வியவகாரங்கள் சகலமானவற்றுக்கும் ஒன்று போலப் பொருந்தக்கூடிய ஓர் விசுவதர்மம் யாதெனில், கூறுதும். இரண்டு விதமான பாவியங்களிலும், செறிந்திடும் புலமையும் ஊக்கமும் ஒப்பாயமைகின்றன என்று இருக்கட்டும். அந்த ஸ்திதியில் வைத்து அதிகதமத்தில் கனிந்து பழுக்கக்கூடிய பொருட்பயன், பரஸ்பரம் புகையவிட்டுக்கொள்ளும் பகை காரணமாகப் பிறந்திடாது; மற்று, அந்நியோந்நியமாக உள்ளூறப் பாய்ந்து தவழும் அனுராகம் காரணமாகவே பிறக்கும் என்று காணப்படும். தவிர, தன்னால் சாத்

தியப்படுகிற மட்டுக்கும் கூடுதலான வேலையை வினைமக்களிட மிருந்து கறந்து வுறிஞ்சி வாங்குவதில் ஒரு கைபார்த்துத் தீர்த்துவிடுகிறது என்று உடையாளி அடம் வைத்துப் பிரயாசைப்படுவதை அற நிறுத்தி விடவேண்டும். அதற்குப் பதிலாக, முற்றும் அவசியமெனத் தெள்ளி, தான் ஏவிக்கொடுக்கிற வேலைகள், அதே சமயத்தில், புரியும் ஏவலருக்கும் இதந் தருவனவாகச் சமைவதிலும், நீதியும் புனிதமுமாவதான சகலவழிகளாலும் அவ் வேவலருடைய லாபரதிகளையும் யோக க்ஷேமங்களையும் வளர்த்துப் பெருக்குவதிலுமே அவ்வுடையாளி சதா சிந்தனை செய்து வருகிறான் என்றும் நாம் வைத்துக்கொள்ளுவோம். அப்பொழுது இவ்வாறு அருமையாகப் பேணிப்போற்றப்பட்டு வந்திருக்கிற அவ்வேவலர் கைந்நின்றும் முடிந்து வரக்கூடிய பணியோ அல்லது அனையவர்களால் காத்து வகித்துவரப்படும் யோக க்ஷேமமோ தான் அளவிலும் தகுதியிலும் மேம்பட்டுச் சிறப்பதாக இருக்கும். அதினும் பார்க்கச் சிறந்து விளங்க வல்ல வேலை இனி இப்புவியிற் காண்பரிதாம்.

'வகித்து வரப்படும் யோகக்ஷேமங்கள்' என்று நான் கூறியிருப்பது காண்க. ஏனென்றால், தன் ஆண்டையின் பொருட்டாக ஒரு ஊழியன் செய்து தரக்கூடியவை அனைத்தினும் வைத்து சர்வோத்தமமாவது என்று உறுதியாகவோ அல்லது காலம் ஒரு மூன்றுக்கும் ஒப்பமுடியும் வண்ணமாகவோ கூறத்தகுவது, அவன் தன் உடம்பு கொண்டு புரியும் தொழும்பு ஒன்றுதான் என மதித்துவிட வேண்டா. ஏனென்றால், அவ் விழுமிய சால்பு பொருந்தவல்லது, அவன் எல்லா வகைகளாலும் கரிசனத்துடன் பேணி வரக்கூடிய யோகக்ஷேமமே யாகும். எல்லாவகைகளாலும்:—அவையாவன: தன் மெய் வருந்தி ஆற்றித் தரும் சேவகம், ஆண்டையின் லாபரதியையும் நாணயத்

தையும் உன்னிப்பாய் விழித்திருந்து காத்துப்பேணி வருதல், அல்லது தான் துணைபுரிதற்கு இடம் இருப்பதாகக் காணும் வேளைகளில் எல்லாம், அச் சந்தருப்பங்கள் எதிர்பாராதனவாயிருந்தாலும்கூட அவற்றில் எல்லாம்—, தானே வலிந்து சென்று மனமகிழ்ச்சியுடன் ஒல்லும் துணை புரிய என்றும் சன்னகமாயிருத்தல் போன்ற வகைகளால்: உடையானது நலம்பேணுவதில் ஊழியன் கண்ணுயிருந்து வருதல் என்க. இவ்வாருகவெல்லாம் தனது உடையானது நலத்தில் நாட்டம் வைத்து வருதல்தான், ஒரு ஊழியன் செய்து தரக்கூடியதிலெல்லாம் ஆன்ற சிறப்புப் பொருந்தியதாயிருக்கும்.

நாம் தாட்சண்யம் காட்டக் காட்ட, அதைத் துருபயோகப்படுத்துவதாகவும் வரவரக்காரியம் மிஞ்சிப்போவதாகவும் இருக்கிறதேயன்றிப் படிமானத்துக்கு வருவதாகக் காணப்படவில்லையே. இதம்புரிந்தால், உடனே கைமேல் விளைவது துரோக சிந்தையாகவே இருக்கிறதே! இருந்தென்? இச் செய்திகளால் நாம் கூறிய சித்தாந்தம் ஒரு துளியும் பொய்படுவதாகாது. ஏனென்ருல், இங்கிதமுடன் பிரியமாக நடத்தி வரும்பொழுதே துரோகியாகப் பவிக்கும் ஒரு ஏவலன், கொடுமை புரிந்து நிஷ்ரேமாக நடத்தப்பட்டவிடத்து, வெஞ்சினப் பழிகாரனுகத் தீர்ந்துவிடுவன். அப்படியே, தாராளங்காட்டி யொழுகும் ஒரு யஜமானனிடத்திலேயே ஒரு பணியாளன் நேர்மை கரந்து கள்ளுவானுயின், நீதி பிறழ்ந்து நடக்கும் ஒருவனுக்குப் பொல்லாத் தீங்குகளைத் திட்டமாக விளைவித்து விடுவான்.

எந்த வியவகாரத்தில், எந்த மனுஷ்யனுடைய சங்கதியில் தான் ஆகட்டும்: யாதற்கும் குன்ருச் சிறப்புடைய

வண்பயன் தருவது, தன்னலம் மறுத்து ஆளுடைமை செய்வதாகவே இருக்கும் என்பது தேற்றம்.

காண்டிர்! ஒரு யாபனசக்தி, அல்லது ஒரு கருத்திருத்துவ சக்தி என்ற கணக்கில் வைத்துத்தான், அனுராகங்களை இங்கு நான் முழுக்க முழுக்க ஆராய்ந்து கொண்டு வருகிறேன். மற்றப்படிக்கு, தம் மியல்பால் ஆர்வமுடன் பற்றி ஒழுகுதற் குரிய தகுதி செறிவன வென்றோ, அல்லது ஒள்ளிய மாண்புகொண்டு விளங்குகின்றன வென்றோ, ஆகிற தன்மைகளையொத்த ஆதர்ச நிலைகளில் வைத்து அவற்றை நான் இங்கு ஆராய்ச்சி செய்துவரவில்லை. இப்பொழுது, தேசியதனுய விற்பன்னன், யதோக்தமாகப் போட்டுத் தீர்த்துவைத்திருக்கும் கணக்குகளை யெல்லாம் பொத்துப்படும்படி அழிமதி செய்து வருகிற ஒரு விஷம சக்தியின் தரத்தில் வைத்துத் தான் இந்த மைத்ரீபாவத்தை நான் கணக்காய்ந்து வருகிறேன். ஒருவேளை, தனது கணக்காயத்துறைகளில் இந்த சக்தியையும் ஓர் 'அக்க'மாக, புள்ளியினமாகச் சேர்த்துக்கொண்டு கணக்குப்பார்த்து விடலாம் என்ற துணிவு அவனுக்குப் பிறப்பதாக இருப்பினும், அதற்கு வேண்டிய வலிமை அவனை யொருபொழுதும் வந்தடையாது. ஏனென்றால், இது கருத்திருத்துவம் வகித்து நிகழவேண்டுமானால், சாதாரணமாகத் தேசியதனுதாயத் துறையிலே பிரேரேபிக்கப்பட்டுக் கணக்குக்கு வரக்கூடிய ஏனை லட்சியார்த்தங்களையும் உபாயங்களையும் ஹேதுமானங்களையும் அடியோடு ஏட்டைக் கட்டித் தூர எறிந்து விடவேண்டும்; அப்படிக்கின்றி, அவற்றையும் ஒரு கையில் வைத்துக்கொண்டு, நடுவில் இந்தசக்தியை இன்னொரு கையாற் புகவிட்டு நிறுத்திக் கொள்ளலாம் என்று விழைவது வீணேயாகும். மற்றவை தொடர்பு கொண்டு நிற்குமளவும், இது யதார்த்தத்தில் கருத்திருத்துவ சக்தியை வகித்துக் கொள்ளாததாய் வெறிதே நின்று கழிந்திடும். ஏனென்றால், முதலில் கொஞ்சம் ஆதா

வும் பட்சமும் காட்டி நடந்து கொண்டால், பரிசனருக்கு நம்மிடம் அளப்பரிய பக்தியும் விசுவாஸமும் தோன்றும்; அதன்மேல் அந் நன்றியை நாம் எண்ணுகிறபடி காசு மாறிக்கொண்டு விடலாம்; அதாவது எண்ணுகிற ஊதியத்தை யடைதற்கு உரிய உபாயமாகச் சமைத்து விடலாம்; என்று யோசித்து உமது ஏவலரை நடத்திவரக் கடவீர்! அப்பொழுது நீவிர் எடுத்துக்கொண்ட பிரயாசை முழுவதற்கும் பிரதிபலங்களாகத் தோன்றக்கூடியவை இவையேயாகும். என்னே? உம்மாட்டுப் பக்தி விசுவாசங்களும் நன்றியுணர்வுகளும் உமது பரிசனருக்குப் பிறத்தலே செய்கின்றவில்லை; எனவே, அதன் காரணமாக, முதலில் நீர் காட்டிய ஆதரவுக்கும் இதங்களுக்கும் ஒரு காசேனும் விலை யொப் பேற வில்லை; என்றும் காண்பீர். இன்ன பிரதிபலங்கள் உம்முடைய யோக்கியதைக்கு ஒரு மாற்றேனும் கட்டையாகப் போய்விட்டன வென்றும் யாராலும் சொல்ல முடியாது. ஆதலால், இன்ன நெறியைக் களைந்து, அந்தரங்கத்திலே பொருளாசையைத் துளிகூட வைத்துக்கொள்ளாமல், தூய உணர்வுகொண்டு பிரியமுடன் உமது ஊழியரை நீர் ஆளுடைமை செய்துவரக் கடவீர். அப்பொழுது, நீர் நாடும் பொருள்கள் அனைத்தும் அங்கு ஒன்றுபோலச் சித்தியாகி யிருப்பதை நீர் கண்டு தெளிவீர். ஏனையவிடங்களுக்கு மட்டுந்தான் என்பதில்லை; இந்த இடத்திலும் அடியில் வரும் நியாயம் தான் ஊர்ஜ்ஜிதம் பெறுவதாயிருக்கும்:— விட்டவன் வாழ்வான்; விடாதவன் வீழ்வான்.*

---

* ஆளுடைமை செய்வதில் தோன்றவல்ல இவ்விரு பண்புகளுக்கிடையேயும் இருக்கும் வேற்றுமை யாது? இவற்றுற் காரியப்படும் பயப்பேறுகளுக்குள்ளே எத்துணை பேதமிருக்கும்? என்று நுல்லியமாக அளந்து காண விரும்புவோர் சார்லஸ் திக்கன் என்ற ஆங்கிலப் போரசிரியன் எழுதிய மோட்டை வீடு, (Bleak House

ஐயன் ஹம்ரியானின் கடியாரம் (Master Humphrey's Clock) என்ற இருநூல்களையும் படிக்கக்கடவர். அவற்றில், எஸ்திராள், சார்லீயாள் இருவருக்குமிடையே நிகழும் உறவு முறைகளையும், கன்னி பிராஸளள், மார்ஷானுள் ஆகிற உடையாட்டி தாதிகளுக்கிடையேயுள்ள இணக்கத்தின் தன்மையையும் ஒப்பு நோக்க ஒள்ளிய உண்மையை உணர்வார்.

திக்கனுடைய கிரந்தங்களுக்கெல்லாம், சாராம்சத்தில் சமைந்திருப்பது சிறந்த தகைமையும் மெய்ம்மையும் நிரம்பிய பொருள் என்று தென்படும். ஆனல், சாதாரணமாக, அதன் சாராம்சங்களில் நாம் திருஷ்டியே வைக்கிறதில்லே. காரணம்: தெள்ளிய காட்சியொடு தான் காணும் மெய்ம்மைப் பொருள்களை, அவற்றின் இயல் வண்ணங்களோடு அவன் அவற்றை நமது பார்வையில் வைக்கிறதில்லே. மற்று, அவற்றுக்கு வர்ணம் பூசி வேஷமிட்டு வைத்திருக்கிற விகார வடிவங்களிலே தான் அவன் நமக்குக்காட்டி வைத்திருக்கிறுன். இதனுல் அந்நூல்களது அந்தரங்க யோக்கியதையையும் மெய்ம்மையையும்பார்வைக்குக் கொண்டுவராமல்,அப்பொழுதைக்கு அறிவின் நீங்கியவராய், கருத்து வல்லார் பலரும் கூட அவற்றை நழுவ விட்டுவிடுகிருர்கள். இது பொருந்தாது. அறிவின் நீங்கி:— ஏனென்றுல், பெரும்பாலும் விகாரமாகவும் ஆபாஸமாகவும் கண்ணுக்குத் தென்பட்டபோதிலும் கூட, திக்கன் ஜோடித்து நிறுத்தியிருக்கிற விகிருதி வேஷங்கள் எங்கேனும் குறிதப்பிப் பிறழ்ந்து போயிருக்கின்றன என்று எடுத்துக்காட்ட வொண்ணுத ஸ்திதியிலேயே நிகழ்கின்றன. உரை நடையில் மட்டும் அவனைத் தன் போக்கிலே போகவிட்டுவிடுவோம். அப்பொழுது, அவன் எடுத்துக் காட்டுகிற விஷயங்கள் முற்றும் மெய்ம்மை செறிந்தவா யிருப்பது காணப்படும். ஜனகாரம் பொழுதுபோக்கும் பொருட்டு எழுதிய நூல்களினளவோடு, மின்னெறியும் தனது உத்பிரேட்சை அற்புதங்களை நிறுத்திக்கொள்ளுவதுதான் கிரமமாக இருக்கும் என்று அவ்வாசிரியன் புத்தியில் பட்டிருக்கலாகாதோ வென்று பல வேளைகளில் நானுங்கூட விரும்பியிருக்கிறேன். ஆனல், கஷ்ட காலங்கள் (Hard Times) என்ற நூலில் அவன் எடுத்தாண்டிருக்கும் விஷயம் பொழுது போக்காய்க் கழிந்துபோகிற ஓர் விஷயமன்று.

மற்று, ஜாதியதர்மங்களை விபாகித்து விதாயகம் செய்யும் துறையில் மகோன்னதமான ஒரு பதவியை வகிக்கவேண்டிய நூலாக்கும் அது. ஆதலால், இவ்வண்ணம் ஜாதிய வாழ்க்கையில் மிக்க ஏற்றம் பெறும் ஓர் சங்கதியை எடுத்தாளும்பொழுது, அதிகதரத்தில் 'முறைப்பும்' மனவொருமையும் செறிந்து கணக்கின் துல்லியத்தை விடாமல், அங்கு அவன் பொருள் ஆராய்ச்சி செய்திருக்க வேண்டும் என்றும் நான் ஆசைப்பட்டிருப்பதுண்டு. அன்னோன் எழுதிய கிரந்தங்களில் அனுத்தமமான மகிமை வாய்ந்து இலங்குவது **கஷ்ட காலங்கள்** எனும் அந்நூல் ஒன்றே என்பதுதான் எனது திடமான அபிப்பிராயம். இருந்தபோதிலும், இந்நூற்கு ஏற்புடைத்தாம் பாங்கினில் எத்தனை பயன்களை வாசகர் பெற்றுக்கொள்ள வேண்டுமோ அத்தனை பயன்களையும் பெறவியலாத நிலையில் அவருட் பலர் இருப்பார்கள். ஏனென்றால், யதார்த்தத்தில், ஓர் லௌகிக முதலாளியின் தத்ரூபத்தில், அவனுக்குத் தத்துல்லியமான ஒரு ஸாதிருசிய புமானுடைய ஸ்திதியாக்கும் அந்நூற்கண் விளங்கும் திரு. பௌந்தர்பியனது ஸ்திதி. என்றாலும், காரியத்தில், ராக்ஷஸவேஷம் தரித்துக்கொண்டு நாடகமேடையில் ஏறி நிற்கிற ஒரு மனுஷ்ய பூதமாகவே விளங்குகிறான். ஸத்தியமும் நேர்மையும் பிறழாது ஒழுகும் ஒரு உத்தம தாஸனுக்கு வார்த்து வைத்திருக்கிற ஒப்பற்ற ஒரு சிற்பவிக்கிரகமாயில்லாமற்படிக்கு, **ஸ்தீபன் பிளாக்பூலான்** என பான் இங்கு நாடக பாத்திரங்களின் கோஷ்டியில் ஒரு புருஷோத்தமனாக விளங்குவதாகினன். சுற்றிலும் பந்தங்களைக் கொளுத்திவிட்டுக்கொண்டு அவற்றின் மத்திய ரங்கத்தில் நின்று பேசுவதைவிட மேலான திருப்தியை அளிக்கவல்லதாக **திக்கன்** யாதொன்றையும் காண்கிறான் இல்லை. அது காரணமாக, அவனுடைய மதிநுட்பத்தையும் தெள்ளிய காட்சியையும் கொண்டு நாம் அடையவேண்டிய பயனையெல்லாம் கைவருத்திக்கொள்ளாமல் அவற்றைப் பறிகொடுத்துத் தடுமாறுதிருக்கக்கடவோம். எழுதியிருக்கிற ஒவ்வொரு நூலிலும், தலைநிற்கிற குறிக்கோளிலும், நடுவாக நிகழ்கின்ற உயிர்க்கருத்திலும் அவன் இறையும் பிழைபடுகின்றான் இலன்; அங்கு, அவன்முற்றும் நேராகத்தான் நிகழ்கிறான். சமுதாய பிரசினைகளின் ஆராய்ச்சியில் ஆர்வங்கொண்டுள்ள ஒவ்வொருவனும்,

யாதினும் மிக்கத் தெளிவுகொண்டும், பிணக்கற்று ஒள்ளியதாந் தன்மையினும் ஆண்டைக்கும், அவன் கை

௧௧ ஆளுக்கும் நிகழவல்ல உறவு முறைகளை விளக்குதற்குரிய திருஷ்டாந்தங்களில், மேற்கண்டதற்கு அடுத்தபடியாக எடுத்துக்கொள்ளக் கூடியது படைநாயகனுக்கும் படையாட்களுக்கும் இடையே நிகழும் உறவு முறையாகும்.

வினைத் திட்பத்தான் பிறவனைத்தையும் விஞ்சிடும் பெற்றியில் தன் படையைக்கொண்டு வந்து நிறுத்திவிட வேண்டும் என்பதில் ஓர் படைநாயகன் பெரிதும் ஆர்வம் கொள்ளுகிறான். ஆனால், அவ்வாறு செய்வதில், எள்ளத்தனை காயக்கிலேசத்துக்கும் தான் ஆளாகிட ஒருப்படான்; அது ஒன்றுமட்டும் அவனிடம் கேளாமலிருந்தால், மற்றப்படி தனக்குள்ள பலம் முழுவதையும் பிரயோகித்துப்

---

அவனுடைய நூல்கள் அனைத்தையும் மனவொருக்கத்துடன் உன்னிப்பாய்க் கருத்தில் வாங்கிப்படித்து வரவேண்டும். அதிலும், விசேஷ சிரத்தை பூண்டு, கஷ்டகாலங்கள் என்ற அந்த நூலைப் படித்தல் அத்தியாவசியமாகும். அந்நூல்களைப் பார்த்துவரும்போது ஒருதலைச்சார்பாகவே பெரும்பாலும் அவன் கட்சிபேசி வருகிறான் என்றே தோன்றும். அதிலிருந்து, ஒருதலைச்சார்ந்துவிட்ட அன்னுனுடைய தீர்ப்பு நியாய விருத்தமாகவே பவிக்கும் என்று முடிவு காணத் தோதாக இருக்கும்; இருக்கட்டும். திக்கன் ஆராயாது நழுவ விட்டிருக்கிறதாகத் தோன்றுகிற மறுகட்சியில் நின்று, அங்கு கிடைக்கக்கூடிய சான்றுகளை யெல்லாம் அவ் வாராய்ச்சியாளர் திரட்டிச் சீர்தூக்கிப் பார்த்துக்கொள்ளட்டும். அதற்கப்புறமும், திக்கன் சொல்லுகிற தீர்ப்பே முடிவில் சரியாக இருக்கிறதென்றும், ஆனால், அதனை மிகவும் விகாரப்படுத்தியும் நுணுக்கியும் கூறிவிட்டான் என்றுமே முடிவுகட்டிக் கொள்ளுவர். அப்பொழுதுதான் மறுதலைச் சார்பெய்தித் தாம் எடுத்துக்கொண்ட பிரயாசையெல்லாம் வீணே கழிந்ததென்று அவர்கட்குத் துலங்கும்.

படை நியமங்களையும் விதிகளையும் நிர்வகித்துப் படையாட்கள் அனைவரையும் நன்ருக ஏவியடித்து வருதற்குச் சற்றேனும் பின்னிடையான். அவ்வாருக, ஒரு படையை வினையாளுடைமை செய்து யாதினும் சிறந்த பயப்பேறடைவது சாத்தியமாயின், அதற்கு அவன் எப்பொழுதும் தயாராக இருப்பன். 'தன்சொந்த உடம்பில் ஒரு தூசி கூடப்பட்டுவிடப் படாது'; அது ஒன்று நீங்கலாக வேறு என்ன என்ன வேண்டுமானுலும், அத்தனையையும் அவன் செய்வான். என்ருல், தன்கீழுள்ள ஆட்களின் தீரசூர சாகசங்களைச் சம்பூரணமாக வளர்த்து அவன் ஒருபொழுதும் காணப்போவதில்லை என்று நாம் உறுதி கூறிவிடலாம். தன் நலம் பேணும் அந்த நோக்கில் சிறிதேனும் தளர்த்திக் கொடுக்கத் தயாராக இல்லாத பட்சத்தில், எத்தனை விதிகளைத் தனக்குப் பின்பலமாக அவன் அடுக்கிக் கட்டி வைத்துக்கொண்ட போதிலும், அல்லது அவ் விதிகளை ஆணைநிறை செலுத்தற்கு எத்துணை அபாரமான சக்தி செறிந்தவனுக விளங்கின போதிலும் சரி; அவன் எண்ணம் ஒருபோழ்தும் பலித்திடாது. முந்திய திருஷ்டாந்தத்தில் நாம் கண்டதுபோல, மேல் நிற்கும் அதிகாரிகளைத்த பேர்வழியாக இல்லாமல், புலமையும் மனத்திட்பமும் செறிந்தவனுகத் திகழ்வனேல், அவனது ஆட்சியில் விளைந்து உருவாகும் பணி அதிகதரத்தில் பயனுற் சிறப்பு வாய்ந்து விளங்கும்; ஆட்சேப மில்லை. அப்படி யில்லாதவனது ஆட்சியில் இத்தனைகூடக் காரியம் பலித்திடாது. ஏனென்ருல், கோழை நெஞ்சு படைத்த அவன், வரம்பிலாது காட்டும் கண்ணேட்டத்தால் உள்ளதும் கெட்டுப் போய்விடும். ஆனுல், இரண்டு பட்சங்களிலும் செறிவுற்றிடும் புலமையும் திண்மையும் ஒத்த நிறைகொண்டு இருப்பவாக நாம் கருதிக்கொள்ளுவோம். அப்பொழுது உத்தமமான

பலசித்தி, அடியில்வரும் பெற்றியாளனது ஆட்சியின் கீழே யே முதிர்ந்து பழுக்கும். அன்னோன் யாவன் எனில், தனது ஆட்களுடன் நேரிற்கலந்து பழகி உறவு பாராட்டுவதினும், அவரது லாபாதிகளையும் யோக க்ஷேமங்களையும் வலிந்து சென்று கரிசனத்துடன் காத்து நிர்வகித்து வருவதினும், அவ் வேவலரது உயிரின் பொருட்டுக் கொடுக்க வேண்டிய விலை யாதாக நேர்ந்தவிடத்தும், அதனைக் கூசாது கொடுப் பதினும், மற்றெல்லோரையும் பார்க்க உயர்ந்து விளங்கவல் லானேயாம். அவனது ஆட்சியிலேயே தலைசான்ற முழுமுதற் பயன்கனிந்து பழுப்பதாயிருக்கும். தன்மேனியினிடமாக அப்படையாட்களது உள்ளங்களில் ஊறித் ததும்புகிற 'அவ் யாஜ' பக்தியையும், தனது ஒழுக்க நலத்தில் வேரூன்று கிற எதற்கும் அசையாத நம்பிக்கையையும் அப்பெருந் தகையாளன் கண்டு கொள்ளுகிறான். கண்டு மெல்ல, அவற்றையே தான் ஏந்தும் படைகளாகக்கொண்டு அச் சேனையைச் சமைத்து வந்து நிகர் தீர்ந்த தேஜஸும் வீரிய மும் கொண்டு சோபித்திடுமாறு அவன் செய்து விடுகிறான். ஆதலால், வேறு எந்த உபாயங்களைக் கைக்கொண்டு பார்த்த போதிலும், இன்ன பெற்றியோன் அடைய வல்ல தற்கு ஒப்பாவதான காரிய சித்தியை யாராலும் அடைய முடியாது. ஆட்சி செய்ய வேண்டுவதான ஆட்களின் தொகை ஏற ஏற, இந்த தர்மத்தின் வியாபகத்துவமும் ஊர்ஜ்ஜிதமும் இன்னும் பலமாக வேரூன்றுவதாகக் காணப் படும். மேலதிகாரியிடம் அப்பிரியமே ஆட்கள் கொண் டிருக்கட்டும். அப்பொழுதும், ஓர் கால் ஓங்கியடித்து ஓய்ந்துவிடுவன வாகிற தனித்தனியான சூறைத்தாக்கு களில், அப்படையை வைத்துக் கொண்டே கெலித்துக் கொள்ளலாம். ஆனால், உள்ளத்தில் கனிந்து பொங்கும் அன்பு தம் நாயகனிடம் வையாத ஒரு படையைக்கொண்டு

நெடும்போர் ஒன்றிலேனும் யாராவது வெற்றி பெற்றார்
கள் என்பதாகக் கேள்விப்பட் டிருப்பதே யில்லை. அங்
ஙனம் வெற்றி வாங்குவது கைகூடுவ தொன் றில்லை.

மேலே எடுத்தாண்ட திருஷ்டாந்தங்கள் எளிதில்
அறியத் தகுவனவாக அமைந்திருந்தன. இனி அவற்றி
கஉ னும் அதிகதரத்தில் பிணக்குக் கொள்ளுவதும் கஷ்
டமு மாகிற திருஷ்டாந்தங்களை எடுத்துக் கொண்டு
நாம் ஆராய்ந்து பார்க்கலாம். அவ்வழியில், முதன் முதலாக
நாம் ஆராயத்தகுவது, கையாளம் பண்ணை (Manufac-
tory) உடையான் ஒருவனுக்கும் அவனது கையாட்களுக்
கும் இடையே நிகழவல்ல உறவு முறையாக இருக்கிறது.
எடுத்த வுடனே, சுபமான தோற்றம் யாதும் நம் கண்களுக்
குத் தட்டுப்படுகிற தில்லை. இந்த இடத்தில் தார்மிக பிர
கிருதிகள் எல்லாம் ஜீவ னொடுங்கித் தணுத்து விரைத்துப்
போயிருக்கிறதாகவே புறநோக்கிற்குத் தென்படுகின் றன.
இதனால், சில விந்தையான விபரீதங்கள் இங்கு கிளர்ந்
தெழுகின் றன. இப்பொழுது ஓர் தளபதியின் பால், அவ
னது ஆட்களுடைய உள்ளங்களில் உத்ஸாஹம் நிரம்பிய
அத்தியந்தமான அனுராகம் பொங்கித் ததும்பிக்கொண்
டிருப்பதைக் கற்பனையாற் கண்டுகொள்ளுவது எளிய ஓர்
காரியமாகவே இருக்கிறது. ஆனால், அத்துணை சுலப சாத்
தியமானதோர் காரியமாக அமைகின் றிலது: ஓர் ஆலைச்
சொந்தக்காரன் மீது, அவன் கையில் ஊழியம் செய்து
வரும் பருத்தி-நூற்போருக்கு உத்ஸாஹம் செறிந்த
அனுராகம் ஊறித் ததும்பும் என்று கற்பனையாற் காண்
பது. கொள்ளையையும் வழிப்பறியையும் குறிக்கொண்டவ
ராகவே ஒன்று சேர்ந்திருக்கிறார்கள் என்றாலும், அவ்வாறு
ஒன்று கூடியிருக்கிற ஒரு மக்கட்குழுவிலும் சம்பூரண
மைத்ரீபாவம் துடித்து அலைமோதிக் கொண்டிருக்கும்.

உதாரணமாக:—ஸ்கோத்லாந்து நாட்டுப் பர்வத பிராந்தங்களில் வசித்து வந்த மலைப்பளியர் குலங்கள் - பண்டைக் காலங்களில் கொள்ளையையே பிழைப்பாகக் கொண்டு வாழ்ந்து வந்தார்கள். அப்படிப்பட்ட சமுதாயங்களைச் சார்ந்த பிரதி அங்காமியும், தன் தலைவனது உயிரின்பொருட்டுத் தன்னுடைய தலையைக் கொடுக்க எப்பொழுதும் சித்தமாக இருந்தான். ஆனால், இங்கே ஓர் கும்பலாக மனிதர் நிற்கின்றனர். விதி விருத்தமான காரியம் எதையும் உத்தேசித்து அவர்கள் இங்கு கூடி நிற்கிறார்களிலர். மற்று, சட்ட பூருவமான முறைகளைத் தழுவிக்'கையாண்மை'யால் பொருளைப் படைத்தற்கும் ஈட்டுதற்குமாகவே இங்குப்போந்திருக்கின்றனர். என்ற போதிலும், மேலே கண்ட குழுக்களினிடமாக நிலவி வந்த உள்ள நெகிழ்ச்சிகளையொத்தவை யாதானும் இங்கு நிகழ்வனவாகக் கண்ணுக்குத் தெரிகின்றதில்லை. பலவாறாகத் தோன்றக்கூடிய சந்தர்ப்பங்களில் ஒன்றில் இல்லாவிட்டால் மற்றொன்றில் வைத்தாவது தன் தலைவனது உயிரைக் காத்தற்பொருட்டு தன் பிராணனை விடுதற்கு மனமொப்பி முற்படக் கூடியவன் அந்த சமூகத்தைச் சார்ந்தாருள் ஒருவனாகிலும் இருப்பான் என்று துணிகிறதற்கும் அங்கு சான்று தென்படுகிறதாயில்லை. தார்மிக நிலைகளது தொடர்பில் மட்டுந்தான் இம்மாதிரியான பிணக்கமும் விபரீதமும் நிகழ்கின்றன என்று கருதற்க. ஏனென்றால், அதன் வணிக முறையின் நிர்வாகத்தையொட்டிப் பிற விபரீதங்களும் பார்வையிற் கிளர்கின்றன. எவ்வாறெனின், கூறுதும். ஒரு பரிசாரகனையோ அல்லது படைவீரனையோ வேலைக் கமர்த்திக்கொள்ளும் பொழுது, அவனுக்குத் தரக்கூடிய வேதன விகிதம் யாதென்றும், எத்தனை காலத்திற்கு அவனை வேலைக்கு வைத்துக்கொள்ளக் கூடும் என்றும் முதற் கண்ணேயே

அறுதியிட்டுத் தெரிவிக்கப்பட்டு விடுகிறது. ஆகவே, பரிசாரகனே அல்லது படைவீரனே, ஓர் காலவரை மட்டும் நியதமான ஒரு வேதன விகிதத்தைப் பெற்றுக்கொண்டு சேவகம் புரிந்து வருவானுயிருப்பான். ஆனால், ஓர் தொழில் மகனுடைய சங்கதி அலக்காக இருக்கிறது. அவன் பெறக் கூடிய கூலித்திட்டத்துக்கு ஒரு வியவஸ்தை கிடையாது. தொழிற்'கை'களுக்கு ஏற்படும் தேவையைப் பொறுத்த தாகப் பவிக்கும் அவனுடைய வேதன விகிதம். அப்படியே அவன் வேலையில் நின்று வருதற்கும் ஓர் காலவரை கிடை யாது. வியாபாரத்தின்மேல்கீழ்களை உத்தேசித்து, எப் பொழுது வேலையினின்றும் தள்ளப்போகிறார்களோ என கதம்கதம் என்று மனம்துடித்துக்கொண் டிருக்கும்படியா கவே யிருக்கும். ஏனென்றால், எந்த நிமிஷத்திலும் அவ் வேலைக்காரர்கள் சந்தியிலே நிற்க நேரலாம். இதன் மத்தி யிலே, அனுராகம் பிறந்து செய்யக்கூடியதான காரியம் யாதொன்றும் பவிக்க முடியாது. இங்கு இடம் பெற்றுக் காரியம் நிகழ்த்தவல்லது யாதேனும் ஆகக்கூடும் என்றால், அது விராகமாகவே இருக்கும். அது பொள்ளி வெடித்து வாரிச் செய்யவல்ல நாசகாரியம் ஒன்று மாத்திரம் தான் இங்கு நிகழும் காரியமாயிருக்கும். ஆதலால், இத்தியாதி சந்தர்ப்ப விசேஷங்களில், நம்மால் ஆராயத்தகுவனவாய பிரசினைகள் இரண்டாம்.

**முதலாவது**:—தொழிற்குத் தோன்றும் தேவையை யொட்டி அந்தரத்தில் ஊசலாடிக்கொண் டிராமல் ஸ்திர மாக இயன்று வரும் வண்ணம் ஒரு ஒழுங்குத் திட்டத்தை நிறுவி, அதன்படி வேதன விகிதத்தை வரையறுத்து அளித்து வருதல் எவ் வரையிலும் சாத்தியப்படும்?

**இரண்டாவது**:—ஓர் புராதன குடும்பத்தின் மீது அதன் பரிசாரருக்கு ஊறி உறைந்து போயிருக்கக்கூடிய

வாஞ்சையும் பற்றுதலும் என்ன: ஒரு விசிஷ்டமான தளத்தின் படைவீரர்களுக்கு இடையே தவழ்ந்து துடிக்கும் ''வீர பாசோத்ஸாகங்கள்'' என்ன; இவற்றைப் போன்று சாசுவதமாக நிகழவல்ல ஓர் ஆஸக்தியும் சிரத்தையும் தாம், தாம் தொடர்பு கொண்ட நிலையத்தின் மீது தொழிலாளரிடத்திலும் வேரூன்ற வேண்டும். என்னில், சேர்ந்தாரைத் தள்ளாமற் படிக்கும் வேற்றுவரைக் கொள்ளாமற் படிக்கும் கொண்ட கைகளின் தொகையை ஒரு படித்தாக வைத்துக்கொண்டு, 'வியாபார நிலையை அற்பமும் அபேட்சியாமல் அவர்க்கு மேற் சொல்லியவாறு ஒரு அறுதியான வேதன விகிதம் அளித்துவரும் அம் முறையின்படி, தொழிலாளர் குழாங்களை ஆங்காங்கு நியோஜித்து ஆதரித்து வருவது எவ்வரையிற் கைகூடுவதா யிருக்கும்?

கஈ தொழிலின் தேவையை லட்சியம் செய்யாமல், வேதனங்களின் விகிதத்தைத் திட்டஞ் செய்தல் எவ்வரையினும் கை கூடும்? என்பதுதான் முதற்கேள்வி யென்று நான் கூறுகிறேன்:

ஒரு தேசியதனநாயகன் அவ்வாறு கூலிகளைத் திட்டஞ் செய்து வரன் முறைப்படுத்துவது சிறிதும் சாத்தியப் படாது என்று கூறுவன். எங்கு நின்று கொண்டு, அவன் அவ் வார்த்தையைக் கூறுகிறான்? தலைசான்ற தொழில் முழுமைக்கும், ஏன்? கடைபோயவற்றிலும் பெரும்பாலான வற்றுக்கும் கூட ஏற்கெனவே, வேதனங்கள் செம்மையுற வகுத்துத் திட்டம் செய்யப்பட்டு இயன்று வரும் இப்பூதலத்தின் பரப்பில் நின்றுக்கும், வேதனத்தை நியதஞ் செய்வது சாத்தியமில்லை என்று அவன் கூறுகிறான். என, மானுடனுடைய அபத்த பஞ்சாங்கத்தில் இதனிலும் பார்க்க விந்நியாஸமான ஓர் செய்தி தென்படுதல் அரிதாயிருக்கும்.

ஏலங்கூறித் தொலைச் சரக்குகளை, டச்சுக்கார ரனைய வருக்கு நாம் விற்றுவருகிறோம். அதுபோலே,நமது பிரதம மந்திரி ஸ்தானங்களையும் நாம் ஏலங்கூறி விற்பனை செய்கிறோமில்லை. அப்படியே மடாதி பத்தியங்களை விநியோகஞ் செய்தலால் கிடைக்கிற தர்ம வாட்டாதாயங்களால் பலவாறான அனுகூலங்கள் பிறக்கலாந்தான். இருந்த போதிலும், ஒரு மடாதிபதி இறந்து விடுகிறான் என்றால், அவன் ஆட்சி செய்து வந்த அந்த மாகாணத்தை ஒப்படைப்பதற்கு, யாரினும் குறைந்த குத்தகைக்கு அந்தப் பட்டத்தைச் சூட்டிக்கொண்டு உட்காருகிற தம்பிரானைப் பார்த்து நாம் இது காறும் தேடித் திரிந்தது கிடையாது. தர்ம கர்த்தாக் களின் பதவிகளை நாம் விற்றல் புரிகின்றோம். நிஜந்தான்! ஏன்? தேசிய தனாதாயத் துறையில் நமக்குக் கைவந்துள்ள நுண்ணிய தேர்ச்சிக்கு இதனிலும் வேறு சான்று காண் பரிதாம். என்றாலும், ஸேனாதிபத்ய பதவிகளைத் தொட்டு இன்னும் அத்துணை பகிரங்கத்துக்கு வந்தாகவில்லை. நோயால் நலியும்போது ஒரு சவரனுக்குக் குறைந்து மருத்துவஞ் செய்ய இணங்குகிற பண்டிதன் யாரானும் இருக்கிறானா என்று நாம் விசாரணை செய்துகொண் டிருக்கிறதில்லை. வியாஜ்ஜியம் தொடுக்கவேண்டி யிருந்தால் ஆறு வெள்ளியும் (ஷில்லிங்கும்) எட்டுப் பென்னியுமா யிருந்த தட்சிணையை நாலும் ஆறுமாகக் குறைத்திட வேண்டுமே யென்று நாம் சிந்தனை தானும் செய்கிறதில்லை. புயன்மாரியிலே சிக்கி நனைய, ஆறு பென்னிக்கும் மலிவாக ஒரு மைல் தொலைக்குச் சவாரி கொண்டுபோக ஒப்புவான் யாரானும் தட்டுப்படுதல் கூடுமோ என்று திட்டமாக முடிவுசெய்யும் பொருட்டு ஒவ் வொரு வண்டிக்காரனிடமாகச் சென்று சென்று நாடியைத் தாங்கி வரமாட்டோம்.

இந்த வியவகாரங்கள் அனைத்தினும், இட்ட பணியை முடித்தலில் நேரக்கூடியதென நினையும் காயக்கிலேசத்தையும், குறித்திடும் உத்தியோகப் பதவியை விரும்பி முன் வரக்கூடிய அபேட்சகர்களையும் முடிவிடத்தில் மேவித்தான் அதாதற்கும் உரிய வேதனம் விதிக்கப்பட்டிருக்கிறது: தடையில்லை. அப்படியே நம்மால் எண்ணிப்பார்க்கக் கூடிய வியவகாரம் எல்லாவற்றிலும் ஒன்று தப்பாமல், இவ்வாறு முடிவிடத்தில் மேவுதல் என்பது நிகழ்ந்து வரத்தான் வேண்டும். வைத்தியத் தொழிலை நாம் எடுத்துக் கொள்ளுவோம். குறித்த அளவிற்கு மனோகாயகிலேசங்களை ஏற்றுத் தாங்கிவந்தால் தான் அம் மாணவரால் அந்த வித்தையைப் பயின்று தேர்ச்சி பெற முடியும். தேர்ச்சி பெற்ற பிறகு, தம் தொழிலை அப்பியசித்து வரும்பொழுது அவரிடம் வந்து குணமடைந்து போம் ஒவ்வொரு நோயாளியும் அவர்க்கு உரிய வைத்திய சம்பாவனை செய்கிறான். நடப்பில் இந்த சம்பாவனை ஒரு சவரனாக இருந்து வருகிறது. இப்பொழுது, சம்பாவனையாக இந்த ஒரு சவரன் கிடைக்கும் என்று உறுதிப்பாடு இருப்பதால் தான், இத்தனை மாணவர்கள் இந்த வித்தையில் பயிற்சி பெற முற்படுகின்றனர் என்று மகாஜனங்கள் நினைத்துக்கொண்டிருக்கின்றனர். அப்படிக்கில்லாமல், அரைச்சவரனே சம்பாவனையாகக் கிடைக்கும் என்று முன் கூட்டியே தெரிந்து கொண்டிருந்த போதிலும், போதிய தொகையினராய மாணவர்கள் அந்த வித்தையைப் பயின்றுகொள்ள முன் வருவர் என்று நினைக்க, தகுந்த ஏதுகரம் இருந்தால், அனுவசியமாய் அந்த அரைச்சவரனை மகாஜனங்கள் உடனே நிக்கிரஹித்து உள்ளே பூட்டி வைத்துக்கொண்டு விடுவர். ஆக இந்த மாதிரியான முடிவான அவஸ்தையில் நின்று நோக்கும் பொழுது, தொழில் பெறும் விலை, எப்பொழு

தும் அதற்கான தேவையின் தரத்தைக் கணக்கிட்டே, உண்மையில் வகுத்துத் திட்டம் செய்யப்படும் என்று சொல்லவேண்டும். ஆனல் ஸத்யப்பலமாக, அன்றாடம் நடப்பை மட்டும் கருத்துட்கொண்டு இவ் விஷயத்தை எவ்வாறு நிர்வகித்து வரவேண்டும் என்பதை ஆராய்வதாயின் அனுத்தமமான சேவை எனத்தகுந்த வெல்லாம் ஓர் அபேதமான அளவை கொண்டே வேதனம் அளிக்கப்பட்டு வந்திருக்கிறது என்று நாம் காண்போம். அந்த நியாயத்தைப் பின்பற்றி, சமஸ்தமான பிரவிருத்திக்கும் அவ் வொப்புமை கொண்டே வேதனம் அளிக்கப்பட்டு வரல் வேண்டும் என்று நாம் தேற்றம் பெறலாம்.

கச "என்ன?" திகில் அடித்துப் போய் வாசகன் இப்படிக் கேட்கலாம் ஒருவேளை. என்னே, "நல்லன் என்றும் அல்லன் என்றும் காணுமல், தொழில்மக்கள் எல்லாவருக்கும் ஒத்தபடியில் கூலி கொடுப்பதோ?"

ஆமாம்! ஆமவேயாமாம்!! ஓதுவாமூர்த்தி ஒருவன் செய்யவல்ல தேவாரப் பிரசங்கத்துக்கும் மற்றொருவன் செய்வதற்கும் இடையே வேற்றுமையே இராதோ? அப்படியே, ஒரு மருத்துவன் செய்யும் நாடி நிதானத்துக்கும் அடுத்தவனுடைய நிதானத்துக்கும் இடையே பேதமே தோன்றுதோ? உள்ளடைவாயிருக்கும் மனோதர்மங்களது அளவைகளாற்காண, இன்ன பெற்றியருள் நல்லவருக்கும் அல்லவருக்கும் இடையே நிகழவல்ல வித்தியாசம் பெரிதாகுமா? அல்லது, நன்ருகச் செங்கல்களை அடுக்கிக்கட்ட வல்லானுக்கும் மாட்டாதவனுக்கும் இடையே தோன்றக் கூடிய வேற்றுமை பெரிதாயிருக்குமா? என்று யோசித்துப் பார்ப்பீராக: இதுவேயன்றி, ஸாக்ஷாத்தாக உங்கள் சொந்தத்துக்குச் சம்பவிக்கக்கூடிய பலப்பிராப்தியையேனும் கருதுங்கள். அப்பொழுதும், எவ் வகையினருக் கிடையே

தோன்ற வல்ல பேதத்தை பிரதானிய மாவதாக நீங்கள் கருதுவீர்? ஒதுவாமூர்த்திகளிலே, வைத்தியர்களிலே, நல்லார் கெட்டார்க்கிடையே இழையும் வேற்றுமையையா, அல்லது செங்கல் கட்டுமானத்தில் தேர்ந்த தொழிலாளிக்கும் அல்லாதவனுக்கும் இடையே நேரும் வேற்றுமையையா? கூறுவீர். மனோதர்மங்களின் அளவைகளால் விரிந்த வேற்றுமை கொண்டிருப்பதும், ஸாக்ஷாத்தாக சம்பவிக்கும் பல பிராப்தியால் அதிக பிராதானியம் பெறுவதும் ஓதுவா மூர்த்தியரிலே—வைத்ய பண்டிதரிலே—நல்லார் பொல்லார்க் கிடையே யுள்ள வேற்றுமை தான் ஆகும்; மற்று, செங்கல் கட்டுவாரில் தேர்ந்தாருக்கும் தேராதாருக்கும் உள்ள வேற்றுமையாக இராது. (என்றாலும், செங்கல் கட்டுமானத்திலும் ஒருவனது கட்டுக்கும் மற்றவனது கட்டுக்கும் இடையே, வெகு ஜனங்கள் கருதக் கூடியதைவிட அதிகமான பேதம் நிகழ்தல் கூடும்.) அவ்விதம் அமைந்திருக்கும்பொழுதும், உனது ஆத்மாவைத் தொட்டுச் சேவை தருவாருள் நல்லார்க்கும் பொல்லார்க்கும், நீ ஒரேவிதமான சம்பாவனைதான் அளித்துக்கொண்டு வருகிறாய். இப்படிச் செய்யும்போது உனது சந்துஷ்டிக்குச் சிறிதும் பங்கம் நேர்கிறதில்லை. ஆதலால் இன்னும் அதிகதரத்தில் சந்துஷ்டி தவழ, உனது மனை தொட்டுச் சேவகம் புரிவாருள் நல்லார்க்கும் பொல்லார்க்கும் ஒப்புடையதான கூலியை நீ கூசாமற் கொடுத்து வரலாம்.

"சே! அப்படியில்லை!! வைத்ய பண்டிதரில் எனது ஆசாமியைப் பார்த்து நான் வரித்துக் கொள்ளவில்லையா? ஏன், ஓதுவாரிலும் எனக்கு வேண்டியவரையே நான் தேர்ந்துகொள்ளுகிறேன். அவரவருடைய வேலைத்திறத்தை நான் எவ்வாறு மதித்து வைத்திருக்கிறேன் என்பதை

இவ்வழியில் காட்டிக்கொள்ளுகிறேனே ?'' ராஜாங்கமாக, கொத்தனுடைய சங்கதியிலும் நீ அப்படியே செய்துவரு கிறதுதானே ! உனக்குப் பிடித்த ஆசாமியாகப் பார்த்து நீ தேர்ந்துகொள்ளே ! ஒரு தேர்ந்த தொழிலாளிக்குச் செய்ய வேண்டியதான யுக்தமான ஸன்மானம் "வரித்தல்" என்பதேயாகும். இதனிலும் பார்க்கத் தகைசான்ற பரிசு பிறிதொன்று காணப்படாது. "ஒவ்வொரு வேலைக்கும் கூலியை ஒரு திட்டமான விகிதத்தின்படி நிச்சயித்து வைத்துவிடவேண்டும். ஆனால், தேர்ந்த'கை'யாயிருப்பா னைப் பார்த்து மட்டும் அவ்வேலையை ஒப்படைத்துவிட வேண்டும் ; தொழிலிற் சண்டியாவான் வினையினின்றும் கழிக்கப்பட்டுக் கழிசடையாக நிறுத்தப்பட்டுவிடவேண் டும்'' என்பதுதான், எல்லா வகைகளாலுமான தொழிலைத் தொட்டு ஆண்டுவரவேண்டியதான இயற்றகுதி தோய்ந்த முறையாகும். இதற்கு விரோதமாக: பொய்யாவதும், அப் பிராகிருத மாவதும், மாணுந்த மாவதும் ஆகிற ஓர் முறையும் உளது. என்னையெனில், "சம்மத மாயின் அரை வாசிக்கூலி பெற்றுக்கொண்டு வேலை செய்ய ஓர் தொழிற் சண்டிக்கு இடம் கொடுத்துவிட்டு அவ்வினைக்கு உரிமை கொள்ளவேண்டிய ஓர் தேர்ந்த'கை'யின் தானத்தை அவ னைக்கொண்டு பொத்திக்கொள்ளும்படி செய்வதோ, அல் லது அத்தேர்ந்த'கை'க்குச் சமமாக அவனையும் போட் டிக்கு விட்டு, அனுசிதமான ஒரு தாழ்ந்த கூலியை வாங்கிக் கொண்டு வேலை செய்வ தல்லால் வேறு புகல் இல்லை என் னும் நிர்ப்பந்தத்திற்கு அத்தேர்ந்தானையும் ஆளாக்கி வைத்துவிடும்படி செய்வதோ சாத்தியமாமாறு ஒரு தொ ழிற் சண்டிக்கு இடங் கொடுப்பதோ ஆகும்,'' என்க.

ஆகவே, இந்த சமவேதனம் தான் இங்கு நமது முதற் குறியாக இருக்கும். ஸாக்ஷாத்தாக இதில் சித்தி

௧௫ பெறுவதற்குத்தான் நேர் செம்பாதையைக் கண்டு நாம் உடனே வகுத்துக்கொள்ள வேண்டும். அடுத்தாற்போல நமது அவாந்தர லட்சியார்த்தமாக அமைவது: உருவாம் சரக்கின் தேவையையொட்டிப் பிறக்கக்கூடிய 'கேள்வி'யைச் சிறிதும் அபேட்சியாமற்படிக்கு பிரதி 'கையாளம்பண்ணை' (ஆலை)யிலும், மேலே கூறியபடி, ஒரு ஸ்திரமான சங்கைகொண்ட ஏவன்மக்களை ஆளுடைமை செய்து ஆதரித்து வருதலாகும்.

பெரும் பாட்டாளியா யிருக்கும் ஒரு ஜாதியின் பிரவிருத்திவியாபாரங்கள் மிகவும் விஸ்தார மானவையா யியங்கும். அவற்றின் போக்கில், அந்தந்தச் சரக்குகளையும் தொடுத்து அந்தந்த வேளைகளில் கிளர்ந்து எழக்கூடிய 'கேள்வி'கள் நினைத்த வாக்கில், வெகு தொலைவான வித்தியாசங்கள் கொண்டவையாய் ஒரு 'வகை தொகை'யின்றிப் பிறந்துகொண்டு வரும். தர்ம நியாயத்தின் ஆட்சி செறிந்தோங்க வல்லதாய், பிருத்ய விதானம் சமைப்பதற்குப் பாதகமாகத் தோன்றும் சாராம்சமான தடை இது ஒன்றுதான் என நான் நம்புகிறேன். இவ்வொரு தடை நீங்கிற்றுனல், கருதவேண்டிய தடைகள் பிறவேதும் ஊன்றி நில்லா. இந்த விஷயத்தில் இப்பொழுது நாம் இறங்கினோமானல், ஒன்றிலிருந்து பலவாக மேலும் மேலும் அது முடிவிலாது கவடுவிட்டுப் பிரிந்து போய்க்கொண்டே யிருக்கும். ஆதலால் அந் நெடிய ஆராய்ச்சியை முடிவு வரையினும் செய்துகொண்டு போவது கையில் எடுத்துக்கொண்டிருப்பது போன்ற ஓர் கட்டுரையில் சாத்தியப்படாது. என்றுலும், அவ் விஷயத்தின் சார்பில் பின்வரும் பொதுவான நியாயங்களை மட்டும் நாம் குறித் தமைக்கலாம்.

வேலை செய்து தேடி வரும் கூலியை வைத்துத்தான் ஒரு தொழில் மகனுக்குப் பிழைப்பு நடக்கவேண்டியிருக்

கிறது. ஆதலால், இடையே முறிவில்லாமல் உறுதியுடன் நெடிது நடந்துவரக் கூடிய ஓர் வேலையைக் காட்டிலும், குறுக்கே முறிந்து நின்றுகொள்ளக் கூடிய வேலையின் பொருட்டாக வரும் கூலி உயர்ந்ததாக இருக்கவேண்டுவது அத்தியாவசிய மாகும். உயர்வா யிருந்தால்தான் தொழிலாளியின் பிழைப்பு நடக்க முடியும். வேலைக்காம் 'பிணக்கம்' எத்துணை கொடியதாக இருந்த போதிலும்,பின்வரும் பொதுச்சட்டம் எப்பொழுதும் வியவஸ்தை கெடாது நின்று வருவதா யிருக்கும். என்னை யெனில், ஒரு வாரத்தில் ஆறு நாட்களுக்கும் வேலை கிடைத்து வரும் என்ற உறுதிப்பாடடைந்த விடத்தில் மன மொப்பி வாங்கிக்கொள்ளுவதினும் பார்க்க அதிகதரமான அற்றைக்கூலி அவர்க்குக் கிடைத்துத் தீரவேண்டும்: நிரந்தரத்தில் ஒரு வாரத்தில் மூன்று தினங்களுக்கு மாத்திரமே வேலை கிடைத்து வரலாம் என்று கணக்குத் தீர்கிற பொழுது என்க. இந்தச் சட்டத்திற்கு ஒருபொழுதும் உலைவு நேரமுடியாது. ஆக, ஒரு வெள்ளிக்குக் குறைந்தால் தொழில் மகனுக்கு ஒரு நாளையக் காலக்ஷேபத்தைக் கழிக்க முடியாது என்று நாம் பாவித்துக் கொள்ளுவோம். அப்பொழுது, ஒரு வாரத்துக்கு அவனுக்கு வேண்டிய அந்த ஏழு வெள்ளியையும், ஒன்று: அம்மூன்று நாட்களிலும் குடல் தெறிக்கக் கோரமாகச் செய்து கொடுக்கும் வேலைக்கு மாறுக அவன் பெற்றுக் கொண்டாக வேண்டும். அல்லது, ஆறு நாட்களிலும் நிதானமாக ஒழுங்குடன் வேலை செய்து வந்து அவன் பெற்றுக்கொள்ள வேண்டும். தற்பொழுதைய வியாபாரத்தின் போக்கோ 'பெரும்போக்'காக இருக்கிறது. இற்றையோரோ வாணிபத்தையும் வேதனத்தையும் ஒன்று போலச் சீட்டுக்கட்டிக் குலுக்கிப்போட்டு, 'மலரும்' சீட்டிலேயே கண் வைத்து வருவர். எனவே, ஓர் தொழிலாளி

யின் கைக்கு நேரக்கூடிய கூலி, குறுக்கே முறித்துச்செய்து வரக்கூடிய வேலையைச் சார்ந்ததாகப் போய்விடும். அவ்வண்ணமே, முதலாளி காணக்கூடிய ஊதியமும், யதிருச்சையால் மிதந்து வரும் கட்டையைப் பிடித்துக்கொண்டு சாகசக்கியமாக நீந்தி அக்கரை சேரும் சாமர்த்தியத்தைப் பொறுத்த தாய் அமைந்திருக்கும்.

வர்த்தகத் துறையில் இன்று நடந்துவரும் ஓட்டசாட்டங்கள் காரணமாக, மேற் சொன்ன இந்த நடைமுறையில்
எந்த பாகத்தை மட்டும் கழித்துத் தள்ள முடியாது
கக்ஙு கிரகித்துத் தீரவேண்டும் எனும் படியான அவசியம் தோன்றலாம் என்பதை இங்கு நான் சர்ச்சை செய்து கொண்டிருக்கப் போவதில்லை என்று திரும்பவும் ஓர் முறை நான் கூறுகிறேன். அம்முறையில் மாணுந்தமாகியும் அதிநீசமாகியும் உள்ள அம்சங்களுக்குத் திட்டமாக இங்குத் தேவை கிடையாதென்றும், ‘பகடை பன்னிரண்டெட்டு’ அடிப்பதில் ஐயன்மார்களுக்குக் கன்றிடும் காதல் காரணமாகவும், அடியவர்களிடத்து அடர்ந்த அறியாமையிருள் காரணமாகவும், அவர்தம் புலனழிகளியின் காரணமாகவும் தான் அந்த கோரமான அம்சங்கள் பிறந்து தோன்றலாயினவென்றும் என் மட்டுக்கு நான் தெளிந்து தேற்றம் பெற்றுக்கொண் டிருக்கிறேன். எனக்கு அது போதும். விளங்க வுரைத்திட, உடையாளியரது செயல்களை இவ்வாறு காட்டலாம்: என்ன தன்மைத்தாயிருந்த போதிலும் சரி, ஊதியம் மட்டும் பயப்பதாயிருக்கவேண்டும்: அச்சந்தர்ப்பங்களில் அற்பமாம் ஒன்றேயும் தம் கை நழுவிப் போவதைக் காண அவர் பொறார்கள்; அதிருஷ்டலட்சுமியின் கோட்டைச் சுவர்களிலே தென்படவல்ல சந்துபொந்துகள் ஒன்றையும் விடாமல் எல்லாவற்றிலும் மோகாவேசத்துடன் முட்டி மோதிக்கொண்டு உன்மத்தரன்ன

இடித்துப் புகுவார்; தத்க்ஷணத்திலேயே குபேரச் செல்வம் படைத்துவிட வேண்டும் எனும் பித்தம் மண்டைக்கொண்டு அங்கு மிங்கும் அலைபாய்வர். மிதமிஞ்சிய அசூயை கொண்டவராய், வழுக்கி, நாசப் படுகுழியில் தள்ளவல்ல தாகத் தோன்றும் ஒவ்வொரு கோளையும் எக்களிப்புடன் எற்றித் தள்ளுவர். உடையவர்களது நிலை இன்னதென ஒருவாறு கண்டோம். இனி, உழைவலரது தன்மையை நோக்கிடுங் கால்:—அன்னார், குடற் பதற நெறிபிடியில் மூன்று நாட்களுக்குள் உக்கிராவேசத்துடன் கர்மங்களைச் செய்து தொலைத்துவிட்டு, மற்றை மூன்று நாட்களிலும் குடித்து விட்டுக் கிழே புரளுதலையே சிரேயஸ்ஸாகக் கொண்டிருப் பர். அதின்றி, ஆறு நாட்களிலும் நிரவி, அந்த வேலையை நிதானமாகச் செய்து கொடுத்து, அதனடியாக அறிவு அவிர்ந்து அரும்பும் விசிராந்தியில் மனம் வைத்திடார். இவ் அமைப்பு நிலைமையிலே, தன்னிடத்திலும் தனது ஏவலரிடத்திலும் தோய்ந்து உறைந்து போய்விட்ட துராசாரங்களைத் தடுத்து நிறுத்துவதொன்று தான் ஏவலருக்கு அவர் தலைவன் செய்யவேண்டிய நற்றுணை யாகும். அதனிலும், அதிகதரத்தில் காரிய சித்தி தரவல்ல உபாயம் வேறு ஒன்றும் அவனாற் காண முடியாது. இதோடு சேர அத் தலைவனாற் செய்யத் தகுந்தன பின் வருவனவும் ஆம்; மின்னென வெட்டி மறையும் லாபங்களின் பின்னே மோகம் பிடித்து ஏங்கி நில்லாமல், எந்த நாளும் உலைவின்றித் தன்னால் பார்த்துக்கொண்டு வர இயல்வதாந் தரத்தில் தன் பிரவிருத்திகளைச் சமைத்து வைத்துக் கொள்ளவேண்டும். அதே சமயத்தில் வாழ்க்கையிலும் வினையிலும் ஒழுங்கான வழக்க பழக்கங்கள் ஏவன் மக்களுக்கும் பிடிபடக்கூடிய வழியிலும் அவர்களை அவன் வழிகாட்டி நடத்தி வரவேண்டும். இங்கு, கைக்

கொள்ளத் தகுவ தாம் உபாயம் அடியில் வருவனவற்றுள் ஒன்ருகும். யாவை யெனில், உயர்ந்த கூலிக்கு ஆசைப் பட்டு நினைத்த நேரத்திலே வேலையினின்று வெளியே தள் ளப்படலாம் என்ற கண்ணியில் விழுந்து தடுமாறுவதிலும் பார்க்க, சற்றுக் குறைவாக இருந்தாலும் ஒரு கிலுப்த மான சம்பளமாகச் சாசுவத காலத்துக்கு வாங்கிக் கொண்டு செய்து வரும் ஜீவனமே மேன்மை பெறுவதாகும் என்று கருதுமாறு எவன் மக்களைத் தூண்டி வருதல் ஒன்று. இது சாத்தியப்படாது என்று தோன்றுகிற பட்சத்தில், உயர் வாகத் தோன்றும் நாம மாத்திர மான அற்றைக் கூலிகளை நச்சி உக்கிர வேலை செய்து இடுப் பொடிந்து நைந்து மா யும் முறையி லுள்ள பற்றுக்கோட்டைத் தளர்த்திவிட்டு, அதன் தானத்தில் ஒழுங்கு பாய நெடிது நடந்து வரவல்ல பணியை ஏற்றுக்கொண்டு, முன்னதினும் சற்றுக் குறை வான கூலிகளில் திருப்தி யடைந்து அவ் வாட்கள் மித ஜீவ னம் செய்து வரும்படி ஏற்பாடு செய்து பார்க்கலாம்.

மேலே கருக்கொள்ளப்பட்ட திருத்தம் இற்றை நிலை யமைப்பை வேரொடு பறிக்கும் ஓர் மகத்தான மாற்றம் என்பதிற் சமுசயம் இல்லை. இத் தகைய நேர் தலை கீழாவதான ஒரு மகத்தான மாற்றத்தைப் பிரதீட்சித் துக்கொண்டு அவலம்பனம் செய்யும் 'ஏருன்'கள் அனை வருக்கும் தன நஷ்டமும் காயக் கிலேசமும் மிகுதி யாக நேரிடலாம். அதனுல், யாதொரு சேதாரம் கைப் பொரு ளுக்கு நேராமலும், சம்பூரண சௌகரியம் வாய்ந்து சிர மம் ஒரு துளி கூடத் தோன்ருமலும், சு காஸனத்தில் இருந்துகொண்டு நம்மாற் செய்து முடிக்கக்கூடிய காரியந் தான்: எல்லாவற்றுக்கும் முந்தி நாம் கட்டாயமாகச் செய்து முடிக்க வேண்டிய காரிய மாகும் என்றே, அல்லது

செய்தா லொழியத் தீராது எனச் சொல்லி நமக்கு ஆணை யிட்டுத் தந்திருப்ப தான காரியம் என்றே ஆகிவிடாது.

ஹிம்ஸாத்மக மான காரியங்களுக்காக ஒன்றுசேர்ந் திருக்கிற மக்களது படைகளுக்கும் அதில்லாமல் கையாண் மையால் பண்டங்களைப் படைத்து வைப்பதற்காக ஒன்றுகூடி யிருக்கிற மக்களது படைகளுக்கும் இடையே இதுகாறும் நிகழ்ந்து வருகிற பேதத்தை நான் ஏற்கெனவே தொட்டுக் காட்டி யிருக்கிறேன். முன்னைய வர் தன் நலந் துறக்கும் தகைமை செறிந்தவ ராயிருக்கின் றார்; பிந்தியவர் அது செறிகின் றிலர்; என்ற இந்தப் புதுமையான செய்திதான் வாஸ்தவமான காரணம்: வேல் எறியும் விருத்தியுடன் ஒப்ப நோக்குகையில், துலாக்கோல் பிடிக்கும் வர்த்தக விருத்தி கணிசம் குறைந்தது என்று பொதுவாக எள்ளப்பட்டு வருதற்கு, என்றும் விளங்கும். ஆனால், சித்தாந்த ரீதியில் ஆராயும் போது, அதற்கு அனுகுணமான நியாயம் யாதொன்றும் இருப்பதாக முத லெடுப்பில் திருஷ்டிக்குப் படாது. ஏன்? அவ்வாறு செய்வது முற்றும் நியாய விருத்த மானதுதான் என்று நிரூபணம் செய்துவிடப் பல நூ லாசிரியர்கள் முயன்றும் பார்த் திருக்கின்றனர். என்னை யெனில், கொள் வினையையும் கொடுப்பினையையுமே தனது வியாபார மாக வகித்துக்கொண்டு, சுத்த சாந்தசீலனும் புத்திமானும் ஆகிற ஓர் புருஷனுக்கு அதிகதர மான கௌரவம் கொடாமல், கலகப்பிரியனும் வெகுவாக அபுத்திமானும் ஆகிக் கொலை யையே பிழைப்பாகக் கொண்டு அலைகிற ஓர் பேர்வழிக்கு அதிகதமமானகௌரவஞ் சூட்டுவது உண்மையில் அவிவேக அசம்பாவித காரியமே யாகும் என்றவாறு. இருந்த போதி லும், இத் தகைய சாஸ்திர விசாரதர்களுடைய யோசனை

யை நிராகரித்துவிட்டு, மானுடம் முழுவதும் சம்மதித்துப் பின் சொல்லிய மானுடனுக்கே அக்கிரதாம்பூலம் கொடுத்து வந்திருக்கிறது.

இதுமுற்றும் நேர்தான்.

ஏனென்றால், தத்துவாம்சத்திலும், சாராம்சத்திலும், ஒரு படை வீரனுக்குப் பிழைப்பாக அமைவது, பிறர் தலையை வாங்குவதன்று. மற்று, தன்னுடைய தலையைக் கொடுக்க என்றும் சந்நத்தமாயிருப்பதே யாகும். இதன் பொருட்டுத் தான் அந்த பிரவிருத்திக்கு அத்தனை உயர்ந்த பூஜ்யதையை இவ்வுலகு கொடுத்து வந்திருக்கிறது; என்று லும், அதனுடைய உள் அந்தரங்கம் இன்னதென்று அதற்கே அறியகிற்பாலதன்று யிருக்கலாம். பிறரைக் கொலை செய்து அதனாலேயே தனது பிழைப்பை நடத்திக்கொண்டிருக்கும் முரடனைக் 'கொலைகாதகன்' 'கிராதன்' என்று தான் இதுகாறும் இவ்வுலகு பேர் சொல்லி யழைத்து வந்திருக்கிறது. ஒரு வியாபாரிக்குக் கொடுத்து வருவதைப் பார்க்க அதிகதரமான கௌரவத்தை இன்ன பெற்றித்தாய ஓர் காதகனுக்கு அது ஓர் போதும் சூட்டிப் பார்த்தறியாது. ஆதலால், ஓர் யுத்த வீரனுக்கு உயரிய பெருமையை அது சாத்தி வருகின்றதெனில், அன்னோன் தனது ஸம்ஸ்தானத்தின் சேவையைமுன்னிட்டுத் தனது ஜீவனையே கையிலேந்திக்கொண்டு போந்திருக்கிறான் என்பதில் தான் அதன் சரியான முகாந்திரத்தை நாம் கண்டு தெளிந்து கொள்ளவேண்டும். இருந்தும், அன்னோன்வன்கண்படைத்த தறிதலையா யிருக்கலாம்;—இன்ப லோலனாக, காமாதுரனாக, ஸாஹஸ பிராந்தனாகப் பவிக்கலாம்.—கருதவல்ல சகலவித மானஉபலட்சியார்த்தங்களையும்க்ஷுத்ர மனோவிகாரங்களையும் அவன் மனத்தில் தரித்துக்கொண்டு, அவற்றினை ஈடேற்

றிக் கொள்ளற்குத் தகுந்த சாதன மாயிருக்கும் என்ற ஒரு நோக்கம் கொண்டே அந்த பிரவிருத்தியை வரித்துக்கொண்டிருக்கலாம். அந்த பிரவிருத்தியில் புகுந்த பிறகு, அவனது அன்றாட நடபடிக்கைகளில் (புற நோக்கிற்கு, முழுவதும் அநந்நியமாக என்றே தோன்றும் வண்ணம்) அந்த உபலட்சியங்களும் க்ஷுத்ர விகாரங்களுமே மிதந்து நின்று பிரதிபலித்துக் கொண்டு வரலாம். இவையெல்லாம் நமக்குத் தெரியாதன வல்ல; தெரிந்தும் தான், உலே விலாது அவனிடத்துக் கௌரவ புத்தியை நாம் நட்டு வருகிறோம். எஞ்சிய வழிகளில் அவனுடைய நடை எவ்வளவு தோஷமாக இருந்த போதிலும் அக்கரை யில்லே: எதிரிகள் வந்து தாக்கித் தன் நாட்டின் அரண்காப்பிலே உடைப்புக் கண்டு விட்டார்கள் என்று சம்பவிக்கட்டும். அப்பொழுது, முன் புறத்திலே யம னேலேயும் கடமையுமே எதிர்ந்து நிற்பவாகப், பின் புறத்திலே இக லோக போக போக்கியங்கள் அனேத்தையும் திரட்டிக் கையி லேந்தி அவனுக்குச் சமர்ப்பிக்கத் தயாராகக் காத்துக் கொண்டு நீங்களும் நின்று பாருங்கள். அவன், பின் புறமாக உங்கள் மீது ஒரு இமைதானும் கண் சாத்த மாட்டான்; மற்று, நிமிர்ந்து நெடிது நோக்கி, முன் புறத்தில் எதிர்கொண்டு நிற்கும் சாக்காட்டையும் கடமையையுமே விழித்துப் பார்த்து மார்பு கொடுப்பன்: என்ற இந்த சங்கதியில் அப்பழுக் கில்லாமல், நமது மனத்தில் திருட நிச்சயம் ஊன்றிப் பதிந் திருக்கிறது. முடி விடத்தில் தீர்ந்து தெளியப்படுகிற இப் பேராயங் குறித்தே, அவனிடத்தில் நாம் அசஞ்சல மான அத்துணே கௌரவ புத்தியை வைத்துத் தரித்து வருகிறோம். இந்த மாதிரியாகத் தன்னேச் சோதனேயிலே பூட்டி நிறுத்தக்கூடிய ஓர் சம்பவம் எந்த நிமிஷத்திலும் பிறந்து தோன்றலாம் என்பதை அவனும் செவ்வையாக அறிந்து தான் வைத்

திருக்கிறான்.—ஏன்? இதற்கு முன்னமேயே, அவன் தனது ஸ்தானத்தில் நின்று பரீட்சை கொடுத்துக் காட்டி விட்டு அதில் தேறியும் வந்திருக்கிறான்.—அத் தகைய ஓர் சோதனை வாயில், காரியவத்தாகக் கணந்தோறும் அவன் நின்றுகொண்டு தான் வருகிறான்; - வாஸ்தவத்தில் அவன் பிழைப்பு 'நித்திய கண்டம்; பூர்ணாயுஸாக'வே இருக்கும்; அவன் 'நித்ய மிருதனா'கவே உயிர் வாழ்ந்து வருகிறான்.

இவனுக்குச் சிறிதும் தாழ்வ தன்று, நீதி விதாய கனுக்கும் வைத்ய பண்டிதனுக்கும் நாம் செய்யும் பூஜ்
கஅ யதை. ஆராயின், அவர்களுடைய தன்னலத் துறவு தான் இங்கும் மூலகாரண மாகிற தென்று காணப் படும். ஓர் நீதி விதாயகனுக்கு நாம் வணக்கம் செய்வது எதை யுன்னி யெனிற் கூறுதும். அவனுடைய கல்வியின் பெருமை கண்டோ, அல்லது மதி நுட்பத்தின் திறம் கண்டோ அவனை நாம் வணங்குதல் செய்கிற தில்லை. மற்று, அவனை அப்படியே வாரி யெடுத்து ஒரு நீதிபதி யின் தானத்தில் வைத்தால், நடுநிலை பிறழாது நியாயத் தீர்ப்புச் செய்து வருவதற்குத் தன்னா லான மட்டும் அவன் பிரயாசை யெடுத்து வருவன்; அதன் காரணமாகத் தனக்கு நேரக் கூடியது யாதாகினும் சிறிதும் பொருள் செய்யான்: என்ற நம்பிக்கை நம தகத்தில் ஊன்றி யிருக்கிற காரணத் தாலேயே அவனுக்கு நாம் சிறப்புச் செய்வா ராகிறோம். அதற்கு இட மில்லாமற் போய், அந்த தானத்தில் ஏறி நின்று கொண்டு, அவன், கையுறைகளைக் கரந்து வாங் கிடும் தகையன் என்றோ, அல்லது, தான் மன்றோரம் செய்து சொல்லும் தீர்ப்புக்களை நீதி சான்றவைபோல் தோன்றும்படி செய்வதிலேயே தனது மதிநுட்பம் அத் தனையையும், சட்டப்படிப்பு முழுமையையும், பயன்படுத் திடும் தகையன் என்றேயோ நம்மால் பாவிக்கக் கூடுகிற

பட்சத்திலே, எத்துணை உயர்ந்த மேதை படைத்தவனு யிருந்த போதினும் அவனுக்கு நாம் ஒரு சிறிதும் மரியாதை செய்யமாட்டோம்; ஏன்? அவனைக் கண்ணால் சீந்தவும் மாட்டோம். நம்மால் வணங்கப் பெறும் அருகதையை அவனுக்கு வென்று தரவல்லது அடியில் வருவது ஒன்றேயாம். அவனுடைய வாழ்க்கை வினைகளில் தலையாய வனைத்திலும் வைத்து அக்கிர ஸ்தானம் கொடுத்து அவனால் போற்றி வரப்படுவது **அறம்** என்பதாகவே யிருக்கும்; மற்று அவனுடைய சொந்த யோக க்ஷேமங்களை அவன் அப்புறந்தான் பார்த்துக் கொள்ளுவன்: என்று, நமது அந்தரங்கத்தில் திருட நிச்சயம் செய்து கொள்ளும்படியாக அவன் நடந்து கொள்ளுதலேயா மென்க. வேறு எதன் காரணமாகவும் அவனுக்கு அந்தத் தகுதி வந்தடைந் திடாது.

நாம் கௌரவம் கொடுத்து வருவதற்கு உரிய நியாய பூர்வம், மருத்துவன் சார்பில் இன்னும் தெளிவாகத் துலங்குகிறது. அவன் எத்துணை உயர்ந்த சாஸ்திர விசாரதனுகவேனும் இருந்து கொள்ளட்டும்; பரவாயில்லை. தான் சாஸ்திர பரிசீலனை செய்து பார்த்துக் கொள்ளற்கு வாய்த்த நல்ல பரீட்சா பாத்திரங்கள் என்ற பாவனையை வகித்தே தன்னை யண்டும் நோயாளிகள் அனைவரையும் அவன் கருதி நடத்தி வரும் பெற்றியன் என்று நம்மால் ஊஹிக்கவேனும் சாத்தியப்படுகிற தானால், அந்தக் கணந் தொட்டுக் கொடுங் கூற் றன்ன அவனைக் கண்டு வெருண்டு நாம் பதுங்கிக்கொண்டு விடுவோம். என்றால், இதினும் பார்க்க இன்னும் ஒருபடி அதிகமாம் தறுகண் கொண்டு, அண்டிய வியாதியஸ்தருடைய சாக்காட்டால் (பொருள்) நலம் பெறக் காத்திருப்பாரிட மிருந்து மறைவாக லஞ்சங்களை வாங்கிக் கொண்டு, மருந்து கொடுக்கும் பாவனையாய் அந் நோயாளியருக்கு நஞ்சை யூட்டி வருதலிலேயே தன் கைவரிசையின்

முழுச் சிறப்பையும் பிரயோகித்து வரக்கூடும் என்று ஓர் சம்சய லேசத்திற் கேனும் இட மிருக்கு மாகில், நாம் என் னென்று அவனைக் காண்போம் என்று கூறவும் வேண் டுமோ?

கடைசியாக, ஒரு ஒதுவா மூர்த்தியின் வியவகாரத் திற்கு வரும் பொழுது, இந்த நியாயம் ஸ்பஷ்டதமமான ரீதியில் பிரதிஷ்டை பெற்று விளங்குவதா யிருக்கிறது. ஏனென்றால், "என்னுயினும் சரி: உட் செறிந்திடும் மனோ தர்மம் யாதொரு களங்கமு மில்லாமல் தூய தாயிருக்கிறது" என்ற ஒரு காரணத்தைக் கொண்டு மற்று முள்ள ஸமஸ்த மான தோஷங்களையும் பரிகரித்துக் கொண்டவராகிவிட்டார் என்று பிறரை நாம் ஒப்புக்கொள்ள மாட்டோம். தத்தம் அப்பழுக் கற்ற மன நிலையின் செப்பத்தால் தன் கலையைப் பயிலாத குற்றத்தை ஒரு வைத்திய பண்டிதனும், வியவ கார ஞானமும் மதிநுட்பமும் படைத்திராத குற்றத்தை ஒரு நீதி விதாயகனும் பரிகரித்துக்கொண்டு நிர்த்தோஷி களாகத் திகழ்கிறார்கள் என்று ஒருபொழுதும் நாம் உள் ளஞ் சமைந்து சம்மதிக்க மாட்டோம். ஆனால், ஒரு ஓது வா மூர்த்தியின் சங்கதி இதனினின்றும் முற்றும் வேறு பட்ட தாக இருக்கிறது. அவன் அறி வாற்றல்களால் எத் துணை சிறுமை செறிந்தவ னாக இருந்தாலும், நாம் மனத் திற் போட்டுக் கொள்ளுகிற தில்லை. மற்று, அவன் முற்றுந் தன்னலந் துறந்தா னகப், "பணி செய்து கிடப்பதே கட னாகக்" கருதி மகிழ்வானாக இருப்பான் என்று பாவித்தே நாம் அவனைப் பாராட்டிக்கொண் டிருக்கிறோம். அந்த உத் தேசம் ஒன்றுக் காகவே அவனுக்கு நாம் சிறப்புச் செய்து வருகிறோம்.

இப்பொழுது, ஒரு வர்த்தகனது வியவகாரத்திற் புகு வோம். ஒரு 'பாரி' வர்த்தக ஸ்தலத்தில் நின்று, அங்குத்

தலைமை வகித்து ஒருவன் நிறைமாட்சி செய்து
௧௬ வருவானாகப் பொலிந்து திகழ்கிறான்; என்றால், காரிய தந்திரம், தீர்க்க தரிசனம், கிருத நிச்சயதை ஆதிய மனோ தர்மங்களது அடைவு அவனிடத்தும் செறிந்து விளங்கும் என்பதற்கு யாதொரு ஆட்சேபமும் இருக்க முடியாது. ஆனால் இவன் அடைந் திருக்கும் இப் பண்புகளும் பிரபாவங்களும், ஒரு பிரபல நீதி விதாயகனிடத்திலோ, ஒரு ஸேனா நாயகனிடத்திலோ, அல்லது சமயாசாரிய பீடத் தமர வல்ல ஒரு 'பண்டார சந்நிதி'யினிடத்திலோ பொலிந்து விளங்கக் கூடிய ஸாமர்த்திய ஸாஹஸ வைபவங்களுக்கு முழுமையும் சம துல்லிய மாக, ஒரு வேளை இல்லாமற் போனாலும் போகலாம். என்றாலும், அதம பட்சம், ஒரு கப்பலிலோ, ஒரு படையிலோ, உப நாயகர்களாகவும், அல்லது நாட்டுப் புறத்திலே குட்டித் தம்பிரானாகவும் நின்று அலுவல் பார்த்து வரும் அன்னவருக்குப் பொதுவாகப் பொருந்தி யிருக்க வேண்டிய தான மனோகுண சாமர்த்தியங்களுட னாவது, ஒப்புமை அமைந்து தோளுக்குத் தோள் கொடுத்து நிற்க வல்லன வாக இருக்கும் என்பதில் யா தொரு ஐயப்பாட்டிற்கும் இடம் தோன்ற முடியாது. எனினும், இன்றைக்கும் சொல்லப்பட்ட அந்த உதார உத்தியோகங்களில் குசல ரென்றால் ஒரு மாற்று உயர் வாகவும், அங்ஙனமின்றி ஒரு வர்த்தக ஸ்தலத்தில் நின்று ஏவன்மாட்சி செய்து வரும் ஒரு தலைவன் தான் என்றால் ஒரு மாற்றுக் கட்டை யாகவும் தான் மதிப்பு வைக்கப்படுகிறது. இப்படிக் கௌரவத்தில் ஏற்றத்தாழ்வு செய்தற்கு மானுடம் முழுவதும் கூடி நின்றே நா ளிது வரைக்கும் சம்மதி யளித்து வந்திருக்கிறது. என்றால், அவ்வாறு அவரவருக்கும் உரிய கௌர வாகௌரவங்களை அவரவாது அந்தக்

கரண சக்திகளை அளந்தே பொது மக்கள் கொடுத்து வந்திருப்பர் என்று சொல்லி விடுவது போதிய சமாதான மாக முடியாது. அவரவரது அந்தக்கரண சக்திகளையும் பார்க்க, ஓர் ஆழ்ந்த இரகசியம் இதனுள் புதைபட்டிருக்க வேண்டு மென்று நாம் ஊகித்துக் கொள்ளலாம்.

'ஓர் வர்த்தகன் எந்த வினை செய்வதாக இருந்தாலும் சரி; அவன் எப்பொழுதும் தன்னலத்தையே கருக்கட்டி வைத்திருப்பன்;' என்பதாக ஒரு தோற்றம் எல்லாவரிடத் திலும் உறைந்து போ யிருக்கிறது. அந்தரங்கத்தில் இந்த திருஷ்டி வேரூன்றி யிருப்பதன் காரணத்தால்தான், 'அக் கிரிய'த்தை மற்றையவருக்கு மக்கள் சமர்ப்பித்து வந்திருக் கிறார்கள் என்று காணப்படும். அவன் செய்துவரும் வேலை சமுதாயத்துக்குத் தவிர்க்கொணாத தாக இருக்கலாம்; இருந் து மென்? தன் நலத்திற்கு ஆக்கம் கண்டு விடலாம் என்ற ஆசை உந்தியதாலேயே, அவ் வேலையில் அவன் ஈடு பட்டு முனைந்து இருக்கிறான் என்பது அனைவர்பாலும் கிருத நிச்சயமான செய்தியாகப் போய்விட்டது. மேலும் "தனக்கு இயன்ற மட்டும், கிடைப்பதை யெல்லாம் சுருட்டி வாரி மடக்கிப் பொத்திக்கொண்டு, அடுத்தவனுக்கு (அல் லது வாடிக்கைக் காரனுக்கு)ப் போய்ச் சேரக்கூடியதில் மண்ணடித்துப் பூசி மெழுகி விடுதற்கும் சாத்தியப்பட்ட வரையிலும் ஒரு கை பார்த்து விடுவதில் ஒரு வியாபாரி எப்பொழுதும் கண்ணா யிருந்து வரவேண்டும்" என்பது தான் மஹாஜனம் தேர்ந்து வைத்திருக்கிற அபிப்பிராய மாக இருக்கிறது. ஒரு வர்த்தகன், பார்க்கும் பிரவிருத்தி ஒவ்வொன்றிலும் இதைத்தான் மூலாதாரமான தத்துவ மாகச் சமைத்துக்கொண்டு ஒழுகிவரல் வேண்டும் என்று அவனை ராஜசாஸன பூருவமாக நிர்ப்பந்தம் செய் திருக்கிறது. 'சரக்கை மலிவாக்கு' வது கொள்ளு

வோனுக்கும், 'எத்தி ஏமாற்றுவது' கொடுப்போனுக்கும் எப்பொழுதும் கடமையாக இருந்து வரவேண்டும்: வர்த்தகத் துறையில் பிரதிஷ்டை பெற்று, என்றைக்கும் உலைவின்றி உலவி வரும் பிரபஞ்ச தர்மம் இது ஒன்றே யாகும் என்று, அதே மஹா ஜனந்தான் நெடுகத் தொண்டை கிழியக் கத்தித் தமுக்குப் போட்டு அறைந்து வந்திருக்கிறது. இன்னும், வாய்த்த வேளைகளில் எல்லாம் இந்த தர்மத்தையே வர்த்தகனுக்கு உரையேற்றி வந்திருப்பது மன்னியில், பரஸ்பரம், தனது சொந்த வினை நடையாலும் அந்த தர்மத்தையே அது நிலை பெறுததியும் வந்திருக்கிறது.—இவ்வண்ணம் எல்லாம் செய்துவிட்டு, அதே மஹாஜனம் கடைசியில் வர்த்தகன் மீது திரும்பக் குதிரையும் ஏறிக்கொள்ளுகிறது. அது செய்து வந்த தர்மோபதேசத்தைப் பரமார்த்த மென நம்பிச் செவிமடுத்து, அதன்படி தப்பாமல் காரியங்களை நடத்தி வந்ததை யல்லால் பிறி தோர் பழியையும், பாவம்! அவ் வர்த்தகன் செய் தறியான். தான் சொல்லி வைத்த தர்மத்திற்கே அவன் ஒரு பழுது மில்லாமல் நடந்து வந்திருக்கிறான் என்பதையும் கவனிப்பதில்லை; மற்று, அவ்வேளை மட்டுக்குத் தன் வயம் இழந்ததாய், என்றும் மீளாத ஓர் இழிவை அவன்மீது ஏற்றி மானுடர் வரிசையிலே கீழ்ப்படிகளில் கிடந் துழலுமாறு அந்த மஹாஜனம் அவனை அழுத்தி வைத்துவிட்டது. மக்களிலே கடைச்சாதியான் என்று அவனுக்கு நெற்றியிலே அது ஓர் பட்டமும் எழுதித் தொங்கவிட்டுவிட்டது.

௨௦ இப்படிச் செய்வதை, ஓர் நாள், நிறுத்திக் கொள்ள வேண்டும் என்று மஹா ஜனங்கள் கண்டுகொள்ளவிருக்கின்றனர். என்றதனால், தன் நலம் பேணுவது என்றேனும் பழி வாங்காது சிறப்புற்று ஒளிரப் போகிறது

என்று கருதப்படாது. உலகுள்ள மட்டும் தன் நலம்பேணும் தகைமை பழித்தற்கு உரியதாகவே தெளிந்து ஊரும் என்பது உறுதி. ஆயின், வர்த்தகமெனனும் அது, முழுவதும் தன் நலமே பெய்யப்பட்டு வடித்த ஒன்ருகத் தான் இயங்கி வரவேண்டும் என்பது கட்டாயமில்லை; மற்று, அது புகுந்து கறைப்படுத்தாது முற்றும் தூய தாயிருக்கும் ஓர் வர்த்தகமும் இங்கு தோன்றி நடைபெறலாம் என்ற உண்மையைக் கண்டுபிடித்துக் கொள்ளுவர். அல்லது இன்னும் ஓர் படி சிறந்து, "வேறு எந்த வகையாகவும் வர்த்தகம் என்பது இங்கு இயன்று வந் திருப்ப தில்லை; இயன்று வரவும் முடியாது; வர்த்தகம் என்று பேர் வைத்துக்கொண்டு, இதுகாறும் நடந்தேறி யிருக்கிற பிரவிருத்தி யெல்லாம் உண்மையில் 'ஆச்சாரக் களவு' (உறவு போல வரும் திருட்டு) என்று சொல்லப்படுமே யொழிய, ஓர் போழ்தும் வர்த்தகம் என்னும் பேருக்கு உரிமை பெறமாட்டாது. இன்னும், ஆதோலிகன் (Autolycus) என்ற ஓர் புன் திருடனுக்கும், பிரஸ்தானம் (Excursion) என்ற காவியத்தில் புகழ் வீச நிற்கும் தீரோதாத்தனுக்கும் எத்துணை தொலை வுளதோ பரஸ்பரம் அத்துணை தொலைவு இருக்கின்றது: இந்நாளைய தேசீய தனதாய சாஸ்திரங்கள் கூறும் தத்துவங்களைக் கொண்டொழுகும்ஒருவர்த்தகனுக்கும்,மற்றப்படி ஸத்ய தர்ம பாராயணனை ஓர் ஸத் வைசியனுக்கும் இடையில். வாய்வல்லமையின் பௌருஷம் விளங்கும் பொருட்டு மனிதர்களோடு உரையாடுதலைப் பயின்று வருவதிலும் பார்க்க, அல்லது விஞ்சிய பராக்கிரமம் விளங்க அவர்களைக் குத்தி மாய்த்து வருவதினும் பார்க்க, குடிப்பிறந்தார்க்கு அதிகமான தகுதியும் கியாதியும் தரவல்லதும், இனி ஒவ்வொரு நாளும் அன்னர் அதிகம் அதிகமாக ஈடுபடுதல் அவசியமெனத் தோற்ற விருப்பதும் வர்த்தகத் துறையே யாம்"

என்றும் மஹாஜனங்கள் இனிமேல் தான் அறியப் போகிறார்கள். அதோடு உண்மையான போர்த்தொழிலிலும், நிஜமான மறை யோத்திலும் மட்டுமே நேரும் என்பதற்கு இல்லாமல், ஸத்திய வர்த்தக விருத்தியிலும் வேளாவேளைகளில் தாமே வலிந்துசென்று "விற்றுக்கோட் டக்கதுடைத்தாய" கஷ்டநஷ்டங்கள் நேரலாம் என்ற துணிபிற்கும் தலைசாய்த்தல் அவசியம் எனவும் அவர் காண்பர்.—கடைமை உணர்வு மேலீட்டால் பிராணனை மட்டும் தான் தியாகம் செய்யவேண்டி வரும் என்ப தில்லை; மற்று அதோடு சேர்த்து 'ரௌப்பியங்'களையும் பலி கொடுப்பதும் தவிர்க்கொணததாகலாம்; சமய பீடங்களுக்குச் சரியாகச் சரக்குச் சந்தைகளும் பிராண தியாகிகளால், 'ஷஹீது'களால் பொலிந்து விளங்கலாம்; அமர்க்களத்தோடு ஒப்ப அங்காடியும் வீர முழக்கங்களால் அதிரலாம்; என்க.

இற்றை நிலையைக் கருதிச் சொல்லு மிடத்துத் தான் மேற் கண்டன வெல்லாம் சம்பவ மாகலாம்,என ஐய நிகழ்சி யாகக் கூறப்பட் டிருக்கிறது. ஆனால், கடை முறை யாம் பேராயத்தினை ஓர்வத்தாயின் சம்பவமாக வேண்டும் என்று தேற்றப் பொருள் தரவே எழுதப்படும். நாளிது வரை இவை யெல்லாம் நிகழாமற் கழிந்து போய்விட்டன; அதற்கு அடியில் வரும் இந்தச் சின்ன விஷயம் தான் காரணம் ஆகும். முதியோர் சதி செய்வாராய், வீரம் ஆலை பாயும் குருத்து நெஞ்சினருக்கு,இதுகாறும்,மற்றைத்துறைகளையே அவ்விளைஞர்தம் நாட்டத்திற் குரிய வெனக் காட்டி உரையேற்றி வைத்துச் சிறு பிராயம் முதற்கொண்டே அவ் வேனைத் துறைகளிலேயே அவரை நுழைத்துச் சிக்க வைத்துப் பிணைத்துப் போட்டு வந்திருக்கின்றனர். நாம் வாழும் இக் காலங்களில், எல்லாவற்றுக்கும் மேலாக அத்தகைய இளைஞர் இறங்கிநின்று உழைக்கவேண்டிய துறை

உண்மையில் யாதாக இருக்கும் என்பதை அம் முதியோர் தமது தெள் ளறிவால் தீர்க்க மாக ஆலோசித்துப் பாராமலேயே, அங்ஙனம் துறை வகுத்து விட்டனர் போலும். இதன் பயனுற் றுன் கீழ் வரும் நிலை அமைதியை நாம் கண்டு வருகிறேும். அதாவது, மறைமொழியொன்றனை எடுத்தோதும் முயற்சியில் தம் முயிரையும் போக்கிக்கொள்ள ஒருங்கியவராய் ஊக்கம் துடிக்கும் ஆண்மக்கள் பலர் முன்வருவா ராயினும், அத் தகைய மறைமொழியின் வாசக மொன்றைத் தம் நடையாற் பயின்று காட்ட முயன்று கைப் பொருளிலே ஒரு நூறு சவரனைத் தாரை வார்க்க மனம் இசைவாரைக் காண்பது அரிதினும் அரி தாயிருக்கிறது.

இதில் நடந்து வந் திருக்கிற சங்கதி என்ன வென்றுல், இதர ஜனங்களைத் தொடுத்து ஒரு வர்த்தகன் பார்த்து வர

உக வேண்டிய விருத்திகளும் கடமைகளும் இன்ன இன்ன வென்று மஹா ஜனங்களுக்கு நாளிது வரைத் தெளிவுற எடுத் துரைக்காம லே யே எல்லோரும் மௌனம் சாதித்து வந்துவிட்டனர் என்பது தான். ஆகவே, இவ் விஷயத்தில் வாசகர் தெள்ளறிவு பெற்று விளங்குவாராயிருக்க வேண்டும் என்று நான் விரும்புகிறேன்.

வாழ்க்கை நடாத்தற்கு நித்தி யாபேட்சைகளாம் சாதனங்களின் தொடர்பாக, இங்குப் பிறந்து இது காறும் இயங்கி வந் திருக்கிற அறிவுத் தொழில்கள் ஐந்தாம். அவற்றுள், மூன்று, நாகரீகம் படர்ந்த ஜாதி ஒவ் வொன்றிலும் நீங்காது நிலவிவரும்.

போர் வீரனது தொழில், அதன் காப்பு ஆகும்.

ஓதுவானது தொழில், அதற்கு எழுத்தறிவித்தல் ஆகும்.

மருத்துவனது தொழில் அதன் நோய் களைதல் ஆகும்.

நீதி விதாயகனது தொழில், அதன் கண் நீதி நிர் வகித்து வருதல் ஆகும்.

வைசியனது தொழில் அதற்குப் படியளத்தல் ஆகும்.

இவர் எல்லாவருக்கும் ஒப்ப முடிந்த கடமை, உற்ற வேளையில், அதன் பொருட்டு உயிர் நீத்தல் ஆகும்.

உற்ற வேளையில்—அதாவது விளங்க வுரைத்திட,

போர்வீரன், சமரில் தன் தானத்தைவிட்டுப் பேர்ந்து போவதினும் பார்க்க;

மருத்துவன், கொள்ளை நோயில் தன் வேலையினின்றும் நழுவிக்கொள்ளுவதினும் பார்க்க;

ஓதுவான், பொய்ம்மையினை எடுத்தோதற்கு இணங்கு வதினும் பார்க்க;

நீதி விதாயகன், அநீதிக்குக் கையடித்துக் கொடுப்பதி னும் பார்க்க;

வைசியன், நல்லது: இன்னவன் உயிர்நீத்தற்குத் "தகுதியாந் தருணம் யாது?"

நம் மனைவருக்கும் ஆதல் போன்றே, வைசியனுக்கும் தலையாய கேள்வி, இது தான்? ஏனென்றால், சாதற்கு
உஉ உரியதாம் சமயத்தைத் தெரிந்து கொள்ளாத அந்த மனுஷ்யன், வாழ்தற்கு உரியதாம் வகையையும் தெரிந்து கொள்ளாதவனாகவே இருப்பன். இது சத்தியம்.

காண்மினோ! ஜாதிக்குப் படியளந்து வைத்த லாக்கும் வைசியனுடைய விருத்தி. (குறுகிய பொருளில் இல் லாது, விரிந்த பொருளிலேயே, வர்த்தகன் வைசியன் என்ற பதங்களைப் பொருள் செய்க. எனவே, வாணிபம் செய்வார் மட்டுமேயன்றி, சரக்குக்களைச் சமைந்திடும்

விசுவகர்மராம் "கையாள"ரையும் அடக்கியே பொருள் கொள்ளுக.) ஓதுவான் பார்த்துத் தீர்க்க வேண்டிய கடமைகளில், 'வரும் தக்ஷிணையை வாங்கி முடிந்து கொள்ளுவதும்' ஓர் கடமை யென்று பாவிக்கப்படாது. அதுபோலவே, படியளந்து வைப்பதால் தன் சொந்தத்துக்கு லாபம் தேடிக்கொள்ளுவது என்பதும் ஒரு வைசியனுக்கு உரிய கடமையாக அமைந்திடாது. தக்ஷிணை கொடுத்தற்கு உரிய அவசியமும் அருகதையும் அவ் வோதுவானிடம் பரிபூரணமாகச் சமைந் திருக்கலாம்; ஆட்சேப மில்லை. என்றாலும், அதனை வாங்குதலைத் தன்னுடைய ஜீவனத்தோடு ஒட்டிய ஓர் உபாதியாகக் கருதிப் பெற்றுக்கொண்டு வருவானேயல்லது, அவன் மட்டும் சொயமான ஓதுவானாக இருப்பனேல், அதனையே தன் வாழ்க்கையின் முழு முதற் பேறாக மதித்து வாழ ஓர் பொழுதும் ஒருப்படான். அப்படியேதான் ஒரு சொயமான மருத்துவனுடைய விஷயத்திலும்: அவனுக்கு அளிக்கப்படுவ தாய வைத்திய சம்பாவனையும் அவனுடைய புருஷார்த்தம் என்று சொல்லக்கூடிய பதவிக்கு ஏறிக்கொண்டு விடாது. இவரை யொப்பவே, ஒரு வைசியனுக்கும், அவன் பெறக்கூடிய ஆதாயம், அவனது வாழ்க்கையின் முழு முதற் குறியாகப் போய்விடப்படாது. ஸத்திய ஸந்தராக மட்டும் இருப்பா ராகுல், இன்ன பெற்றியர் மூவருக்கும் தனித்தனியே பார்த்து முடிக்க வேண்டுவதான ஒவ்வோர் கடமை, "கர்த்தவ்யம் கர்மம்" உளது. ஆக இவற்றைச் செய்யப் புகும்போது, வட்ட ஆதாயங்களின் நினைப்பே அவர்களுடைய மனத்தில் தோன்றக் கூடாது. எதை விற்ருகிலும்,அவர்கள் அக் கடமைகளைக் கைக்கொண்டு தீரவேண்டும்; வட்ட ஆதாயங்களுக்கு இடமில்லாமற் போவதுடன்அதற்குப் பிரதியாக நஷ்டமே வருவ தாயிருந்தாலும், அதனை அவர்கள் தாங்கிக்கொண்டும், அக் கடமை

களை நிறைவேற்றி வைக்க வேண்டும். ஓதுவான் செய்து தீர வேண்டிய தான அக் கருமம் எழுத் தறிவித்த லாகும்; உடற் பேணல் மருத்துவனுடைய நீங்காக் கடமை யாயிருக்கும்; அப்படியே நான் முற் கூறியது போல, ஒரு வைசியனுடைய 'கர்த்தவ்யம் கர்மம்', ஜாதிக்குப் படி யளத்த லாம். தான் கையாளும் சரக்குகளின் நன்மை தின்மைகளை ஆதியோ டந்தமாக முற்றும் தெரிந்து வைத்து, அவற்றைப் பெறுதற்கான அல்லது 'வைப்ப' தற்கான உபாயங்களையும் அவன் செவ்வையாகக் கற்றுத் தேர்ந் திருக்க வேண்டும். கற்றலோடு நில்லாது, காரியத் துறையிலும் புகுவானாய், அச்சரக்குகளை அப்பழுக் கில்லாத நிர்மலமான சுத்த நிலைமையில் அவன் தருவித்தோ அல்லது விளைத்தோ கட்டி வைத்துக் கொள்ளுதலும் வேண்டும்; இவ் வண்ணம் தான் விளைத்தோ, வருத்தியோ கட்டி யிருக்கிற சரக்குகளுக்கு அதிகதம மான தேவை பிறக்கும் இடங்களை ஆராய்ந்து கண்டு, அங்கு கொண்டுபோய்க் கூடுமான வரையிலும் யாதினும் மிக்க மலிவான விலைக்கு அவன் விநியோகமும் செய்யவேண்டும். ஆக, இந்த இரண்டு காரியங்களின் ஈடேற்றத்தின் பொருட்டுத் தான், ஓர் வைசியன் தான் படித்த வித்தையை யெல்லாம் காட்டித் தன் ஸத்துவம் முழுவதையும் பொழிந்து முண்டிப் பார்த்து வரவேண்டும் என்க.

எந்தச் சரக்கையேனும் விளைத்தல் ஆகட்டும்; அல்லது பண்டாரத்தில் கட்டுத லாகட்டும்; அது ஒரு ஜீவன் ஒண்டிக்கை யாக நின்று முடித்து விடுகிற ஓர் காரிய மாக யிராது. மற்று: அவ் வினையை ஆற்றும் கர்த்தாக்க ளாகப் பல ஜீவர்கள் தம்முடைய பல கைகள் கொண்டு துணை நிற்றல் அவசிய மாக இருக்கும். இந்த விதி எல்லாச் சரக்குகளுக்கும் ஒப்பப் பொருந்தும். ஆகவே, தான் பார்க்கும் பிரவிருத்தி

யின் போக்கிலே, ஒரு வைசிய னுவான் மக்களுட் பெருந் திரள்களுக்கு 'ஆண்டை' யாகவும் ஏவற்கோமா னுகவும் பவித்திடுகின்ருன். ஓர் ராணுவ அதிகாரியும், ஓர் சமய குரவனும், இப்படியே தான் தமக்குத் தமக்குக் கீழே யுள்ள ஜனங்கட்கு 'ஆண்டை'களாகவும் 'ஏவற்கோமான்' களாகவும் பவிக்கின்ருர்கள் என்று சிலர் ஆட்சேபிக்கலாம். ஆனல், வர்த்தகன் வகிக்கும் பதவியில் ஓர் விசேஷம் விளங்கக் காணப்படும். அதாவது ஏனை யிருவருடைய சங்கதிகளிலும் பார்க்க, அதிகதரத்தில் வர்த்தகன் தான் ஸாக்ஷாத்தாக ஸ்வாமித்துவமும் நியாமகத்துவமும் வகித்து வருகிற போதிலும், மற்றவரைப் போலஅத்துணை பகிரங்க மாக அவனுடைய இந்தப் பொறுப்புத்தன்மை பிரஸ்தாபத் திற்கு வருகிற தில்லை. இதனல் வாஸ்தவத்தில் வர்த்தகருக் குரிய பொறுப்பு இறை யேனும் நழுவிய தாகாது என்று சொல்லுவது மிகை யாகும். ஆதலால், தன்னை யண்டிப் பிழைத்து வருவார் நடத்தும் வாழ்க்கையின் பெருமைக் கும் ஏனைச் சிறுமைக்கும் அவரை ஏவல் கொள்ளும் வர்த்த கனே உத்தரவாதம் வகிக்க வேண்டும். தான் வாணிபம் செய்யும் சரக்கை யாதினும் அதிக நிர்மல மாகவும் மலி வாக வும் இருக்கும் படி யான வழியில் உற்பத்தி செய்தலைப் பற்றி சதா சர்வதா சிந்தித்துப் பார்த்தலோடு வைசியனு டைய கடமை யெல்லாம் தீர்ந்து போகிறது என்ப தில்லை. மற்று, அச் சரக்கின் விளைவினையோ, தொலை அடைவினை யோ ஒட்டி இயல்பாக நேரும் உத்தியோகங்கள் அத்தனை யையும் அதாதில் ஏவல் கொள்ளப்பட்ட மானுடர்க்கு அதி கதமமான ஹிதம் செய்யவல்ல பான்மையில் சமைத்திடற் குரிய வழிகளையும் இடை விடாது அவன் ஆலோசனை செய்து வரவேண்டும் என்றதும் அவனைச் சார்ந்த ஓர் விலக்கொணுக் கடமையே யாமென்க.

உ௩ இவ்வாறாய விருத்திகள் இரண்டனையும் யதாவத்
தாக நிறை செலுத்தி ஏவன்மாட்சி செய்து வருவ
தற்கு ஒரு வர்த்தகன் படைத்திருக்கும் மேதை எத்துணை
உந்நதமாக இருந்த போதிலும் பற்றாது என்றே முடிவதாக
இருக்கும். அவற்றை நிறை செலுத்தி ஏவன் மாட்சி
செய்ய வேண்டுமானால், அதி உந்நதமான மேதை படைத்
திருத்தலோடு பொறுமை செந்தண்மை சாகசக்கியம்
இவற்றையும் அவன் மிக்கக்கொண்டவனா யிருத்தல்வேண்
டும். எனவே இவ் விரண்டு விருத்திகளிலும் ஏவலாண்மை
செய்து ஒப் [illegible] வதற்கு ஒரு வர்த்தகன் தனது ஸத்து
வம் முழுவ [illegible] பொழிந்து உழைத்துவரக் கட்டுப்பட்
டவனாக அ [illegible]. அதேபோல, அவ் விருத்திகளைத்
தொடர்ந்து [illegible] வில் அறம் வழாது அவன் ஒழுகிவரும்
நிலையில், அ [illegible] னையோ அல்லது மருத்துவனையோ
நிகர்த்து, தே [illegible] த்துக் கேட்கும்போழ்து, கேட்
கும் வகைகளா [illegible] ம் தன் னுயிரைப் பலி கொடுக்கவும்
அவ் வர்த்தகன் கட்டுப்பட் டிருக்கிறான். போர் வீரனிடத்
திலோ மருத்துவ னிடத்திலோ இது எத்துணை நிர்ப்பந்த
மான தர்ம மாகப் பாவிக்கப்படுமோ, அதற்குச் சற்றும்
குறையாத நிர்ப்பந்தத்துடன் கூடிய தர்ம மென்று வர்த்த
கன் சார்பிலும் மதிக்கப்பட வேண்டும். படி யளத்தலாகிற
தனது விருத்தியை ஆற்றிக்கொண்டு வரும் முறையால்
ஒரு வர்த்தகன் பிரதிஷ்டை செய்து வரவேண்டிய நியா
யங்கள் இரண்டு என்னலாம். முத லாவதாக உடன்படும்
ஒப்பந்தங்களைப் பழு தின்றி ஒப்பேற்றி வைத்தல்; வணி
கத் துறையிலே விளங்கக்கூடிய சர்வ சித்திகளுக்கும்
ஆணி வேரென்னப் பொலிந் திருப்பது, செய்த உடன்படிக்
கைகளை வியவஸ்தை சிதையாது நிறை வேற்றி வைத்தலா
கும். இரண் டாவதாகப் படி யளந்து கொடுக்கும் சரக்கு,

வைப்புக் குறை தீர்ந்த தாகவும் கசடு களைந்த நிர்மல மான தன்மையின தாகவும் இருக்கும்படி பார்த்துக்கொள்ளுத லாயிருக்கும்.

ஆகவே, தன் உடன்பாடுகளுக்கு மாறுட்டம் செய்ய வோ, அல்லது மடி விழுந்த தாகவோ, கலப்படம் சேர்த்த தாகவோ, அல்லது காலத்தைக் கருத அநீத மாயும் அதிக் கிரம மாயும் அமையக் கூடிய அறக் கொடும் கிரயம் கொண் டோ, தான் விநியோகஞ்செய்யும் சரக்கைக் கழித்துத் தள்ளி விடுதற்கு ஒரு வைசியன் மனம் கோங்க ... ாது. அவ் வாறு செய்யும்படி யான நிர்ப்பந்தம் ... ய காலையி லும், சிறிதும் மனம் தாழாது மேற்... ந்த தர்மங் களையே அவன் தன் வாழ்க்கையில் ... செய்யப் பார்க்கவேண்டும். அவ்வாறு தர்ம ... செய்ய முயலுவதன் பயனுக, எத்துணை ... மைக்கோ கிலேசத்துக்கோ அறக் கொடும் ... கோ உள்ளாக வேண்டி நேரினும், சிறிதும் பின் வா ... அவன் அத் தனை கஷ்ட நிஷ்டூரங்களையும் தன் தலைமேற் போட்டுக் கொள்ள வேண்டும்.

**புனஃச:** ஏவ லுடைமை கொண்ட மக்களுக்குத் தான் நியந்தா வாகிற பதவியின் காரணமாக, ஓர் வர்த்தகனுக்கோ

உ௯ அல்லது "கையாளனுக்கோ" ஒரு தந்தையின் அதி காரமும் உத்தரவாதமும் ஸ்பஷ்டமாகச் சித்திப்ப வாகின்றன. ஏனென்றால், முக்காலே மூவீசமும், ஒரு வர்த்தக ஸ்தலத்துக்குள்ளே பிரவேசிக்கிற யுவன் ஒருவ னுக்கு அவனது வீட்டின் அரவணைப்பும் பாதுகாவலும் முற்றும் முறிந்துபோய் விடுகின்றன. அவனது உடைய வனே அவனுக்குத் தந்தையாகச் சமைந்து விளங்க வேண் டும். இன்றேல், நாடும் கைக்கெல்லாம் சளையாமல் தனது

அனுபவமுதிர்ச்சியி லூறிய துணை செய்து வருவதற் குரிய தந்தை யனையார் ஒருவருமே அச் சிறாருக்கு இல்லை என்று ஆகிவிடும். அதோடு கூட, அரைகுறையாகத் தங்கி நிற்கும் குடும்ப வாசனையின் வியாபகத்தைத் தலை கிளப்ப வொட்டாமல் முற்றும் தடுத்துத் தகைந்து விட்டு, அப்பியந்தரத்தில் அதிக வல்லபம் பொருந்தி அவ் யுவாவினை நிர்ப்பந்தம் செய்யும் வன்மை செறிவன அடியில் வரும் மூன்றும் என்னலாம். உடையவனது ஏவலாண்மை; அன்னவன் நடத்தும் பிரவிருத்தியின் பொதுவாய விதானக்கோப்பும் பண்பும்; மூன்றாவதாக, உட்புகும் இளைஞன் அப் பிரவிருத்தியின் நடைவாக்கிலே, நட்புக் கொழுவாது தப்பமுடியாத ஏனை ஏவலா[illegible]து ஒழுக்க நலம், என்பன. அப் பிரவிருத்தியில் இருந்[illegible]ரும் மட்டுக்கும், கைமேல் அதிக ஊர்ஜ்ஜிதம் செறிந்[illegible]ங்குபவை இம் மூன்றுமாக இருக்குமே யல்லது அ[illegible]ஞனின் குலாசார சம்பிரதாயங்க ளாயிரா. அவற்றுக்கு அங்கு அத்துணை வியாபகம் வாய்த்திட முடியாது. இன்று தன்னை யண்டிப் பிழைக்க வந்திருக்கும் ஒரு ஆசிரிதனுடைய தானத்தில், தன் வயிற்றுப் பிள்ளையையே ஒரு வர்த்தகனுக்குக் காலவசத்தால் நியமிக்கும்படி யாகச் சம்பவிக்கிறது என நாம் பாவித்துக் கொள்ளுவோம். அப்பொழுது, அவன்கீழ்க் குற்றேவல் புரிந்து தொழும்பு செய்து வரும் அந்தத் தநயனை அவன் எவ்வாறு ஆளுடைமை செய்து நடத்தி வருவானோ, அதற்குத் துளிகூட வேற்றுமை யில்லாமற் படிக்கு அவனது ஆசிரயத்தில் நின்று வருகிற இதர ஜனங்களாய இத்தனை பேரையும் அவன் ஆளுடைமை செய்து நடத்திக்கொண்டு வரவேண்டும். அப்படி நடத்தி வருகிறேனா என்று ஒவ்வொரு வர்த்தகனும் தன்னையே கேள்வி கேட்டு, நிர்த்தாட்சண்யமாகத் தனது நடையை அறச் சோதித்துப் பார்த்துக் கொள்ள

வேண்டும். தன்னால் வைப்படுகிற நியோஜித ஜனங்களுக்கு, உண்மையில் அறம் வழாத நீதி பாலிக்க விரும்பும் ஒரு நியாமகன் கைப்பற்றத் தகுந்த நெறி இதுவே யாகும்; வேறு யாதும ஆகாது என்க.

தகுதி யென்று புத்திக்குத் தென்படுவதாலோ, அல்லது வேறு புக லின்றிக் கட்டாய மாகப் போய் விட்டதாலோ, தன் சொந்த மகனை ஒரு சாமானிய மாலுமியின் தானத்தில் வைத்து, ஒரு போர்க் கப்பலின் தலை நாயகன் வேலை வாங்குகிறான் என்று நாம் கற்பித்துக் கொள்ளுவோம். அப்பொழுது, தன் கீழ்க் குற்றேவல் புரிந்து வரும் அம் மகனை அவன் எவ்வாறு ஆளுடைமை செய்[illegible] வருவானோ, அவ் வண்ணமே தன் கீழிருந்து அலு[illegible]ார்த்து வரும் அத்தனை ஆட்களையும் அவன் ஆளுடை[illegible]சய்யக் கட்டுப்பட் டிருக்கிறான். இதனை ஒத்தே, [illegible] என்ற கருத்துக்கொண்டோ, அல்லது எதிர் பா[illegible], நிகழ்ச்சி காரணமாக வலுக்கட்டாயமாகப் போகிறதாலோ ஓர் "கையாளம்பண்ணை"யின் தலைவன் ஒரு சாமானிய வினைமகனது தானத்தில் தனது சொந்த மகனையே வேலைக்கு வைத்துவிடுகிறான் என்று இருக்கட்டும். அப்பொழுது தன் மகனிடமாக அவன் செய்துவரும் ஏவன்மாட்சி எத் தன்மைத்தா யிருக்குமோ, அதற்கு இம்மியும் தாழாத பண்பு கொண்டு தன்கீழுள்ள வினைமக்கள் அனைவரையும் ஆள் மாகாணஞ் செய்துவர அவன் கடன்பட் டிருக்கிறான். தேசீய தனதாயத் துறையில் இந்தக் கட்டத்திற்கு உரிமையாவது மேற்கண்ட விதி யொன்றே யாம். அதனிலும் பார்க்க, அதிகமாகப் பயன்தரவல்லதோ, மெய்ம்மை சான்றதோ, அல்லது அனுபவ யுக்த மாவதோ ஆகிற பிறி தோர் விதியைக் காண்பது அரிது.

நடுக் கடலிலே செல்லும் கப்பல் ஒன்று பாறை தட்டி உடைந்துபோய் விடுகிறது என்று வைத்துக் கொள்ளு வோம். என்றாலும், அற்றம் வரைக்கும் அவ் வுடைகப்ப லிலே பதறாமல் நின்று வரவேண்டிய கடமை பூண்டானும், மற்று முள்ள அத்தனை பேர்களும் பத்திர மாய் வேறு படகுகளில் ஏறிக்கொண்டோ, மற்றோ, அதனினின்றும் நீங்கிச் சென்றுவிட்டார்கள் என்று ஐயமறத்தெளிந்த பின் னர்க் கடைசி யாகவே அதனைவிட்டு நீங்கக் கடன்பட்டானும் அக் கப்பலின் தலை நாயகனே யாவான். அதனையொப்பவே, நடுக்கடலில் வைத்து உணவுக்குப் பஞ்சம் தோன்றி க்ஷாமம் வருத்து வரும் காலத்திலும், கையி லிருப்பது கழிந்தால் வேறு கடு கத்தனை உணவுக்கும் வழியில்லை யென்பதை நன்கு அறிந்திருந்தும், தன் கைக்குத் தட்டுப்படுகிற கடை சிக் கவளத்தையும் அத் தலைநாயகன் ஏனையருக்குப் பகிர்ந்து கொடுத்துவிடக் கடமைப்பட்டவ னாயிருக்கிறான். அது போலவே, வர்த்தக உலகிலே ஒரு கொடிய கண்டாந் தமோ துர்த்தசையோ சம்பவித்துவிடுகிறது என்று வைத் துக்கொள்ளுவோம். அப்பொழுது ஒரு 'கையாளம்பண்ணை' யின் தலைவன் செய்யவேண்டுவது யாதெனில், தனது ஏவ லாட்களுக்கு மத்தியில் அவருடன் கைகோத்து நின்று கொண்டு, அவரை வாட்டும் துன்பங்களையும் கிலேசங்களை யும் அவருக்கு முற்றும் சமமாகத் தானும் உடன் பகிர்ந்து கொள்ளுவதாம், என்க. ஏன்? துயர்ப்பாரம் அத்தனையும் தன் பரிசனரது தலைமேற் சாடிவிடாதபடி தடுத்து, அவர் தலையின்மீது சுமையாக வேண்டிய துயர்ப்பளுவின் பெரும் பகுதியை அத் தலைவன் வலிந்துசென்று தன் தலைமேற் போட்டுக்கொண்டு விடவேண்டும். ஆக, அவ் வாறான கஷ்ட காலங்களில், வினை மக்களைவிட மிகமிக அதிகமான கஷ்ட நிஷ்டூரங்களைத் தலைநாயகன் ஏற்றுக்கொண்டு இடி

யுண்ண வேண்டி வரும். வறுமையிலோ, உடைகப்பலிலோ, போர்க்களத்திலோ மாட்டிக்கொள்ள, புதல்வன் பொருட்டு அவன் தந்தை தன்னை முந்திப் பலிகொடுத்துக் கொள்ளுவதைக் காண்க.

உ௫ கேட்க, இவை புதுமையாகத் தொனிக்குந் தான். ஆனால் வாஸ்தவத்தில் இங்கு புதுமை யாவது, இவையும் புதுமை யாகத் தொனிக்கும்படி யாகிவிட்டது என்பதுவே யாகும். ஏனென்றால், இவையெல்லாம் பரம ஸத்தியங்களாகும். தத்துவ மண்டலத்திலே யுக்தியின் கோப்பிற்கு மட்டுமேயோ அல்லது ஒரு சில மாத்திரைகளாலேயோ இவை மெய்போல் மிளிருகின்றன என்று கருதற்க; மற்று அனுபவத்தாலும் அளந்து தேறித் தெள்ளிவைக்கப்பட்டிருக்கிற உண்மைகள் இவை எனக் கொள்ள வேண்டும். ஒரு ஜாதி ஸமஷ்டியின் வாழ்க்கை மேலும் மேலும் உந்நத ஸ்திதிக்கு ஏறி வருவதற்குச் சிறிதும் தடை நேராத வண்ணமாக நமது இயல்வகுப்புச் சமைந்து இருக்க வேண்டும்: என்ற இந்த நோக்கம் கொண்டு ஆராயப் புகும்போது மேற் சொன்னது நீங்கலாக, தேச தர்மத்தைத்தொட்டு நிறுவப்படும் மற்றெல்லாத் துணிபுகளும், ஹேதுமானங்களால் பொய்த்துப் போவன வாயும், அனுமானங்களால் ஆபாஸ மாவன வாயும், அனுபவத்திற்கு அசாத்திய மாவன வாயும் முடிந்து மங்குவன வென்று தெளியப்படும். ஜாதி என்ற வடிவினில், இந் நாள், நம்மனோர்க்கு எவ் வளவில் ஜீவசக்தி துடிக்கிறது என்று காண்பார்: பொது மக்கட்கு உரையேற்றப்பட்டு வரும் இற்றைத் தனாதாய தத்துவங்களை ஒரு தலையாக நின்று ஆட்சேபித்து, எக்களிக்கவும் துணிவு பூண்டு வாழ்கிற அவ் வொரு சில ஆண்மகருடைய மனோ தைரியத்தையும் உள்ளம் நிறைந்த சிரத்தா பலத்தையும் கண்டு அளந்து நிச்சயம் செய்து கொள்ளுவாராக.

ஏனென்றால், இவ்வொரு சில தீரருக்குப் புறமே நமது ஜாதீய ஜீவன் எங்கானும் சிறிதும் பிசிறித் துடிப்பதாகச் சொல்ல முடியாது. இதை விடுத்துப் பொதுமக்களின் சந்தைக் கூட்டங்களுக்கு இன்று உரையேற்றி வரப்படும் தனாதாய தத்துவங்களை மருவி வாழ்தல் ஒன்றே சாலும்: நமது ஜாதியை அதோ நாசப் படுகுழிக்கு நேரே கூட்டிக்கொண்டுபோய்த் தள்ளிவிடற்கு என அறிக. நாச மடைதற்கு, இவற்றினும் பார்க்கச் சிறந்த தாம் ஓர் உபாயத்தை நமது ஜாதி திட்டமாகக் கண்டுபிடிக்க முடியாது. இவற்றால் நேரவல்ல அழிமதிகளின் வகைகளையும் வண்ணங்களையும் பற்றி ஓர் சார்பிலும், மறு சார்பில் இவற்றுக்கு நேர் எதிராவதான ஸத்திய மார்க்கத்தின் வயமாக நிலைபெறவிருக்கும் ஸத் தேசீய தர்மத்தின் எஞ்சிய காரிய பாவங்களைப் பற்றியும் அடுத்து வரும் கட்டுரையில் விசாரணை செய்ய உத்தேசித் திருப்பதால், இங்கு இவ்வளவில் நான் நிறுத்திக் கொள்ளுகிறேன்.

முதல் அத்தியாயம் முற்றிற்று.

ஓம் :

# கடையருக்கும் இங்கு கடைத்தேற்றம்.

## இரண்டாம் அத்தியாயம்.

### தன ரேகைகள்

மூந்திய கட்டுரையில் கண்ட வாய்மொழிகளுக்கு, சாமானியனான எந்தத் தேசீய தனதாயகனும் செய்யவல்ல
உக ஆட்சேபங்கள் பின்வரும் சில உரைகளில் அடங்கி விடும்.

"சமுதாயிக அனுராகங்களது வளர்த்தி காரணமாகப் பொது வகையான அனுகூலங்கள் ஒரு சில கைக்கு வரக்கூடும்; உண்மை தான். பொது வகையால் தோன்றும் அனுகூலங்களை ஆராய்ந்துகொண் டிருப்பதற்காகத் தாங்கள் உட்கார்ந் திருப்பதாக, தேசீய தனதாயகர் முன்பு கூறிக்கொண்டன ரிலர்; இன்றும் கூறிவருகின்றாரிலர். எமது சாஸ்திரம், கேவலம், தனட்டிய னுதற் குரிய வழியைக் காட்டும் வித்தையே யாகும். அந்தத் துறையில், இதனை ஹேதுவாபாஸமான தென்றோ, அல்லது பிராந்த திருஷ்டியுடைய தென்றோ சொல்லிவிட முடியாது. வினையளவாற் பலிதமாக வல்ல வித்தை யென்று இதனை அனுபவத்தாற் கண்டு நாங்கள் தேறிவைத் திருக்கிறோம். அதன் கல்பனைகளையும் கட்டளைகளையும் பின்பற்றுவோர் காரிய ரீதியில் தனட்டிய ராகப் பலிக்கின்றார்கள்; மாறாக, அவற்றை உல்லங்கனம் செய்து ஒழுகுவோர் காரி யாம்சத்தில் தரித்திர

ராகி அலேவா ராகின்றனர். எங்களுடைய சாஸ்திரத்தில் நாங்கள் நிஷ்கரிஷை செய்து வைத்திருக்கிற விதிகளைக் கடைப்பிடித்து ஒழுகிவந்ததன் பயனே, இன்று ஐரோப்பாவிலுள்ள பாரி முதலாளிகள் ஒவ்வொருவரிடத்திலும் நிதரிசனமாக யாரும் காணலாம். அன்னவர்க்கு உடைமையாய்த் திரண்டு குவிந்திருக்கிற அக் கருந் தனம் முழுவதையும், எங்கள் வித்தையின் துணை கொண்டதாலேயே அவர்களால் தேடியடைய முடிந்தது என்று நீர் தெரிந்துகொள்ளக் கடவீர். உபரியும், எங்கள் சாஸ்திர விதிகளை அனுசரித்து வரலால், அவர்களுடைய பாக்கியம் இன்னும் அமோகமாகப் பொங்கிப் பூரித்து வரப்போகிறது என்பதும் உமக்குத் தென்படும். ஆக, கிருதகிருத்யங்களா யிருப்பவற்றின் வல்லபத்தை, தர்க்கத்தின் குயுக்திகளைக் கொண்டு வெற்றி கொள்ளப் பார்ப்பது வீண் வேலையே யாகும். எவ் வழியால் பணம் திரட்டப் படுகிறதென்றும், எவ்வழி அது தொலைக்கப்படுகிறதென்றும், பிரவிருத்தி பரனுன ஒவ்வொரு மனிதனும், சுவானுபூதியால் தெரிந்து வைத்திருக்கிறுன்.''

என்னை மன்னித்திடுக. தம் கைப்பணம் அத்தனையையும் தாமே நேரில் எப்படிக் கொள்ளைகொள்ளை யாகச் சம்பாதித்து வாரிக் குவித்தார்கள் என்பதையும், ஓரோ முகாந்தரத்தை யொட்டி அதனைப் பறிகொடுத்தார்கள் என்பதையும் பிரவிருத்திபரரான மனிதர்கள் எல்லாவரும் தெரிந்து வைத்திருக்கிறுர்கள்; கிஞ்சித்தும் ஸந்தேஹம் இல்லை. நெடு நாட்களாக ஒரே களியை ஆடிக் கைதேர்ந்த ஒரு ஆசாமி அதில் அடையக்கூடிய வெற்றி தோல்விகளுக்கே தமது துறையில் அடைகிற அவர் லாபநஷ்டங்கள், முற்றும் சமமாயிருக்கும். வெகு காலமாக ஒருவகையான சீட்டுக் களியையே ஆடிஆடிப் பார்த்துக் கைவந்த பிறகு, தன் கைச்சீட்டுக்களுக்கு வரும் வெல்வி தோல்விகளை ஒருவன்

மிக வெளிதாக முன்கூட்டியே நிச்சயித்துக் கொண்டு விடலாம். மேற் சொன்ன பிரவிருத்தி பரர்களுடைய சங்கதிக்கும் இதற்கும் கடுகு கூட வித்தியாச மில்லை. இதில் பழகிப் பழகித் தழும் பேறிப் போயிருக்கு மாதலால், தாம் ஆடும் ஆட்டத்தினல் சம்பவிக்க வல்ல லாப நஷ்டங்களை அவர்கட்குத் துல்லியமாக அளந்து நிச்சயித்துக் கொண்டுவிட முடியும். ஆனால், அவர்களுடைய அந்த வல்லபத்துக்கு இம் மட்டோடு எல்லை கண்டுவிட வேண்டும். இந்த சங்கதிக்குப் புறமே நடக்கிற விஷயங்களைப் பற்றி அவர்கள் யாதொன்றும் தெரிய வேலாதவ ராவர். உதாரண மாக, சூதுக் கடைகளில் புரளும் பணங்களுக்குக் 'கருவோலம்' (உண்டியல்கடை)கட்டிவைத்துக் காத்து வருவார் யாவரென்றறிய அவர் ஆற்றகில்லார். அப்படியே தமது கையிலுள்ள, அதே சீட்டுக்களைக் கொண்டு இன்னும் வேறு என்ன ஆட்டங்களெல்லாம் ஆடலாம் என்பதை அறிவதற்கும் அவர்களுக்குச் சமர்த்துப் பற்ருது. தவிர, தகதக வென்று லஸ்தர்கள் எரியும் தமது மாட கூடங்களில் வைத்துப் பிறக்கும் லாப நஷ்டங்களைத் தொடுத்து, வெகு தொலைவில் இருள் துன்னி அட்டுப் பிடித்துப் போ யிருக்கிற தெருக்களில் வைத்துக் கண்ணுக்கு மறைவாயிருந்தாலும், காரிபத்துக்குக் குறைவில்லாமல் சம்பவிக்கவல்ல இதரலாப நஷ்டங்களைப் பற்றி யாவது அவர்களால் யா தொன்றும் அறிந்துகொள்ள முடியாது. வணிக தனுதாய வித்தையைக் குறித்து ஒரு சில, விதிகளை அவர்கள் பாடம் பண்ணியிருக்கிருர்கள் ; அவ்வளவுதான்; அதிலும் அவ் வொரு சிலவற்றுக்குப் புறம்பே அவர்களுக்கு யாதொன்றும் தெரியாது. ஆனல், தேசிய தனுதாய சாஸ்திரம் என்று சொல்லத்தக்க ஒரு வித்தை சம்பந்தமாக அவர்கள் அடைந்திருக்கிற ஞானம் 'பூஜ்ஜியம்' தான். (ஒன்றுமே யில்லை.)

எடுத்த உடனே, அத்தியாச்சரியமான ஒரு விசேஷம் கிளர்கிறது. பிரவிருத்தியில் அத்துணை ஈடு
பட்டு மூழ்கிப் போயிருக்கிற அந்த மனிதர் "தனிக"
௨௭ என்ற சொல்லின் பொருளை அரிதினும் அரிதிலேயே அறிகின்றனர் என நான் காண்கின்றேன். அச் சொற்பொருளை அவர் அறிவர் என்று ஒப்புக்கொள்வதா யிருந்தாலும் கூட, அவர் செய்கிற விசாரணைகளில் அதனைத் தெரிந்து கொண்டவராகத் தம்மைக் காட்டிக் கொள்ளவில்லை யென்றாவது, குறைந்த பட்சம் நாம் கூறவேண்டும். ஏனென்றால், 'தெற்கு வடக்கு' என்பனபோல "தனிகர்," "தரித்திரர்" என்பவும் இரட்டைக் கிளவிகளே யாமென்றும், "தெற்கு" என்னும் போது கூடவே "வடக்கு" என்பதும், கருவாய் உள்ளடங்கித் தோன்றாதுதோற்றி வருதற் போல, "தனிகர்" என்னும் போதும் "தரித்திரர்" என்பதும் கூடவே உள்ளடைவாகிக் கருவா யுறைந் திருக்கும் என்றும் அன்னார் ஒரு பொழுதேனும் ஒப்புக்கொண்டு பேசி யிருக்க வில்லை. தனத்தைப் பற்றி விவகரிக்கும் போது, கிட்டத்தட்ட எல்லா வேளைகளிலும், 'பர மைகாந்த'மான ஒரு முழு முதற் பொருள் அது என்ற பாவனை கொண்டவராய்த் தான் அம் மனிதர் வழக்காடி வருகின்றனர். அதோடு சேர்த்து, (தமது) விக்ஞான சாஸ்திரத்தில் விகிதமாகக் காணப்படும் சில கட்டளைகளை ஏற்றுக்கொண்டு காரியம் நடத்தி வந்தால், ஒருவன் தப்பாமல் பூதலத்தி லுள்ளார் அனைவருமே ஒன்று போலச் செல்வம் கொழிக்கும் சீமான்களாகப் பொலிதல் முற்றிலும் சாத்தியம் என்பதும் அவர்களது துணிபு என்ன வேண்டும். அவர்களது உரைகளையும் விகிதங்களையும் காணும்போது, இவையே அறியக் கிடக்கின்றன வாஸ்தவத்தில், வைத்யுதத்தை (மின்சாரத்தை)ப் போன்ற ஓர் சக்தி மாத்திரமேயாகும் "தனம்" என்பதும். 'விருத்தி

க்ஷயங்'களால் அல்லது 'பாவாபாவ'ங்களால் வந்தடையும் வலிமையைக் கொண்டு தான் வைத்யுதம் இயங்கிவர வேண்டியிருத்தல் போலவே, தனம் என்பதும் இயங்கிவர வேண்டும். உனது "ஜேபி"யிலே நீ வைத்திருக்கிற ஒரு சவரனுக்குச் சித்திக்கக்கூடிய பிரபாவம் முழுமையும், உன் பக்கத்தி லுள்ளவனது "ஜேபி"யில் அது இல்லா திருத்தலையே சார்ந் திருக்கிறது. அதனைத் தொட்டு அவ னுக்கு அபேட்சை யிருந்திராத பட்சத்தில், அதைக் கொண்டு நீ யடைய வல்ல பயன் யா தொன்று மில்லை. ஆகவே, அதனைத் தொட்டு அவனிடத்தில் பிறக்கக்கூடிய ஆவசியகத்தையோ அல்லது விருப்பத்தையோ நீ அளந்து கணக்குச் செய்வதன் மூலமாக உன்னுடைய சவரனுக்கு வாய்க்கக்கூடிய வல்லமையின் மாத்திரையை நீ துல்லிய மாக நிச்சயித்துக்கொண்டு விடலாம்.—ஆதலால், வணிக தனதாயகர் கூறும் பொருளுக் கிணங்க, உன்னைச் சீமானுக் கிக் கொள்ளும் வித்தை யென்பது, தத்துல்லியமாக உன் அயலானை 'ஆண்டி'யாக அமுத்தி வைக்கும் வித்தை யென்றே தப்பாமற் சமைந்து கொள்ளும்.

சொல்லப் போகும் இந்த சங்கதியில், அல்லது வேறு எந்த சங்கதியிலும் தா னுகட்டும்.—நான் அமைக்கிற பரி பாஷா பதங்களைச் சுவீகரித்துத் தீரவேண்டும் என்று ஒரு பிடியாகச் சாதிக்கிற வழக்கம் எனக்கு இல்லை. என் றுலும், பிரஸ்தாபத்தில் இருக்கிற இரண்டு வகையான தனதாய வித்தைகளுக்கும் உள்ள பே தாபேதங்களைத் தெளிவாகவும் ஆழம் முழுமையும் கண்டு துலக்கியும் வாச கர் தெரிந்து வைத்துக்கொள்ள வேண்டும் என்று நான் விரும்புகிறேன். அவற்றைப் பகுத் தறியத் தோ தாயிருக் கும் பொருட்டு நான் கொடுத் திருக்கிற, "தேசீய" (Political) "வணிக" (Commercial) என்ற இந்த இரண்டு அடை

களும் பொருத்த மற்றவை யாக மதிக்கப்படா வென்றும் நான் துணிகின்றேன்.

'தேசீய தனதாயம்' என்பது ஒரு **ஸம்ஸ்தானம்** முழுமைக்கும் சேர்த்தோ அல்லது அதன் குடிமக்கள் அனைவருக்கும் மொத்தமாகவோ போந்த ஆதாய மாகும்.
௨௮ தகுதியான் யாதினும் மிக்க பருவத்தையும் நிலத்தையும் கண்டு, வண்பயன் குன்றாததோ அல்லது இன்பம் பொழிவதோ ஆய பொருள்களைப் படைத்துத் தருதலும் சேர்க் கட்டலும் விளம்பலும் ஆகிற முத் தொழில்களோடு 'தேசீய தனதாயம்' ஒடுங்கி விடும். பருவம் பார்த்துத் தாளறுத்துப் போர் வேயும் வேளாளன் என்ன; வைரம் பாய்ந்த கட்டையிலே ஆணிகளைச் சிக்கென இறுக்கிச் செம்மையாகத் தரையிடும் கப்பற் றச்சன் என்ன: அழுகி நன்றாகத் துவைந்த சாந்து பூசிச் செங்கல்களை வைத்துக் கட்டி வரும் கொத்தன் என்ன: கூடத்தையும் மனைகளையும் ஜோடனை விதானங்களையும் தூசடித்துத் துடைத்து, அடுக்களையில் ஒரு சிறு பண்டத்தையும் சிதறிப் பாழ் செய்யாமற் கண்காணித்துப் பேணிவரும் மனைக்கிழத்தி என்ன: முறை தப்பாது சாரீரத்தைச் சாதகம் செய்து வந்து ஹத்துமீறி சாரீரக்கட்டை உடைத்துக் கொள்ளாமல் என்றும் நிதானத்துடன் இனிமையாகக் கானஞ் செய்து வரும் ஒரு பாடகன் என்ன: இவர்கள் அனைவரும் தேசீய தனதாயகர்களே யாவர். பரமார்த்த ஸத்திய நிலை நின்று போந்தது, இத் துணிபு என்று மதித்திடுக. தம்மைப் படைத்த ஜாதியின் செல்வத்திற்கும் இன்ப வாழ்விற்கும் இவ ரனைவரும் இடையறாது ஆக்கம் கண்டு தருவா ராகின்றனர்.

ஆனால் 'வணிக தனதாயம்' என்பது, "வட்டம்," அல்லது "வேதன"த்தைக் குறிக்கொண்டு இயங்கும்

ஆதாய மாகும். 'பிறரிட மிருந்து பணி தீர்த்து வாங்கிக் கொள்ளுதற்கான உரிமையோ அல்லது ஏவலாண்மையோ சட்டத்தின் வலுவாலோ அல்லது அறத்தாற்றுனே வியக்தி களின் கையில் ஈண்டு அடைபட்டு நிற்றலையே' அவ்வணிக தனதாயம் குறித்துக் காட்டும். ஆக இங்ஙன மாய பாத்தியம் ஒவ்வொன்றும் பாராட்டப்படும் தொறும், ஒரு கையில் எத்தனைக் கெத்தனை செல்வமோ அல்லது உரிமையோ பொங்கிப் பொருமக்கூடும் என்று துணிய இடமிருக்குமோ, அத்தனைக் கத்தனை வறுமையோ அல்லது கடனே அடுத்த கையில் துன்னிக் குமைந்து புழுங்குதற்குக் கூடவே இடஞ் செய்யப்பட்டு விட்டது என்றும் நாம் பாவித்துக் கொள்ள வேண்டும்.

ஆதலால், அத் தகைய தனதாயம் தோன்றி நடை பெறுகிற ஒரு ஸம்ஸ்தானத்தின் நிதரிசன சொத்துக்கோ, அல்லது அதன் சுக வாசத்திற்கோ ஓர் ஆக்கம் புதி தாக வந்து அடைந்திருக்கும் என்று நாம் உறுதியாக அனுமானித்துக் கொள்ளுதற் கில்லை. என்றாலும், இவ் வகையான வணிக சம்பத்தை அல்லது ஏவலாண்மை உரிமையை அனேகமாக எல்லாக் காலங்களிலுமே, நினைத்தாற்போல 'பிரத்தியட்ச' சொத்துக்குப் பிரதியாக மாற்றிக்கொண்டு விடலாம்; ஆனால், அப்படியே 'பிரத்தியட்ச' சொத்தையும், ஏவல் வாங்கும் உரிமைக்குப் பதிலாக நினைத்த மாத்திரத்தில் எல்லா வேளைகளிலும் மாற்றிக் கொண்டுவிட முடியாது. காரிய அமைதி இவ் வண்ணம் இருப்பதனால், நாகரீகம் படிந்த ஜாதிகளில் வாழும் பாட்டாளிகளாம் மனிதரது வழக்காறிலே, தனம் என்பது பொதுவாக எப் பொழுதும் வணிக சம்பத்தையே குறிப்பதாக முடிந்துவிட்டது. ஆகவே, தங்களுடைய சொத்து சுதந்தர உடைமைகளுக்கு விலைமதிப்புப் போடும் பொழுது, தம் பெட்டியி

ளுள்ள சவரன்களைக் கொடுத்தால் எத்தனை புலங்களும் குதிரைகளும் வாங்கலாம் என்று கணக்குப் பாராமல், தம்முடைய நிலபுலங்களையும் குதிரைகளையும் கொடுத்தால் எத்தனை சவரன்கள் கிடைக்கும் என்று பண அளவையால் அவர்கள் கணிப்பா ராகின்றனர்.

உக இவ் வழக்காறு மக்கள் மனத்தில் உறைந்து போவதற்குப் பிறிதோர் காரணமும் உண்டு; அதாவது, வணிக முறையால் சித்திப்ப தாகிற, 'பிறரைப் பணிவிக்கும் வன்மையையும்' கூடவே அவன் அடைந்து கொள்ளாத பட்சத்தில் பிரத்தியட்ச சொத்தை ஈட்டி வைத்துக் கொண்டு அதன் உடையாளி துளி பயன் கூடக் காண மாட்டான். இவ் வுண்மையைப் பின் வரும் திருஷ்டாந்தத்தால் விளக்கலாம். ஒரு பெரிய 'மிராசு' இருக்கிறது. அதனைச் சார்ந்த நிலபுலன்கள் அத்தனையும் பொன் கொழிக்கும் வளத்தாற் சிறந்து விளங்குகின்றன. அதனிடத்துக் காணும் சாரற் கண்டங்களின் பொற்றைகளில் செழிய செம்பொன் பாத்தி பாத்தியாகப் படுத்துக் கிடப்ப தாயிருக்கின்றது. அதன் மேய்ச்சல் தடங்களில் மந்தை மந்தையாக மேயும் கன்றுகாலிகளோ கணக்கில்லாதன வாயிருக்கின்றன. இன்னும், வாழ்மனைகட்கோ, சுற்றுச் சிங்காரப் பூஞ்சோலைகட்கோ, வண்பயன் தரும் தனதானியங்கள் நிறைந்த சேர்கட்கோ அங்கு யாதொரு குறைச்சலும் இல்லை. எல்லாம் ஸம்ருத்தியாக நிறைந்து பொலிவுற்று இருக்கின்றன. இப்படியாகச் சகல வைபவங்களும் சிறந்து சோபிக்கும் அந்த மிராசு முழுமையும் ஒற்றை மனுஷ்யனுக்கு உடைமை செய்யப்படுகிறது என்று நாம் கருதிக் கொள்ளுவோம். அதோடு, இவ்வளவிருந்தும் அங்கு வேலைக்காரன் ஒருவன்கூட அகப்படுதல் அருமை யென்றும் இருக்கட்டும். இந் நிலைமையில், அந்த மிராசு தாரனுக்கு

யாரானும் ஒரு வேலைக்காரன் அமைய வேண்டுமென்றால், அக்கம்பக்கத்தில் ஒருவன் மிடியாளனாகவும், அம் மிராசுதாரன் கைவச மிருக்கும் பொன்னிலோ—அல்லது தானியத்திலோ அபேட்சை வைத்திருப்பவனாகவும் கட்டாயமாக இருந்து தீரவேண்டும். அவ்வாறு மிடி மூத்து ஏங்கியலை வாராக ஒருவருமே அங்கு தோன்ற வில்லை; அவன் குவித்துக் கொட்டி வைத்திருக்கும் தனதானியங்களில் ஆசை வைத்தாவது அவனை அணுக நினைவாரும் இலரென்று முடிகிறது. எவ் வழியானும் ஒரு வேலைக்காரன் அவனுக்கு அமைகிற தாயில்லை. எனவே, தனது உணவுக்கு வேண்டிய ரொட்டியை அவனே சுட்டுக்கொள்ள வேண்டியிருக்கிறது. புனையும் ஆடைகளையும் அவன் தன் கைகொண்டே நெய்து தரித்துக் கொள்ளவேண்டும். தனது நிலத்தைத் தானுகவே உழுது பண்படுத்திக் கொள்ளவேண்டும். அப்படியே, அங்குள்ள ஆநிரைகளை மேய்த்துக் கட்டுதலும் அவனே நேரிற் செய்து முடிக்கவேண்டிய வேலையாகப் போய்விடும். அந்த ஸ்திதிக்கு வந்துவிட்ட பிறகு, அவன் பொன்னைக் கொண்டு என்ன பயன் பெறுவன்? அவனது நிலங்களிலே நெடுகக் காணப்படுவதாய மஞ்சள் நிறமான வேறு கற்சல்லிகளைக் கொண்டு அடையக்கூடியதற்குத் துளிகூட அதிகமான பயனை அத்தனை பொன்னைக் கொண்டும் அவன் அடைய மாட்டான். ஆக அந் நிலையில் பொன்னும் கல்லும் அவனுக்கு முற்றும் சமமாகப் போய்விடும். சேர்கள் நிறையவிருந்த சரக்குகளெல்லாம் உளுவும் மடியும் காளானும் அரித்துத் தின்ன அழுகிக்கொண்டிருக்கும் ஒரு புறத்தில். அத்தனையும் அவனது அசனத்துக்கு அவசியமாயிருந்தால் தானே அவை யெல்லாம் பாழாகாமல் பயன்பட்டு வரும். இன்னொரு மனிதனுடைய சாப்பாட்டுக்கு எவ்வளவிற் சாதனங்கள் தேவையாயிருக்குமோ, அவ் வளவில் தான் அவனு

டைய சாப்பாட்டுக்கும் தேவையா யிருக்கும்; அதற்கு மேல் அவனால் அசனிக்க வியலாது. அப்படியே தான், அடுத்த ஆசாமியின் ஆடைக்கு எத்துணை முழம் துணி வேண்டி யிருக்குமோ, அவ்வளவுதான் அவனுக்கும் வேண்டி வரும்; அதற்கு மேல் ஒரு முழத்தைக் கூட அவனுக்குச் சுற்றிக்கொள்ள முடியாது. இப்படியாக, சாமானியமா யிருக்கும் ஜீவ போகங்களை நுகர்ந்து வருதற்குத் தான் என்றாலும், அவன் வெகு பிரயாசை யெடுத்துக்கொண்டு, ஒரு நாள் கூட சுணங்காமல் அரும் பாடுபட்டுப் பல கஷ்ட நிஷ்டூரங்களை யெல்லாந் தாங்கி உழைத்து வரவேண்டும். இல்லாத விஷயத்தில் அவனாற் காலந்தள்ள முடியாத நிலை தோன்றிவிடும். அந்தியம் வரையும் பழுதுபடாமல் வீடுகளைச் செப்பமுறப் பேணி வைத்தற்கோ, அல்லது தரிசில்லாமல் புலன்களைப் பண்படுத்திக்கொண்டு வருதற்கோ அவனுக்குச் சாத்திய மில்லாது போய்விடும். காலாந்தரத்தில், ஒரு ஏழையினது போன்ற சிறு குடிலோடும், அதன்கிட்ட வளைந்த ஒரு சின்னக் கொல்லையொடும் அமைந்து, அப் பண்ணையின் ஒரு ஓரத்தி லிருந்து அவன் காலந்தள்ளி வருவான். அவனது இருக்கையின் சுற்று முற்றும் பார்க்கத் தரிசு போன பாழ் நிலன்களே தென்படும். அவற்றிலே அங்குமிங்கும் கட்டாக் காலிகளும் அடைத்தாளா ஆநிரைகளும் மேய்ப்பாரற்று யதேஷ்டமாகச் சஞ்சரித்துக் கொண்டிருக்கும். ஒரு சார் இங்ஙனமாக, மறு சார் முன்னம் மாடமாளிகைகளும் கூட கோபுரங்களு மாயிருந்தவை யெல்லாம் இடிந்து சரிந்து வீழ்ந்து குப்பைமேடும் குட்டிச் சுவர்களும் ஆகப் படுத்துக்கிடக்கும். இந்த அவஸ்தையிலும், இத்தனையையும் பார்த்து, இக் காண்பன வெல்லாம் தனதுஉடைமைகளாக்கும், என்று பாராட்டிக்கொண்டு அவன் "பரிகாசம் என்றும் சுட்டி வர

வல்ல'' ஒரு பாவையாகச் சமைந்து தோன்றிடான். அத்தனையையும் அந் நிலையிற் கண்டு, தனக்கு உடைமை யாவன என்று சொல்ல அவன் மிகவும் நாணிக் கூசுவன் என்க.

௯௰ மானுடம் முழுவதினும் வைத்து, அத்தியாக்கிரகம் பிடித்த பரமலோபியையும் விளித்து, இந்த நிபந்தனைகளின் பேரில் இவ் வகைத்தான தனத்தை வாங்கிக்கொள்ளுகிறையா? என்று கேட்டால், அவனும் மகிழ்ந்து போய் அதற்கு விரைந்து கைநீட்டி விடமாட்டான். தனம் என்பதன் பேரைப் போர்த்திக்கொண்டு, இங்கு, கண்ணிவைத்துக் கவர்ந்துகொள்ள உண்மையில் நாடியிருக்கும் சாராம்சமான பொருள் மக்களை ஏவலுடைமை கொள்ளுதற்கான வல்லபமே யாகும். 'லகுதம'மான பாவனையிற்காண, சேவகன், வணிகன், கலைஞன் இன்னோரன்னவருடைய ஊழியத்தை நமது சொந்த அனுகூலத்தின் பொருட்டுக் கிரகித்துப் பயன்படுத்திக்கொள்ளுதலா யிருக்கும். அதாஅன்றி தீர்க்கதரமான திருஷ்டி கொள்ளுவதா யிருந்தால், வரை யிலா வகைகளா லான லட்சியார்த்தங்களைக் குறி வைத்து, அவற்றை ஈடேற்றிக் கொள்ளும் பொருட்டுத் தம் ஜாதியில் தோன்றியவர்களில் பெருந்திரளான மக்கட்கூட்டங்களை வழி வகுத்து நடத்திச்செல்லுதற் குரிய பிரபாவம் என்று கூறவேண்டும். (செல்வனது மனம்போகிறவாறு, ஸத்தோ, அஸத்தோ, அல்லது அற்பமோ ஆய குறி நோக்கங்களை முன்னிட்டு அத்தனை பேரையும் ஏவியடித்தற்காம் பிரபாவம் என்க.) தனம் என்னும்போது இவற்றில் தான் நாம் வாஸ்தவத்தில் நாட்டம் வைத் திருக்கிறோம். சம்பத்திற்குச் சித்திக்கும் இந்த வல்லபம், அதன் ஆணை செல்லுகிற மக்களது வறுமைக்கு நேர்வாசி வைத்துப் பெருமையோ அல்லது சிறுமையோ பொலிந்து விளங்கும். ஆனால், நமக்கு நிகரான சீமான்களாயும், நாம் நாடிய பொரு

ளது "கோவை" ஒரு வரையுடைத் தாகும்போது, அதன் பொருட்டு நாம் கொடுக்க இசைகிற விலையைத் தாமும் கொடுத்து வாங்கிக்கொள்ள ஒருங்கியவர்களாயும் இருப்பாரது தொகைக்கு எதிர்வாசி வைத்தும் அச் சம்பத்தின் வல்லபம் பெருமையோ அல்லது சிறுமையோ அடைந்திருக்கும். இப் பொழுது, இசை வல்லான் ஒருவன் இருக்கிறன் என்றால், அவனது கானத்தைக் கேட்டுச் சம்பாவனை செய்யும் தகையாளனுய் அங்கு ஒரே ஒரு பேர்வழி மட்டும் இருந்துவரும் வரைக்கும், அப் பாடகன் அற்ப வேதனத்துக்கும் இசைந்து கானம் செய்வன். ஆனல், அவனுடைய கானத்திற்குத் தட்சிணை யளிக்கவல்லார், இருவர் அல்லது மூவராக இருப்பரே யானல், அதிகதமத்தில் தனக்கு தட்சிணை தருகிறவருக்குத் தான் அவன் கானம் செய்வான். இவ்விதமாக, சம்பூரண காந்தி பெற்றுச் சோபித்து வருகிற பொழுதும் கூட அளிப்பானது கைப்பொருளது மாண்பு, சதாசர்வதா, ஐயுறவுக்கே இடம் தருவதாயும், நிகிருஷ்டமாகவும் தான் இருந்து வரும் என்று கீழே ௩கூ-ாவது ரசனையில் நாம் காணவிருக்கிறோம்.—ஆக, பிரஸ்துதத்தில், செல்வத்தின் பிரபாவம், இரண்டு பொருள்களை ஆசிரயித்து நிற்கும். முதலிடத்து, அந்த கானவித்வான் தாரித்திரயனுயும் தனத்தில் அபேட்சையுள்ளவனுகவும் இருக்கவேண்டும்; இரண்டாவதாக, ஒத்த சீமான்களாயும், அவனது பாட்டுக் கச்சேரியில் ஸ்தானத்தை அபேட்சிக்கிறவர்களாயும் உள்ளாரது தொகையையும் அது ஆசிரயித் திருக்கும். ஆகவே, மேற் சொல்லியது போல, தனிகனுக்கும் வித்தை என்பதற்கு, அமோகமான செல்வத்தை நம் கையிலே கட்டித்தரும் வித்தை என்று மட்டும் கூறி நின்றுவிடுவமாயின், நாம் அதற்கு முற்றுப் பொருள் கூறியவராக மாட்டோம்; மற்று, அதற்குரிய

அர்த்தத்தில் அர்த்த பாகத்தை மட்டுமே விளம்பியவ ராவோம். ஆனால், அதோடு சேர, நமது அல்லயலில் இருப் பாரது கைப்பொருளுக்கும் உலைவைத்துக் குழியும் பறித்து விடும் வித்தை என்பதையும் சொல்லிவிட்டால், அந்த வித்தையின் அர்த்தத்தைச் சம்பூரணமாக நாம் கிரகித்துக் கொண்டவராவோம். இவ்விரண்டு பகுதிகளும் சேர்ந்த பொழுது தான், 'தனிக'னுகும் வித்தை முற்றுப்பொருள் சமைய விளங்கும். துல்லியமாகப் பதப்பிரயோகம் செய்வ தாயின், "தன்னலத்திற்கு உறுதி செய்யும் வழியால், அதிகதம பேதத்தை நிலைபெறுத்தி வைக்கும் வித்தை" என்பதே சால்பாகும்.

இப்படி பேதம் நிலைபெறுதலால், ஜாதியின் ஸமஷ் டிக்கு அநுகூலமே விளையுமென்றே, அல்லது பிரதிகூலமே விளையுமென்றே ஒரு வகையாகத் தீர்த்து வரைப்

௩க படுத்திக் கூற வொண்ணுது. இத் தகைய ஏற்றத் தாழ்வுகள் அவசியம் அனுகூலம் புரிவனவா யிருக்கும் என்ற துணிபு தடித்தன மாவதும் அஸங்கிய மாவதுமாம் என்றே கூறப்படும். தேசிய தனதாயத் துறையைத் தொட்டு, மகா ஜனங்களினட நிலவிவரும் ஹேது வாபாஸங்களில் முக் காலே மூவீசத்துக்கும் இவ் வேமாந்த துணிபே தான் மூல காரணமா யிருக்கும். ஏனென்றால், இந்த வியவகாரத் திற்கு விகிதமா யிருக்கிறதாகி ஸகாதந மாவதும் ஸ்வப்பிர சித்த மாவதுமான விதி யாதெனில், இவ் வேறுபாடுகளால் நற் பயன்கள் தோன்றுவது, முதலிடத்து அதில் சித்தி யடைதற்குக் கையாளப்பட்ட சாதன மார்க்கங்களையும், பின்னிடத்து அதைப் பிரயோகம் செய்வதற்கு முன் நிறுத்திக்கொண்ட காரியார்த்தங்களையும் சார்பு கொண் டதா யிருக்கும், என்றவாறு. அநீதமான முறைகளைக் கொண்டு, தனத்தின் தாரதம்மிய நிலைகள் அமைக்கப்

பட்டவா யிருந்தால், அவை பொலிவுற்றிருக்கும் அந்த ஜாதிக்கு, அவை பிரதிஷ்டையாகி வந்த காலம் முழுமையும் அபஹாரமே செய்து வந்திருக்குமென்று நாம் உறுதியாகக் கொள்ளலாம். அங்ஙனம் நிலைபெற்ற பின்னர், நியாய விருத்தமான காரியங்களைக் குறித்தே பிரயோகிக்கப்படுவன வாயு மிருந்தால், அவை நின்று வரும் நாள் அத்தனையிலும் உபரியும் இன்னல் இழைத்து வருவன வாயுமிருக்கும். ஆனால், நீதியின் நிலைநின்று, சம்பத்தின் பேதஸ்திதிகள் அமைக்கப்பட்டன வாயின் அமைதி பெற்று வந்த காலம் முழுவதிலும் அந்த ஜாதிக்கு அது ஹிதமே புரிந்து வந்திருக்கும். அதோடு உதாரமாக உபயோகிக்கப் படுவதா யிருந்தால், அப் பேத நிலைகள் நின்று வரும் நாள் அத்தனையிலும் அந்த ஜாதிக்கு மேற்கொண்டும் நற் றுணை புரிவனவாயு மிருக்கும். விளங்க வுரைத்திட, தாழாத கருமமும் கோடாத கோலும் நிலவ வாழ்ந்து வரும் ஒரு ஜனத்திடை, அதி லடங்கிய வியக்திகளின் ஆற்றல் பலவாறுய மாறுபாடுகள் கொண்டிருக்கும். அவனவனையும் சம்பூரண பிரயாசையுடன் வினையாற்றித் தரும்படி விடுத்துச் சோதிப்பமானல், அவனது பலாபலங்களையும் எடைபோட்டு நாம் நிறுத்து வைத்துக்கொண்டு விடலாம். அப்படியே, எண்ணரிய வகைகள் கொண்டு முளைத்தெழுகிற தேவைகளை அவன் சம்மாளித்துக் கொள்ளுகிற சமர்த்தை நோக்கியும் அவனது ஆற்றலின் தனியான குண விசேஷத்தையும் நாம் நிர்ணயித்து விடலாம். இப்படி நிதானிக்கப்படுகிற நானுவிதமாய வியக்தி பலங்களால் தோன்றும் பலசித்திகள் சமதை யற்றவாகத் தான் இருக்கும். இருந்த போதிலும் பேதமான பல ஸ்வரங்கள் சம்மேளனம் அடைந்த ஓர் பண்ணது எழிலொடு அவை அத்தனையும் திகழ்வனவா யிருக்கும். தோன்றும் இந்த பல சித்திகளைக்

கண்டு அதாதன் தரத்திற்கும் சேவகத்திற்கும் உரித்தான வாறு பரிசோ அல்லது அதிகார வல்லபமோ வழங்கப் படும்.† அங்ஙனமின்றி, மடியாண்மையோ அல்லது மாறு

† "தொழிற் சண்டியாவான் உபேக்ஷித்துத் தள்ளப்படவேண்டும்" என்று முதற் கட்டுரையில் கண்ட வசனத்தைத் தொட்டுப் பல தடவைகளில் என்னை இவ்வாறு கேட்கின்றனர். "ஆயின், உபேக்ஷையால் தள்ளி வைத்திருக்கிற தொழிற் சண்டியைக் கொண்டு நீ என்ன செய்யப்போகிறாய் ?" என்று. நல்லது: இதற்கு முந்தியே இந்தக் கேள்வி உங்களிடத்தில் நின்று உதித்திருக்க வேண்டும் என்று எனக்குத் தோன்றுகிறது. உன் வீட்டில் வேலை செய்து வந்த பணிப்பெண் வெளியே போய்விட்டதால், அவள் தானம் காலியாக இருக்கிறது. அந்த வேலைக்கு, ஒரு ஆண்டுக்கு இருபது சவரன் என நீ வழக்கமாகச் சம்பளம் கொடுத்து வருவாய். ஆக, அவ் வேலையை நாடி உன்னிடம் இரண்டு பெண்கள் வருகின்றார்கள். ஒருத்தி தாவள்ளியமாய்த் துவைத்த சுத்தமான ஆடைகளைத் தரித்துக்கொண்டு வந்திருக்கிறாள். மற்றவள் அழுக்காடைகளைக் கட்டியவள். முன்னவள் தகுந்த 'சிபாரிசு' கொண்டு அங்குப் போந்திருக்கிறாள். மற்றவளுக்கு ஒன்றுமே இல்லை. என்றிவ்வாறான நிலையில் அவ் விருவரும் உன்னிடம் வந்திருக்கிறார்கள். எதன் மத்தியில், பதினைந்து சவரனுக்கோ, அல்லது பனிரண்டுக்கேயோ உடன்படுவாளா என்று கேட்டு, உடன்பட அழுக்காடை அணிந்தவளை நீ வேலைக்கு வைத்துக்கொள்ளுவது வழக்கமில்லை. ஏன் ? இப்படிச் செய்வதும் ஒருவழிதான் என்பதே உனது கருத்துக்குத் தென்படாது என்று இருக்கும்பொழுது, கூலியை ஏலத்தில் விட்டு ஒருத்தியோடு ஒருத்தியைப் போட்டி போட்டு ஏலங்கூற விடுத்து, முடிவில், இருவரையுமே, பனிரண்டு சவரனுக்கு ஒருவளையும் எட்டுக்கு மற்றவளையுமாக அந்த இருபது சவரன் சம்பளத்துக்கு ஏவலுடைமை கொண்டிட நீ நோங்கமாட்டாய் என்று தனியாக எடுத்துச்சொல்ல வேண்டியதில்லை. அவ்வாறு நீ செய்தல் அரிதினும் அரிது. இந்த விடத்தில் நீ செய்யும் காரியம் யாதெனில், குறித்த பதவிக்கு அதிகதாத்தில் தகுதி பெற்றாளைத் தேர்ந்துகொண்டு, மற்றவளை வெளியே அனுப்பிவிடுத

படுகோலோ கொண்டு முடங்கிக்கிடக்கும் ஒரு ஜாதியிலோ வென்னில், அதோ கதியின் சோபான வரிசைகளாலும் துரோகம் கொழித்த கெலிப்புக்களாலும் காரியப்

லாகும். அதற்குமேல் நீ யாதொன்றும் செய்கிறதில்லை. இப்பொழுது இத்துணை ஆத்திரம் பொங்க வினவும் நீ, "அம் மற்றவளது கதி என்னும்?" என்ற கேள்வியை நிகழ்த்தி அப்பொழுது யோசித்திருக்கவேண்டியது உனது கடமையாக இருந்தாலும், அவ்வாறுய விஞக்களை அநேகமாய் அந்த கட்டத்தில் வைத்து நீ கிளர்த்திக்கொண் டிருக்கிறதில்லை. அதை யொப்பவே, உன்னை நான் இங்கு கேட்டுக்கொள்ளுவ தெல்லாம், உனது பரிசனரை ஆளுடைமை செய்து வருகிற பந்தாவில் உனது தொழில் மக்களையும் ஆண்டு வரவேண்டு மென்பது தான். எனினும், "உனது தொழிற்சண்டியும் சோம்பேறியும் தூர்த்தனும் ஆவானைக்கொண்டு நீ செய்ய விருப்பதென்ன?" என்பது பாரமான ஒரு பிரசினை தான் என் பதிலும் ஆட்சேப மில்லை.

ஆதலால் தத்க்ஷணமே அதனைக் கையாளுவோம்: பனிரண்டு ஏடுகளை கொண்ட ஒரு கட்டுரையின் கண்ணதாக, ஒரு ஜாதி முழுமைக்கும் சேர்ந்து அமைதி பெறவல்ல வர்த்தகம், உத்யமம் ஆக இரு துறைகளிலும் நிறுவவேண்டிய சம்பூரண நிர்வாகத்தைப் பற்றிச் சாங்கோ பாங்கமாக எடுத்தோதல் சாத்தியப்படுகிற காரிய மில்லை என்பதை மட்டும் நினைவிலிருத்திக்கொள்ள வேண்டுகிறேன். அதோடு தடியரையும் மடியரையும் ஆண்டடக்கும் விஷயம் சிறிது கஷ்ட சாத்தியமானது என்று நான் வாய்திறந்து இங்கேயே ஒப்புக்கொண்டு விடுவேன். என்றால், இனியாவது, சாத்தியப்படுகிற மட்டுக்கும், அத் தடியரும் மடியரும் அரிதிலேயே தோன்ற வல்ல மார்க்கங்களையும் உபாயங்களையும் கண்டுபிடித்து அவற்றைச் சமைத்துக் கொள்ளுதல் உண்மையிலேயே, ஆன்ற அறிவுபடைத்த தாயிராதா என்று நீவிர் சிந்தித்துப் பார்ப்பீராக.'கையாளம்பண்ணை' களில் வைத்து மற்றெல்லாச் சரக்குகளும் 'வைக்கப்'பட்டு வெளியேறுவது எங்ஙனம் உண்மையாகுமோ முரடரும் ஆலைகளில் வைத்து உற்பத்திபெற்று வெளியே அனுப்பப்பட்ட கைச்சரக்காகவே இருக்கிறார்கள் என்பதும் அத்துணை பரமசத்திய மாகும்.

பட்டதாயும் அவற்றுக்கே சிறப்புரிமை கொண்டதாயு மிருக்கும் ஓர் துர்க்கடமான சம்பிரதாயம் - தாஸத்துவமும் 'தானாதிபத்திய'மும் விரவியதாய், பொலிவடைந்து கண்ணை உறுத்திக்கொண் டிருக்கும். இன்னும், நாட்டம் அனைத்தும் ஒத்து ஓடும் ஸஹசரங்களான சக்தியினடியாகப் பிறந்து இசை நிரம்பித் தோன்றும் ஏற்றத் தாழ்வுகளைப் பேர்த் தெறிந்துவிட்டு, அவற்றின் தானங்களில், கோரமாம் அநியாயம் அடர்ந்த பிரபுத்துவங்களை ஒரு கொம்பிலும், பழியும் 'பெரியவ'ளும் படர்ந்த பரிபவங்களைப் பிறிதோர் கொம்பிலும் அந்த துர்க்கடமான சம்பிரதாயம் ஊன்றி வைத்துவிடும்.

இவ் வகையால் நோக்க பூதபிரகிருதி வாய்ந்த உடம்பில் நிகழுகிற ரக்த ஓட்டத்துக்கு ஒப்பா யிருக்கிறது, ஓர் ஜாதியிடை நிகழும் சம்பத்தின் கதியும் என்னலாம்.

௩௨ ரக்த ஓட்டத்திலே ஓர் துடிப்பும் வேகமும் பிறந்து தோன்றும்; அதற்குக் காரணம் உள்ளத்தின் பூரிப்பாகவோ அல்லது சுகாரம்பமான வியாயாம மாகவோ இருக்கும். அதிலேயே பிறிதோர் வேகமும் துடிப்பும் காணப்படும்; ஆனால், அது லஜ்ஜை அல்லது ஜுரம் காரணமாக

என ஆவாது, வரலாறுகளினின்று தெள்ளிதிற் புலனாகும். ஆகவே அயோக்கியரை வைத்து 'மாரடித்து'த் தந்திரமாகப் பொழுதைக் கடத்திவர ஒரு மார்க்கத்தைக் கண்டுபிடித்து வகுத்துக் கொள்ளப் பிரயாசைப் படுவதை விடுத்து, யோக்கியமான மனுஷ்யர்களைத் தோற்றி ஓம்பி ஓங்குவிக்க வல்ல நெறியை ஆராய்ந்து வகுத்து வைத்துக்கொள்ள முயலுவதே சால்புடையதாக இருக்கும். முன்னம் நமது கல்விச் சாலைகளில் திருத்தம் கண்டு செப்பம் செய்திடுவோமாக; பின்னர், சிறைச்சாலைகளில் நாம் திருத்திச் செப்பம் செய்யவேண்டி யிருக்கிற காரியம் அரிதாகப் போய் விடும் என நீங்கள் காண்பீர்கள்.

பிறந்ததா யிருக்கும். அவ் வண்ணமே, யாக்கையும் ஓர் வீக்கம் கொண்டு விம்மிப்புடைக்கும்; ஆர்வமும் ஆருயிரும் பொங்கித் ததும்பியது காரணமாக அவ் வூத்தம் வாய்ந்திருக்கும். இதல்லாமற் படிக்கு, சீயும் சளியும் சரிய அழுகிச் சொட்டுதற்குப் பூர் வாரம்பமா யிருக்கவல்ல பிறிதோர் வீக்கமும் அதே சரீரத்தினிட மாகவே காணப்படும்.

ஏகதேச உபமானமாகக் கொள்ளாமல் சம்பூரண உபமான மாக இதனைக் கருதக் கடவீர். அதி ஸூக்ஷ்மமான சஞ்சாரங்களிலும் கூடப் பிழைபடாது எல்லா விடத்தும் ஒன்றுபோல இவ் வுபமானம் வியவஸ்தை யுற்று விளங்கி வரும். ஏனென்றால், பிரதக்காக ஒரு இடத்தில் ரக்தம் கட்டிப்போய் உறைவதாகத் தென்பட்டால், அங்கதேசம் முழுவதன் சுகத்துக்குமே ஓர் அரிஷ்டம் பிடித்திருக்கிறது என்பதும் அந்தர்கதமாக அதனுள்ளேயே செறிந்திருக்கும். அதுபோலவே தனத்துக்கும் அரிஷ்டம் கண்டு, பிரத்தியேக ஸ்தலங்களில் போய்த் தேங்கிக்கட்டி நிற்பதனால், அந்த ஸம்ஸ்தானத்துக்கு உயிர்நிலையா யமைந்திருக்கும் ஆதாய மூலங்கள் எல்லாம் ஒருஅளவிற்கு உலைந்து அலைந்து ஆடிப் போயிருக்கும் என்பதும் கருப்பொருளாய்ச் சமைந்திருக்க வேண்டும் என்று முடிவிடத்தில் நாம் காண விருக்கிறோம்.

ஓரிடத்தே தனம் இவ்வாறு கட்டித் தேங்குவதால் அது கனிந்து மேற்கண்ட பயப்பேறாக முடிகிறது என்பதைத் தத்க்ஷணமே தெளிவாய் அறிந்து கொள்ளுதற்கு, காலதேச வர்த்தமானாதிகளைச் சாமாநியதம மாகப் பார்த்து அமைத்துக் கொண்டு, அங்குச் சம்பத்தின் வளர்ச்சி எவ்வாறு நடைபெறுகிறது என்று இரண்டொரு திருஷ்டாந்தங்களைக்கொண்டு நாம் ஆராய்ந்து பார்த்தால் போதும்.

இரண்டு மானுமிகள் கடலில் அடிப்பட்டுத் தப்பிப் பிழைத்து ஒரு நிர்மானுஷியமான திட்டில் வந்து கரையே
றிக் கொள்ளுகிறார்கள் என்றும், கடத்திக் கூட்டிக்
கக கொண்டுபோக நடுவே யாரும் தோன்றாமையால்
தொடுத்த பல வாண்டுகளுக்குத் தங்கள் சொந்தப் பாடு கொண்டே அவர்கள் அங்கு பிழைத்து வரவேண்டும் எனத் தீர்கிறது என்றும் நாம் பாவித்துக் கொள்ளுவோம்.

இருவரும் அரோக திட காத்திரம் பெற்றவர்களாய்ப் பரஸ்பரம் பிரேமை கொண்டு தாழாது உழைத்து வருவார்களாயின், காலகிரமத்தில் வசதியான ஒரு கிரகத்தைக் கட்டிக்கொண்டு, ஓர் அளவிற்கு அங்குள்ள நிலத்தைப் பண்படுத்திப் பயிர் செய்து வந்து, வரும் நாட்களையுன்னி அவற்றில் பயன்பட வல்ல பலவகையான சம்பாரங்களையும் அவர்கள் ஈட்டிக் கொள்ளலாம். இந்த திரவியங்களெல்லாம் பிரத்தியட்ச தனமாகவோ அல்லது உண்மைசம்பத்தாகவோ பொலிந்து விளங்கும். தவிர, அம் மனிதர் இருவரும், ஒருவருக் கொருவர் தாழ் வின்றி, ஒத்தபடியாகப் பாடுபட்டு வருந்தி யுழைத் திருப்பதாகவும் நாம்கிரகித்துக்கொண்டால் அப் பொழுது அந்த உடைமையினைப் பகிர்ந்து கொள்ளற்கோ அல்லது கையாளுதற்கோ இருவரும் சம பாத்தியம் பெற்றவரா யிருப்பர். ஆகவே, இவ் வுடைமைகளைக் கரிசனமுடன் பதனமாகப் பேணிப் போற்றுதலும் பங்குபிரித்துக் கொள்ளுதலு மாகிற இரண்டு விருத்திகளில் அவரது தேசீய தனுதாயம் ஒடுங்கிப் போய்விடும். அனேகமாகப் பின் சொல்லுவதும் நேரலாம். யாதெனின்: பொதுவில் சாகுபடி செய்தலால் 'கண்டுமுதல்' செய்யப்படும் மகசூலின் அளவிலே, சிறிது காலத்துக் கெல்லாம், அவருள் ஒருவனுக்கு மன நிறைவு வாய்க்காமற் போய் விடலாம். எனவே, அந் நாள் வரையும் வெட்டித் திருத்திப் பண் செய்து

பயிரேற்றி வந்திருக்கிற புலன்களைச் செம்பாதியாக இரு வரும் பகிர்ந்துகொள்ள உடன்பட்டு, அப்படியே பிரித்தும் கொண்டு விடுகிறார்கள். அது முதல், அவனவனும் தன் பங்குப் புலன்களைச் செய்கால் செய்து பிழைத்து வருதற் குத் தோதாய்ப் போய்விடும். இவ் வேற்பாடு ஒப்பேறிய பிறகு விதைப்பட்டமோ அல்லது அறுவடைக்காலமோ போன்று எடுபிடியாக வேலைசெய்து தீரவேண்டிய ஓர் நெருக்கடியில், வேலைசெய்ய வேலாதவனுய் ஒருவன் நோய் வாய்ப்பட்டு முடங்கி விடுகிறான் என்றும் நாம் கற்பனை செய்து கொள்ளுவோம்.

தன்னுடைய புலனையும் சேர்த்து விதைத்தோ அல் லது அறுவடை செய்தோ தரும்படி நோயாளி மற்றவனைச் சுபாவமாகக் கேட்டுக் கொள்ளுவன்.

அந்த சமயத்தில், அவனுடைய தோழன் கூறலாம்; கூறும் அக்கூற்று முற்றும் செப்பம் சான்றதாகவும் இருக் கும்;—என்னை யெனில்,"இந்த அதிகப்படியான வேலையை உன் பொருட்டு நான் செய்து தருகிறேன். ஆனல், நீ செய் யத்தக்கதும் ஒன்று இங்குளது. நான் இப்பொழுது செய்து தருகிற இத்துணை வேலையையும் பிந்தி ஓர்நாள் நீயும் என் பொருட்டாகச் செய்து தருவதாக வாக்தானம் செய்து தர வேண்டும். உன்னுடைய கழனியில் உன் பொருட்டு நான் வேலைசெய்கிற காலத்தைக் கணக்கு வைத்துக்கொண்டு வருவேன். உனக்குத் திராணி வந்து எனக்கும் தேவை தோன்றி கேட்டுக்கொள்ளும் பொழுது, அத்தனை காலத் திற்கு என்னுடைய புலனில் நீயும் என் பொருட்டு வேலை செய்து தருவதாக ஒப்புக்கொண்டு எனக்கு ஒரு உடன் படிக்கைப் பத்திரமும் எழுதித்தந்து வைக்கவேண்டும்," என.

தீனனாகி யிருக்கிற மனிதனுடைய நோய் அப்படியே நீடித்துத் தொடர்ந்து நலித்து வருகிறதென்று நாம் மேற்கொண்டும் பாவித்துக் கொள்ளுவோம். எனவே,
௩௪ தொடர்ந்த சில ஆண்டுகளுக்கு, அவ் வப்பொழுது தோன்றும் பருவங்களை யொட்டி ஏற்படும் பல வியாஜங்களைக் கொண்டும், சுகசரீரி யாக இருக்கும் மற்றவனது துணையை அந் நோயாளி நாட வேண்டியவனாக இருப்பான். அப்படித் தேடி யடையும் ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அவன் மற்றவனுக்கு ஒரு உடன்படிக்கை எழுதிக் கொடுத்துக் கொண்டே வருகிறான். அதாவது, தனது தோழன் தன் பொருட்டாக எத்தனை நாழிகை நேரம் வேலை செய்து தருகிறானோ, அத்தனை நாழிகை நேரத்திற்கும் அவன் கட்டளையிடும்போது, தான் வலிமை பெற்றெழுந்த பின்னர், அவன் பொருட்டாகவும் வேலை செய்து தந்து விடுவதாக ஒப்புக்கொண்டு ஒரு பத்திரம் எழுதிக் கொடுத்துக்கொண்டே வருகிறான். எனில், நோயாளி குணமடைந்து, திராணி பிடித்து வேலைக்குத் திரும்ப வரும்பொழுது, அவ் விருவருடைய ஸ்திதிகளும் எவ் வண்ணம் அமைந் திருக்கும்?

அவ் விருவரது ஆட்சிமாகாணத்தை ஒரு 'ஸம்ஸ்தானம்' என்று வைத்துக்கொண்டு ஆராய் வோமானால், சங்கதி வேறாயிருந் திருக்கும் பட்சத்தில் பவித்திருக்கக் கூடியதை காட்டிலும்-இப்பொழுது, அவர்கள் அதிகதரமான ஏழ்மை நிலையிலேயே இருந்து வருவார்கள், என்று நாம் தெளிவோம். இடையிலே, நோயாற் படுத்தவன் ஆரோக்கிய சாலியாக இருந்து செய்திருக்ககூடிய அத்தனை வேலையும் இப் பொழுது அவர்களுக்கு நஷ்டமாய்ப் போய்விட்டது. அதன் அளவிற்கு அவர்கள் ஏழ்மை யுற்றிருப்பார்கள் என்பது மறுக்கொணுச் செய்தியாகும். நோயாளி முடங்கிப் படுத்துக்கொண்ட போதிலும் என்? நேர்ந்த அவசரங்

கண்டு பெருக்கிய ஊக்கத்துடன் அவனது நண்பன் துடியுடன் இருவருடைய வேலையையுமே செய்துவிட்டானே என்பது ஊற்றுக்கு நிற்கவல்ல ஆட்சேப மாகாது. ஏனென்றால் நோயாளியின் வேலையையும் அவன் சேர்த்துச் செய்யாமலிருந்து வந்தால், தன்னுடைய சொந்த சொத்தைப் பேணிப் பார்த்து வருவதில் அவன் அத்தனை காலத்தையும் கருத்தையும் செலுத்தி யிருப்பன். இப்பொழுது அதற்கு வழி யில்லாமற் போய்விட்டதால், அவனுடைய சொந்த சொத்துக்கு அத்தனைக் கத்தனை உலைவினம் உறுதியாக ஏற்பட் டிருக்கும் என்று நாம் முடிவுகட்டிக் கொள்ளலாம். இது எப்படி இருந்தபோதிலும், இரண்டு பேர்களும், ஒத்தாற்போலத் திட சரீரிகளா யிருந்து, பூரண பிரயாசை எடுத்துக்கொண்டு உழைத்து வந்திருப்பார்களே யானால், அவரவர் கையிலும் திகைந்து ஒப்பேறி யிருக்கக்கூடிய சொத்துக்களை விட, இப்பொழுது அவர்கள் கையில் இருக்கும் சொத்து மொத்தத்தில் குறைந்து போயிருக்கும் என்பதில் எவ்வித ஆட்சேபமும் இராது.

ஆனால், பிரஸ்துதத்தில், அவரது பரஸ்பர சம்பந்தா சம்பந்தங்களின் தன்மைகூட முற்றிலும் மாறுதல் அடைந்து இருக்கும். பவிஷ்யத்தில் சில வாண்டுகளுக்குத் தன் மெய்ச் சேவகத்தை மற்றையவனுக்கு முழுமையும் அடகு வைத்தவ னுயிருப்பான். அது, சொல்லாமல், தானுகவே அமைந்துகொள்ளும் சங்கதி. இவ்வொன்றோடு, அவன் கால்கட்டு ஒடுங்கிக் கொள்ளாது. ஏனென்றால், ஆதியில் அவனிடம் எஞ்சி யிருந்த சம்பாரங்களை யெல்லாம் இதற்குள்ளாகவே அவன் அசனித்துத் துடைத்து விட்டிருக்கலாம். ஆகவே, மேற் கொண்டு சில காலம் வரையிலாவது, தன்னுடைய உண்டிக்கும் மற்றவனையே அவன் நாடவேண்டியவனுக இருப்பன். அவ்வாறு நாடி படையும் உணவுப்

பொருட்குப் பதிலாக, திரும்பவும் தன் உடற் சேவகத்தையே அவன் ஈடு செய்து கொடுக்கும்படி இருக்கும். படும் கடனைச் "செலுத்தற்கோ," அல்லது மாறுசெய்து மீளுதற்கோ உபரிஉபரி தன் உடற் சேவகத்தை அடகு வைப்பதல்லால், அவனுக்கு வேறு ஒரு புகலும் இல்லை.

அவன் (நோயாளி) எழுதிக்கொடுத்த வாக்பிரதானங்கள் எல்லாம் ஊர்ஜ்ஜிதம் பெறவல்லன என்று நாம் கிரகித்துக் கொள்ளுவோம்—நாகரீகம் சிறக்கும் ஜாதிகளிடையே சட்ட பூர்வமான உபாயங்களால், அப் பத்திரங்கள் ஊர்ஜ்ஜித முடையன வென்று நிலை நாட்டப்பட் டிருக்கின்றன. ஆயின், இது வரையிலும், இருவருக்கும் சேர்த்து வேலை பார்த்து வந்த அந்த ஆசாமி, மனங் கொண்டால், சொஸ்தமாகக் கால்மேல் கால்போட்டுக் கொண்டு உட்கார்ந்து விடலாம்; விரல் நுனியைக்கூட அவன் அசைக்கவேண்டாது, தான் முற்றும் அநுயாஸத்துடன் உடகார்ந்து கொண்டிருக்கலாம். ஏனென்றால், ஒவ் வொன்றாக இந் நாள் வரையிலும் தன் தோழன் தனக்கு எழுதித் தந்திருக்கிற அத்தனை பத்திரங்களிலும் கண்டபடி, தன்னுடைய வேலையைச் செய்து வருமாறு அவன் ஏவியாண்டு வந்தாற் போதும். அதல்லாமலும் மேற்கொண்டும் தான் கொடுக்க வேண்டி யிருக்கிற உணவுப் பொருள்களுக்கு மனங்கொண்ட மட்டுக்கும், உபரியும் அவனுடைய சேவகத்தை எழுதி வாங்கிக்கொண்டு, அதிற் கண்டபடியும் தனக்கு உழைத்து விட்டு வெளியே போமாறு அந்த மனுஷியன் வேலை வாங்கிக்கொண்டு உட்கார்ந்து இருக்கலாம்.

---

† பணம், "ரிக்தம்" என்பதன் மெய் யியல்பைப் பொறுத்துப் பல பட்சங்கள் இந் நாட்களில் தோன்றி நிகழ்கின்றன. கட்சியாடுவோருக் கிடையே இதனைத் தொட்டு வாஸ்தவத்தில் அபிப்பிராய

ஆதியோடந்தமாக, இந்தமாதிரியான காரி யாவஸ்தையில் விதிவத்தாக வில்லாமல், விதிக்கு விருத்தமாக நடந்
௩-ரு தேறிவிட்டது எனக் காட்டுதற்குரியது கடுகத்தனையும் இல்லாம லிருக்கலாம். அதாவது உலகோர் வழங்கும் பொருளில் வழங்குவதாயின், விதிவிருத்தமான அம்சம் துளி கூடக் காணப்படாது என்க. ஆனால், அவ்

---

பேதம் பிறந்திருப்பதா லன்று, இங்கு இத்தனை தர்க்கங்களும் நடைபெற்று வருகின்றன. மற்று, அவனவனும், ஓரோர் அம்சத்தைப் பிடித்துக்கொண்டு அதற்குமட்டும் உரித்தாகிற அம்சவிருத்தி பாவங்களை முழுமைக்குமே உரியவாகச் சாதித்து வருதலால் தான் இத்தனை முரண்பாடுகளும் முளைத் திருக்கின்றன. யுக்தானுசாரமாகச் சொல்ல, 'ரிக்தம்' என்ப தெல்லாம், கொண்ட 'ருண'த்தை, கடனை, ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுக்கப்பட்ட 'ஒப்புப்பந்தகமே' யாகும். அவ் வளவில் நின்று காண, அது, 'கடன் வல்லான'து தொழில் மேம்பாட்டையும் பவிஷ்யத்தையும் குறித்துக் காட்டலாம்; அல்லது, "கடன் கொண்டான"து மடியாண்மையையும் மிடியாண்மையையும் விளக்கலாம்; என்று நாம் கருதிக்கொள்ளலாம். நாணயச் செலவாணி, 'ஸ்வச்சந்தமான அர்ஹம்' (உள்ளுறும் இயல்பால் தனி விலைமதிப்புப் பெறவல்ல) அல்லது ஊர்ஜ்ஜிதம் சமைய அமைதி பெற்ற தாயிருக்கவேண்டு மென்று கருதி, பொன், வெள்ளி, உப்பு, போன்று சந்தைகளில் தானகவே விலைப் போகவல்ல பண்டங்களை அதன் பொருட்டு வழங்கி வரப்பட்டிருக்கின்றன. இதுகாறும், அவை அவ்வாறு நாணயச் செலவாணியில் வழங்கி வரப்பட்டிருப்பதால் தான், இந்த விஷயம் இத்தனை சிக்கலும் பிணக்கலும் கொண்டு திருகி முறுகிக் கொண்டிருக்கிறது. ஆனால், இதையும் நாம் ஒப்புக்கொள்ள வேண்டும். என்னையெனில், அவ்வாறு ஸ்வச்சந்தமான "அர்ஹதை" வாய்ந்த பொருள்களை நாணய நடையியலில் வழங்கி வரவேண்டியது அத்தியாவசிய மாகவும் இருந்தது என்க. ஜாதி முழுவதும் சேர்ந்துகொண்டு, கேட்கும்பொழுது குறித்த அளவில் சேவகம் செய்து தருதற்கோ அல்லது காண்பித்துத் தருதற்கோ உடன்பட்டு உத்தரவாதம் தாங்கி ஒப்பு வைத்துத்

விருவருடைய தேசியதனுதாயம் வளர்ந்து இந்தப் பருவம் வரை மூத்துவிட் டிருக்கிற இத் தருணம் புதிய மனிதன் ஒருவன் அந்தக் கரைக்கு வருவா னுகில் இருவருள் ஒருவன் வணிகமுறையால் செல்வங் கொழிக்கும் சீமானுகவும், மற்றவன் வறுமை கான்றிப்பற்றும் பஞ்சையாகவும் இருப்பதைக் காண்பான். தவிர, அடியில் வருவதும் அவனது திருஷ்டியில் விழுந்திருக்கும். அதாவது, வாளாவிருந்துகொண்டு தன் காலத்தை யெல்லாம் உண்டுடுத்துறங்குவதிலேயே ஒருவன் போக்கி வருதலையும், மற்றையவனே அவர்கள் இருவர் பொருட்டும் நடந்தாகவேண்டிய வேலைகளை யெல்லாம் தானே ஒண்டியாகப் பார்த்துக்கொண்டு, மறுகணத்தில் இல்லை யென்ருலும் காலாந்தரத்திலேனும் தனது பந்தங்களை யெல்லாம் நீக்கி விடுவித்துக்கொண்டு தன் சுவாதீனத்தை மீட்டிக்கொண்டு விடலாம் என்ற, ஆசை மேலிட்டவனுய் வயிற்றையும் வாயையும்

---

தருகிற ஓர் லிகிதபந்தகம் என்பது தான் கடைமுறையாக, உத்தமமாம் வழியினில், 'ரிக்த'த்துக்கு இலக்கணங் கூறியமைத்ததாக இருக்கும். விலை மதிப்புக்கு ஒரு அளவுகட்டளையாகச் சமையவல்ல தகுதி, ஒரு நாளைக்கு ஒரு மனிதனுற் செய்து முடிக்கப்படுகிற வேலையினிடமே மற்றெவ்வித விளைமதியையும் விட அதிகமாகப் பொலிந்திருக்கும். ஏனென்ருல்,எல்லாக் காலத்துக்கும் ஒன்றுபோலப் பொருந்தக்கூடிய விதமாக ஒரே தரத்ததான பயப்பேற்றை எந்த 'விளைமதி'யினின்றும் நம்மாற் பெற்று வரவியலாது. ஆதலால், ஏதாவது ஒரு 'விளைமதி'யில் குறித்த அளவை வைத்துக்கொண்டு, அதற்கு ஒப்பு வைத்தே மற்றெல்லாம் விலைமதிக்கப்படும் என்று திட்டஞ் செய்வதைப் பார்க்கிலும், ஒரு தினத்தில் ஒரு மனிதன் செய்து தரக்கூடிய வேலையைக் கட்டளையாக வைத்துக்கொண்டு, அக் கட்டளை கொண்டே மற்றெல்லாப் பொருள்களது விலையும் மதிக்கப்பட வேண்டும் என்று திட்டம் செய்வதே சிலாக்கியமாக இருக்கும் என்க.

ஒடுக்கி, அரைவயிறும் குறைவயிறுமாகக் காலந்தள்ளி வரு தலையும் அவன் கண்டு பிரமித்துப்போய் நிற்பன் என்று சொல்லலாம்:

வணிக முறையா லாம் தனத்துக்கும் தரித்திரத்துக்கும் அடிகோலிவைப்பது பல்வேறு மனிதர்களிடையேயும் ஒரு வருக்கொருவர் கூடுதல் குறைவுதலாக இருக்கும்படி அவ ரவரது பொருளுடைமைகள் பிரதிஷ்டை பெறுத லாகும். இவ்வாறுய பொருள் உடைமைகளின் ஏற்றத்தாழ்வுகள், பல வழிகளால், நிலைபெறுத்தப்படலாம். அவற்றிலே ஒரு வழி பற்றி நிலைபெறுத்தப்பட்டஅவ் வேற்றுமையைத்தான் நாம் மேற் கண்ட திருஷ்டாந்தத்தில் பார்த்தோம்; அவ் வளவு தான். நம் கையிலுள்ள அந்த திருஷ்டாந்தத்தையே எடுத்துக் கொண்டாலும், தொடக்கம் தொட்டே, அம் மனிதர்களில் ஒருத்தன் மனஸ்கரித்தே, சோம்பராயிருக் கவும், ஸத்தியாகக் கைமேற் கிடைக்கிற இன்ப வொய்யா ரத்திற்கு ஆசைப்பட்டு அதற்குப் பதிலாகத் தனது ஜீவ னையே அடகு வைக்கவும் உத்தேசித்திருந்து, அதன் படியே ஒழுகிக்கொண்டும் வந்திருக்கலாம். அல்லது, கூறு பாடுகளைத் தெரிந்து செய்யாமல் தன் நிலத்தைக் கூறு கெடுத்துவிட்டு, அதன்மேல் வேறு புக லின்றித் தன் பக் கத்தி லிருப்பவனை அண்டி, வரும் நாளில் தான் செய்து தரவல்ல சேவகத்தை ஈடு செய்து கொடுத்து, வேண்டிய உணவும் துணையும் அவன் கேட்டு வாங்கிக் கொண்டிருந் திருக்கலாம். ஆனல், இது மாதிரி 'உருப்படி'யாகப்பொறுக் கி யெடுத்த வியவகாரங்கள் பலவற்றையும் நீள ஆராயாமல் அவை யனைத்துக்கும் பொதுவாகப் படிந்து விளங்கும்உண் மையை மட்டும் வாசகர் மனத்தில் வாங்கித் தரித்துக் கொண்டாற் போதும். வேறு ஒன்றும் அவரிடமிருந்து நான் இங்கு விரும்புகிறே னிலன். என்னையெனில் எவலே

உடைமை கொள்ளற்குப் பாராட்டப்படும் உரிமையே கரு வி லமைந்திருக்கும் வணிக சம்பத்து பிரதிஷ்டை யாவதால் அந்த **ஸம்ஸ்தானம்** முழுவதற்கும் சொந்தமா யிருக்கவேண் டிய நிதரிசன சம்பத்துக்கு,—அதாவது, சாசுவதமான ஆஸ்திகளும் தன தானியாதி உடைமைகளும் செறிந்து விளங்கும் நிதரிசன சம்பத்துக்கு-உலைவு விளைந்திருக்கும் என்று தெளித லென்க.

பிறிதோர் உதாரணத்தை நாம் எடுத்துக் கொள்ள லாம். சாதாரண வர்த்தகப் போக்குக்கு அதிகதூரத்தில் நெருங்கிய பொருத்த முடைய தாகவும் இருக்கும்
ந.கா அது. ஏகாந்தமான அந்த ஸ்தலத்தில் நடைபெறு கிற அந்தக் குட்டிக் குடியரசை நிர்வகித்து நடத்தி வருப வர்கள், முன் போல இருவரா யில்லாமல், இப் பொழுது மூன்று பெயர்களா யிருக்கிறார்க ளென்று நாம் வைத்துக் கொள்ளுவோம். இன்னும் கரையோரத்திலே செய் காலுக்கு வாகாக அமைகிற நிலங்கள் அடுத்தடுத்தவா யில் லாமல் ஒன்றுக்கு ஒன்று வெகு தொலைவா யிருக்கும்படி யாகவே யமைகின்றன. மேலும் ஒரே வகையான பயி ருக்கே அதாதும் தனித்தனி ஏற்புடைத்தா யிருப்பதால், தன் தன் விளைவை மட்டுங் கொண்டு அவ் வப் பண்ணையுங் காலந்தள்ள முடியாமல், மற்றதில் பயிராகும் மகசூலையும் அபேட்சித் தாகவும் அவை இருக்கின்றன; ஆதலால், ஒன் றிலிருந்து மற்ற தற்குச் சரக்குகள் போக்குவரவா யிருத் தல் தவிர்க்கொணாத தாகப் போய்விடுகிறது. வீண் விரய மாகாமல், சிக்கனமாக மூவருடைய காலமும் பயன் தர வல்ல வழிகளிற் கழிந்துவரும் பொருட்டாக அவர்களுள் ஒருவன் சாமான் போக்கு வரவுகளை மட்டும் தனியாகப் பொறுத்துப் பார்த்துவர இயைகிறான். ஒரு பண்ணையி லிருக்கும் சரக்கை மற்றையதற்குக் கொண்டு போய்க்

கொடுத்து, அதற்கு மாருக அங்குள்ள சரக்கை இதற்கு வாங்கி வந்து தருவதுதான் அவனுடைய வேலையாக இருக்கும். இவ் வேலையைச் செய்து வருவதற்காகத் தான் கொண்டு போகும் பொதிகள் ஒவ்வொன்றிலு மிருந்தோ, அல்லது அதற்கு மாருக வாங்கி வருவதி லிருந்தோ தன் காலக்ஷேபத்துக்குப் போதுமான ஒரு பகுதியைத் தனக்கெனப் பிரத்தியேக மாக எடுத்துக் கொள்ளுவ தாக மற்ற இருவருடனும் திட்டம் செய்து கொண்டு, அதன்படியே அவன் நடந்து வருகிருன்.

ஸமயோசிதம் போல, ஒவ்வொரு பண்ணைக்கும் வேண்டி வருபவற்றை, வேண்டியாங்கு இந்த 'வாகினி' அல்லது தூதன் இடை யருது எப் பொழுதும், எய்துவித்துக் கொண் டிருப்பா ஞகில், அவ் விரு கிருஷிகருடைய பருவங்களும் கிரமந் தப்பாமல் செழுமை யுற நடைபெற்று வருவ தன்னியில் சாத்திய மாகிறவற்றில் எல்லாம் வைத்து அதிகதம மான பலசித்தி, "கொழுமிகுதி"யின் உருவிலோ (பயிர் விளைவு) அல்லது சம்பத்தின் வடிவிலோ அந்தச் சிறு சமுதாயத்துக்கும் லபிக்கும். ஆனல், காரியங்கள் இவ்வாருக நடைபெறவில்லை யென்றும், அதற்கு மாருகவே நடைபெறுவ தாகவும் கருதிக் கொள்ளுவோம். அந்த "ஊடுபோகி" யின் மூலமாக வல்லது வேறு வழியில், அவ் விரு நிலச் சுவான்களுக்கும் போக்குவரவு நடைபெற வியலாது போய்விடுகிறது. ஆகவே, அந்த 'ஊடுபோகி' தன் கையினில் ஒப்படைக்கப்படுகிற திரவியங்களை, உடனுக்குடனே விநியோகம் செய்யாமல் தன்கையினில் தேக்கி வைத்துக் கொண்டு விடுகிருன். தேக்கி வைத்துக்கொண்டு, அவ் விரு கிருஷிகருடைய செய் கால் பருவங்களது கூறுபாடுகளை உற்றுநோக்கி நன்கு தெரிந்து வைத்துக் கொண்டவனய்த் தன் கையி லுள்ள சரக்குகளுக்கு அத்தியந்தத்தில்

நெருக்கடி யாம் தேவை தோன்றும் வரையிலும் வாளா விருந்து விடுகிறான். அத் தகைய முடை தோன்றி, இனித் தன் கையிலுள்ள சரக்குகளை வாங்கிக்கொள்ளாமல் தீராது என்னும் புத்திமுட்டில் அவ் விருவர்களையும் கொண்டு வைத்துக்கொண்டு, தான் கொடுக்கிற பண்டத்திற்குப் பிரதியாக அவர்கள் கையில் மீந் திருக்கக்கூடிய மற்றைச் சம்பாரங்களை யெல்லாம் அவன் உரிந்து வாங்கிக் கொண்டு விடுகிறான். இப்படி, புத்தி சாதுர்யமாகத் தன் சமயம் கண்டு நடந்து வருவா னாகில், அந்தஇரண்டு பண்ணைகளிலும் எஞ்சிக் கட்டிக் கிடக்கக்கூடிய சம்பாரங்களை யெல்லாம், கிரமேண, அவன் தன் கை வசப்படுத்தி அடக்கம் செய்துகொண்டு விடலாம். இப்படி, நடக்க காலாந்தரத்தில், தாங்கவொண்ணாக் கொடுமை தாங்கி ஓர் சோதனைக் காலமோ அல்லது க்ஷாமமோ தோன்றும் ஆண்டினில், அவ் விரு பண்ணைகளையுமே தான் விலைக்கு வாங்கிக் கொண்டு, முன்னம் அவற்றுக்கு உடையாளிகளா யிருந்த அவ் விருவரையும் தன்னுடைய ஊழிய ராகவோ அல்லது பணியாள ராகவோ வைத்துக்கொண்டு சோறு போட்டுக் கொண்டு வரும் பதவிக்கு அவனால் ஏறிக்கொள்ளக்கூடும் என்று யாரும் எளிதிற் கண்டு கொள்ளலாம்.

நேர்ந் திருக்கிற இவ் வழக்கினில் காணும் 'வணிக சம்பத்து,' இற்றைத் தேசீய தனதாய தத்துவங்களினின்று
௩௭ துளிகூட முறை பிறழாதபடி ஈட்டப் பட்டதாகத் தான் இருக்கும். என்றாலும், நியாயதரமான ஓர் லாபத்தோடு மட்டும் இவ் 'வூடுபோகி' உள்ளம் நிறைந் தொழுகி வந்திருந்தால் திரண் டிருக்கக் கூடியதைக் காட்டிலும், அந்த ஸம்ஸ்தானம், அல்லதுஅம் மூவரையும் தொகுத்து நோக்கும் அந்த ஸமாஜத்தினுடைய சம்பத்து மொத்தத்தில் குறைவாகவே யிருக்கும் என்று முந்தியதினும்விட

இந்த திருஷ்டாந்தத்தில் நாம் இன்னும் தெளிவுபடக் கண்டு கொள்ளலாம். ஏன்? அவ் வியவசாயிகள் இருவரும், இடுப் பொடிந்து தம்முடை முயற்சிகளில் தாழ்ந்து போம்படிசெய் யப்பட் டிருக்கின்றனர் எனத் தென்படும். ஆகவே அந்த ஸ்திதியில் வைத்து அவர்கள் செய்து வந்திருக்கிற வேலை களுக்குக் காரிய வத்தாக வாய்க்கும் பலசித்திகள் இன் னும் அதிகமாகக் குறைவுபட்டே இருக்கும். ஏனென் றால், அந்தந்தப் பருவங்களின் நெருக்கடிகளில் வைத்து அவர்களுக்குத் தேவையா யிருக்கக் கூடிய சாமான்களை, தொடர்ந்த வாக்கிலே, இம்மட்டு அம்மட்டாக அவன் அளந்து அளந்து கொடுத்துக் கொண்டு வந்திருக் கிறான். அதோடு சாசுவத மான ஒரு லாபத்துக்கும் ஆசை வைக்க இட மில்லாமல், கேவலம் ஒருச் சாண் வயிற்றை நிரப்புதற்குத் தான் அத்தனை பிரயாசையும் படவேண்டி யிருக்கிறது என்ற ஏக்கத்தாலும் அவர் கள் கை தாழ்ந்து உள்ள மழிந்தும் கிடப்பர். இந் நிலை நின்றும், அவர்கள் ஆற்றிவரும் வினைகளது பயன் வண் மையில் மிகுதியும் குறைந்த தாவதற்குத் தடையேதும் உளதோ? அதவா, அவன் நேர்மையுடன் மட்டும் தன் வியாபாரங்களை நிகழ்த்தி வந்திருப்பா னாகில், ஒன்றுபோல அந்த ஸம்ஸாரிகளுடைய 'குதிர்'களிலும், தன் சொந்தக் 'குதிர்'களிலும் நிறைந்து 'தத்தலடித்து'க் கொண்டிருக்கக் கூடிய அத்தனை சம்பாரங்களுக்கும் இப் பொழுது அவ் வர்த் தகன் கையில் முடிவாகச் சேர்ந் திருக்கிற சம்பாரங்கள் தாம் ஈடா யிருக்குமோ? இராது. எவ்வாற்றானும், அவற் றுக்கு ஈடு செய்ய முடியாது இப் பொழுது அவன் கையில் அடை வாயிருப்பனவற்றால்.

ஆதலால், அனுகூலங்களை மட்டு மில்லாமல் ஜாதீய சம் பத்தின் பரிமாணத்தைப் பார்ப்பதானாலுங் கூட, அதனைக்

குறித்த கேள்வி முழுவதும், அந்தியத்தில், பரமார்த்த மான தர்மநியாயத்தைப் பற்றிய வியவகார மாகவே தீர்ந்து விடுகிறது. ஓரிடத்தில் சம்பத்து அபாரமாகத் திரண் டிருக்கிறதாகக் காணப்படுகிறது என்ற அவ் வொரு செய்தி மட்டும் கேட்ட வுடனேஅது நிகழ்கிற அந்த ஜாதிக்கு அதனால் விளைவது நல மாயிருக்குமா அல்லது பொலமா யிருக்குமா என்று, பிறவற்றைக் காணாது கேவலம் அதன் இருக்கையா கிற அவ்வொரு சான்றை மட்டும்கொண்டு நம்மால் நிச்சயம் செய்யச் சாத்தியப்படாது. திரண்டு தோன்றும் அச்சம் பத்தின் அருகதை, அதற்கு வியங்கியமாயிருக்கும் தார் மிக ஸமிக்ஞையையே முற்றும் ஆசிரயித்த தாக யிருக்கும். ஓர் கணித ஸங்கியை, அதன் முன் னுள்ள பீஜ கணித ஸமிக்ஞையை முற்றும் ஆசிரயித்தே, அருகதை பெறுதல் போல வென்க. குறிப்பிட்ட ஒரு வணிக சம்பத்தின் ஈட்டம், ஒரு 'அர்த்த ஸஞ்சயம்', உள்ளம் படிந்த உத்யமங் களையும், மேலும்மேலும் ஊறிப் பொங்கும் ஓஜஸ்ஸுகளை யும், வண்பயன் தோற்றும் புத்தி சாதுரியங்களையும் சூசியா நிற்கலாம் ஒருசார்; அல்லது, மறுசார்,பிற உயிரை வடித்து இறுத்த வெறுக்கைப் போகங்களையும், கண்செற் றக் கொடுங்கோன் மையையும்,அதோ நாச வேதுவான மோடி மோசங்களையும் அதுவே குறிப்பிப்பதாகலாம். காலங் கெட்டுப் பெய்ந்த மழையில் அடிபட்ட பயிரை அறுத்துக் குவித்த அம்பாரங்கள், பொருமிக் கனமாகத் தோன்று மாப் போல, சில நிதிகள், மக்கள் வடித்த கண்ணீரால் பொருமிப் பளுவாகத் தோன்றும். இவற்றுக்கு நேர் விரோதமான ஓர் வகைத் தங்கம் உண்டு. அது "மூர்த்தி யால்" மிகச் சிறி தாயிருக்கு மாயினும் ஒளிவிடும் காந்தி யின் "கீர்த்தி"யால் மிகப் பெரி தாயிருக்கும். தராசால் குன்று மணியிலும் குன்றிய எடையா யிருப்பினும், தே

சால் சூரியனும் மங்கும்படி, அத்துணை ஜகஜ்ஜோதியாக ஜ்வலித்துக்கொண் டிருக்கும்.

காண்மினோ! "தர்மாவேசம் பற்றியோ, பாவகஅணி பற்றியோ, தனத்திற்கு இந்த இலக்கணங்களைச் சூட்டி யிருக்கிறது; ஆதலால், பணத்தைத் தேடுவோன், பிரியப் பட்டால் இவற்றை உல்லங்கனம் செய்து நடக்க
கஅ லாம்" என்று கருதவொண்ணாது. ஏனென்றால், எழுத்தில் ஸ்பஷ்டமாகச் சொல்லி யிருப்பதற்குத் துளி கூட மாறுபடாமலும், நிருல்லங்கிய மாகவும், தனத்தை அதன் தூல வடிவிலும் கட்டுப்படுத்த வல்ல பௌதிக இலக்கணங்களாக்கும் இவை. பிரஸ்தாபத்துக்கு வரும் ஒரு ஸங்கியையினுடைய தனிக யோக்கியதையை, கணக்கரிய தரத்தினில் ஏற்றியோ, அல்லது தாழ்த்தியோ வைக்கும் ஆற்றல் இவற்றுக்குப் பொருந்துமென்க. தான் திரண்டு வரும் வழி நெடுகத் தன் னளவிலும் பார்க்கப் பன்மடங் கதிகமான திரவியம் பணைத்துக் கொழிக்கும்படி செய்த ஆக்க வினையின் பயனாக ஒரு திரவிய நிதி சமைந் திருக்கக் கூடும். இதே போலப் பிறிதோர் நிதியும் குவிந்து கிடக்கக் காணப்படலாம். ஆனால், அவ் வளவிற்கு அது திரண்டு வந்த வழியெல்லாம், அதனிலும் பார்க்கப் பன்மடங் கதிகமாகத் த்வம்ஸ நாசங்கள் செய் திருக்கிற ஒரு காரியத்தின் பயனாக அவ்வாறு திரண்டு தோன்றும். அதாவது, அது திரட்டப்பட்டதால், "இப்படி விரைத்துப் போயதற்குப் பச்சைநாவி யுண்டனரோ வென்னும்படி, இன்னின்ன திண் டோள்களும் வன் புயங்களும் செய லற்று வீழ்ந்து கிடப்பவாயின; இத்தனை தீர புருஷர்கள் தைரிய மிழந்து அவல மாயினர்; வண் பயன் தரவல்ல இன்னஇன்ன கருமங்களெல்லாம் தடைப்பட்டு மாய்ந்தன" என்று சொல்லற்கு இடந்தாலாம். அதோடு உள்ளதும் இல்லாததுமாய பொய்ந்

நெறிகளைப் பாட்டாளிகளுக்கு வகுத்துக் கொடுத்து, அவர் தம் வாழ்க்கையை எழுவாய் எரிநரகிடை வீழ்த்தி அங்குக் காணும் "தோரா' மைதானத்தில், ஒரு 'பூடம்' போட்டுவிட்டுச் சேழுமைஅம்பலம் கட்டிவைத்து விட்டோ'மென்ற பொய்யுரையும் பிறந் திருக்கலாம்.புற நோக்கில் சம்பத்தாக விளங்கிக்கொண் டிருப்பது வாஸ்தவத்தில், நெடிது வியாபகமாயிருக்கப்பட்ட ஓர்அதோநாச ஸ்திதியைக் காட்டும், மஞ்சள் முலாம் பூசி வைக்கப்பட்ட ஒரு சுட்டுக்காட்டாக, பாதை காட்டியாக, இருக்கலாம். உதாரணமாக, நெடுந் தொலைகள் சென்று அமோகமான செல்வங்களையும் நிதிகளையும் ஈட்டித் திரும்பும் ஒரு வியாபாரக் கப்பலைக் கள்ளக் கருதிப் பாறையினில் தட்டி யுடையும் படியாகச் செலுத்தி, அது கடலுள் மூழ்கும்போது கரையினில் கொழித்துக் காணப்பட்ட பொற் காசுகளைக் கைந் நிறையப் பொறுக்கி யெடுத்து வைத்துக்கொண்ட ஒரு சுசடனது கைப் பொரு ளாகவும் அத் திரளக் கண்ட நிதியம் இருக்கலாம்; அல்லது ரணகளத்திலே மாண்டு கிடக்கும் சுத்த வீரர்களுடைய மார்பினின்றும், ஒரு "பாளையப்புறஞ் சுற்றி" கழற்றிக் கட்டி வைததுக்கொண் டிருக்கிற ஒரு பிணக் கந்தை மூட்டை யாகவும் அது இருக்கலாம்; அல்லது நாட்டானையும் மாற்றானையும் ஒன்றுக வைத்துப் புதைப்பதற்கு உபயோக மாகிற இடிகரைகளை விற்று வாங்கி வைத்துக் கொண்டிருக்கிற காசாகவும் இருக்கலாம் அது.

திரவியம் தேடுதற் கான ஆதாய மூலங்களது தர்மாதர்மங்களைப்பற்றிச் சிறிதும் எண்ணுமலேயே, சம்பத்தைச் சம்பாதித்துக் கொள்ளுதற் குரிய வழி துறைகளை வகுத்து விட்டுவிட முடியும்; அல்லது, ஜாதி முழுவதும் சேர்ந்து ஒன்று போல கைப்பற்றி யொழுகவல்ல தரத்தினில், கொள்முதலையும் லாபத்தையும் ஆற்றிக் கொள்ளுதற்குத்

தந்திர சாஸ்திரத்தை மருவியதாகவுள்ள ஒரு பொது விதியை அறுதி செய்து வைத்து விடலாம்; என்ற இக் கருத்தை என் னென்பது? ஓரோர் மோகங்களின் வயப் பட்டுப் புத்தி மயங்கிய காரணத்தாலேயே, பலவிதமான பாப கிருத்தியங்களை இதுகாறும் மானிடர் புரிந்து வந்திருக்கின்றனர். இப்படி, அவரை மோகபரவச ராக்கிப் பாவத் துள் புகுத்திய கருத்துக்களி லெல்லாம் வைத்து அதிகதமத் தில் துணுக்குடன் திரிந்து பாழும் பயனுக முடிவது என்று, கீழ்ச் சொன்ன கருத்தைத் தான் ஒரு வேளை சொல் லவேண்டி யிருக்கும். "நயம் மிக்க தொலையில் கொள்வினை செய்து, அருமை மிக்க தொலையினில் கொடுப்பினை யாற்றுக" என்ற இந்த வணிக தந்திர சூத்திரம், ஜாதி முழு வதையும் தழுவி இயல வல்ல தனுதாய இயலில் பலசித்தி பொருந்திய ஒரு தத்துவத்தை யாக்கும் விளக்குகிறது என்று இற்றை நாட்களில் ஒரு கருத்து உலவி வருகிறது. இன்றைக் கில்லாது போயினும், எத் தகைய தான இடம் பொருளேவல்களிலாவது அவ் வியலில் பலசித்தி தரவல்ல ஒருதத்துவமாகஅது அமைந்து கொள்ளமுடியும்என்றகருத் துக் குறிப்பையுமே எடுத்துக் கொள்ளுவோம். இவ் வகை யான கருத்துத் தோன்றியதால், இன்று மானுட விவேகத் துக்கே வந் தடைந் திருக்கிற இத்துணை 'இளப்ப'த்தைப் போல, வேறு எக் கருத்துக் காரணமாகவும் இத்துணை இளப்பத்தை மானுட விவேகம் அடைந் திருக்கிறது என்று ஒப்புக் காட்டுதற்கு ஒரு கருத்தை யேனும் சரித்திர நூல் களில் நான் கண் டிருப்பதே யில்லை. நயம் மிக்க சந்தை யாகப் பார்த்துக் கொள் முதல் செய்க? வாஸ்தவம். ஆனுல், உன்னுடைய அந்தச் சந்தை மலி வாவதற்குக் கார ணம் யா தாகலாம்? வீடு நெருப்புப் பற்றிக்கொண்டால், அப்புறம்அங்கு, கரி மிகச் சரசமாகப் போய்விடலாம். அப்ப

டியே பூகம்பம் வெடித்த தானுல், உன்னுடைய தெரு வெல்லாம் செங்கல் மிக மிக மலிவாக அகப்படலாம் தான். நிற்க யாதினும் மிக்க அருந்தலான தொலை பார்த்துக் கொடுத்திடுக? ஆமாம் உண்மையில் அப்படித்தான் செய்யவேண்டும். ஆனுல், உனது தொலையை அத்துணை அருந்தலாக்கி வைத்தது யாது? இன்றைக்கு, உன்னுடைய ரொட்டியைச் செம்மையாக விற்றுவிட்டாய். ஆனுல், அப்படி நீ சந்துஷ்டியடையும்படியாகக் கொழுத்த விலை கொடுத்து அந்த ரொட்டியை உன்னிடமிருந்து வாங்கிச்சென்றவன் யா ராயிருக்கலாம்? ஏங்கிப் போய், வேறு வழி யாதும் இல்லாமல் தன் கையிலிருந்த அத்தனை காசையும் உன்னிடம் கொட்டிக்கொடுத்து அந்த ரொட்டியை வாங்கித் தின்று விட்டுக் கடைசி யாத்திரையிற் சென்று விட்ட பெற்றியனு யிருப்பனே? அல்லது, இனிமேல் ரொட்டிக்கு மீண்டு வரவேண்டிய அவசரம் இல்லாமற் படிக்கு தன் கையி லுள்ள காசை யெல்லாம் கொட்டிக் கொடுத்து விட்டு நெடும் போக்காய் அவன் போயிருப்பானே? அல்லது, இன்றைக்கு நீ கேட்டதையெல்லாம் கொடுத்து விட்டு, உன்னுடைய சம்மதா சம்மதங்களைப் பற்றிச் சிந்தனை தானும் இல்லாமல், நாளைக்கு உன்னையே கன்னத்தில் அறைந்து உன் நிலங்களை யெல்லாம் வாங்கி யபகரித்துக் கொண்டுவிட விருக்கிற ஒரு தனுட்டியனு யிருப்பானே? அல்லது, நீ கூறிய விலையைக் கொடுத்து ரொட்டியை வாங்கித் தின்றுனதும், நேரே உன்னுடைய ஆஸ்தி முழுவதையும் உபநிதியாகக் கட்டிவைத்திருக்கும் அந்தக் கருவோலத்தையே கொள்ளை போடப்போகிற ஒரு படை வீர னுயிருப்பானே? இவ் வாறுக, உன்னிட மிருந்து அவ் விலைக்கு ரொட்டியை வாங்கிக்கொண்டவன் எந்த இனத்தைச் சார்ந்தானுக இருப்பன்? கூறே!

இந்த சங்கதிகளில் ஒன்றை யேனும் உன்னால் தெரிந்து கொள்ளமுடியாது. உனக்குத் தெரிந்து கொள்ளச் சாத்தியமாவ தெல்லாம் இந்த ஒரேஒரு விஷயந் தான். அதாவது நீ, செய்த இந்த வியாபாரம் நீதியும் நாணயமும் செறிந்த ஒரு சங்கதிதானா என்பது ஒன்று தான் உனக்குத் தெரிந்து கொள்ளவியலும். இவ் விஷயத்திலே நீ அக்கறை செலுத்த வேண்டிய சகல சங்கதிகளும் இந்த ஒன்றுக்குள் அடங்கி விட்டது. ஏனென்றால், இவ் வண்ணம் நீ தெரிந்து செய்ததால், கொள்ளையிலோ அல்லது கூற்றத்திலோ போய் முடிவடையாத பிறிதோர் காரிய ஸ்திதி இவ் வுலகினில் கடைசியாகப் பிரதிஷ்டை யாவதன் பொருட்டாக உன் பங்குக்கு நீ செய்யவேண்டியது முழுவதையும் செய்தாயிற்று என்ற உறுதி பிறந்தவனாய் நிம்மதியுடன் நீ அமர்ந்து கொள்ளலாம் அப்பொழுது. ஆகவே, இந்த விஷயங்களைத் தொட்ட ஒவ்வொரு கேள்வியும், நீதி என்ற அந்த மகத்தான பிரசினையில் போய்த்தான் முடிவிடத்து லயம் பெறுவதாக இருக்கிறது என்ற இந்த கட்டம் வரையும் பூர்வாங்கங்களைச் சோதித்துத் துலக்கி வைத்துவிட்டு, அடுத்த கட்டுரையில் அந்தப் பிரசினையை நான் கையாளுகிறேன். அதற்கு முன்னதாக மூன்றே மூன்று பட்சாந்தங்களை இதிற் சொல்லி, வாசகரது பரியாலோசனைக்கு நான் அவற்றை விட்டு வைக்கிறேன்.

மக்களை அடிமை செய்து ஏவல் வாங்கித் தரும் மாட்சிமை தான், பணத்திற்கு ஏற்படுகிற அர்கதையிலும் சுபாவ விசேஷத்திலும் பிராதானியமாக இருப்பது; இந்த மாட்சிமைஉடன்பொருந்தியிராது போனால்,பெருகியபூத உடைமைகளா லாம் காரியம்யாதொன்றுமே யிராது; ஆனால், அந்த மாட்சிமை கைவச மாயிருக்கும் ஒரு புருஷனுக்கு, அவ் வுடைமைகள் இருந்து தீரவேண்டு மென்பது

அத்தனை கட்டாயமு மில்லை; என்ற இந்தச் செய்திகள் நன்கு விளக்கப்பட் டிருக்கின்றன. ஆனால் மக்கள் மீது ஆட்சி செயவல்ல வல்லபம் சித்திப்பதற்குப் பணம் ஒன்றே தான் உபாய மென்பதற கில்லை; வேறு உபாயங்களாலும் அந்த வல்லபம் சிந்திக்கக்கூடும். சில பக்கங்களுக்கு முன்னே (௬௦-வது ரசனையில்) நான் கூறியது போல, பணத்தின் வல்லபம் எப் பொழுதும் தோஷவத்தாகவும் சமுசயாஸ்பத மாகவுமே இருக்கிறது. அதனைக்கொண்டு எய்த முடியாத வான பொருள்களாகப் பல விருக்கின்றன; வேறு உள:—அவற்றை அது கொண்டு பேணிப் போற்றி வரவொண்ணாத தாயிருக்கும். பொன் கொடுத்தும் வாங்கிக் கொள்ள முடியாத பல சோபனங்களை மானிடர்க்கு நாம் கொடுக்கலாம். இன்னும், எத்தனை தான் அதனை(பொன்னை) அளந்து அளந்து கொட்டினாலும், போதிய வண்ணம் கைம்மாறு செய்த தாக அமையாத பல சிரத்தா பக்தி சுசுருஷைகள் அவர்க ளிடமாகக் காணப்படலாம்.

இதென்ன! சாமாநியந்தானே; புதுமை யாதும் இல்லையே-என வாசகர் கருதுகிறார். ஆமாம்! ஆனால், அத்தனை சாமானிய மான, புதுமை யில்லாத ஒன்றில்லை அடியில் வரவிருப்பது:—அதுவும் அத்தனை சாமாநிய மானதாகப் புதுமை யில்லாத தாகப் பவிக்கவேண்டுமென்பது தானெனது பிரார்த்தனை:—அதாவது, இந்த தார் மிக வல்லபம் காட்சியும் கணக்கும் கடந்த ஒரு பொருளாக இருந்தாலும், அதனிலும் கனதரமான செலாவணி நாணயங்களினின்றும் நிதர்சனத்தில் தெளிகிற ஸாக்ஷாத் தனபாக்கியம் அத்தனையும் சொன்ன தார்மிக வல்லபத்திலும் பொருந்தி யிருக்கிறது; என்ற இக் கருத்து, இப் பொழுது அத்தனை சாமானிய மாகப் பரவி யிருக்க வில்லை. காட்சிக் கெட்டாத கனகம் ஒரு மனுஷ்யனுடைய கைத் தலத்தில் மல்கிப்

பொங்கிக்கொண் டிருக்கலாம். அத் தகைய ஒரு திவ்ய ஹஸ்தத்தினுடைய ஒரு விரலின் சுண்டுதலுக்கோ, அல்லது அதன் ஸ்பரிசத்துக்கோ நடந்தேறக்கூடிய அத் தனை காரியங்கள், பொன்னை மாரியாகப் பொழிந்து கொட் டும் பிறிதோர் கைக்கு நடவாமலு மிருக்கலாம். இதில் இன்னும் ஓர் விசேஷமும் உளது. இந்த அவ்யக்த ஸ்வர் ணம், செலவிடச் செலவிடக் குறைந்துகொண்டே வர வேண்டும் என்றதாக ஒரு விதியின் கட்டாயமும் நியதியும் இல்லை. அளந்து கட்டிப்போட்டுக் கொள்ளுவதற்குத்தான் அவருக்கு ஆற்றல் பற்றுதென்றாலும், தேசிய தனதாய கர், இத னிடத்தும் ஒரு கண் வைத்து வருவ ராயின் ஓர் நாள் நலம் பெறுவர்.

இதோடு தீர்ந்துவிட வில்லை. பணத்தினுடைய உயிர் நிலையே, மக்கள்மீது நிலை பெறுத்தித் தரும் ஆணை மாட்சி என் றிருப்பதால், அந்த தர்சன மாத்திரமான அல்லதுநாம மாத்திரமான செல்வம், இந்த மாட்சிமை பொருந்தாமல் கைதாழ வீழ்ந்துவிடும் பட்சத்தில், அது தன் உயிர் நிலை நின்றுமே கைதாழ்ந்து வீழ்ந்து விட்ட தாகப் பவித்து விடுகிறது; வஸ்துதஹ, சம்பத்து என்ற பாவமே அதனி னின்றும் நீங்கிப் போய் விடுகிறது. இங்கிலாந்தில், சமீப காலந் தொட்டு, மானுடர்மீது நாம் வகித்து வரும் அதி காரப் பிரபாவம் அத்துணை நிஷகண்டக மாயிருந்து வருவ தாகத் தோன்ற வில்லை. யதாக்கிரமமாக வேதனங்கள் தங் களுக்கு அளிக்கப்பட்டு வரவில்லை என்ற ஒரு தோற்றம் வாய்ந்தவராய், நமது மாடிகளுக்குள்ளே இடித்துப் புகுந்து நுழைந்துகொண்டு, அமர்க்களம் செய்ய வேண்டும் என்று ஊழியர்கள் நோட்டம் கொண்டவராகக் காண்பிக்கின்றனர். இம் மாதிரியான ஒரு நிகழ்ச்சி, ஒருவனுடைய ரே஖ியில், ஒட்டைக்கொரு நாள் நடந்து வருகிற தாயிருந்தால், அத்

தகைய குடிப்பிறந்தானுடைய சொத்துடைமைக்கு ஏதோ துர்த்தசை பிடித் திருக்கவேண்டும் என்று நாம் கருதிக் கொள்ளலாம்.

மேலும், அவர்களுக்குச் சமதம குணங்கள் பொருந் தும்படி செய்வதில் பலிக்காமற் போனது போலவே, சேவ கருக்குச் சுகபோக வசதிகளை அமைத்துத் தருவதிலும், நமது சம்பத்துக்கு இருக்கும் பிரபாவம் முற்றும் வரம் புடைய ஒன்றாகவே தென்படுகிறது. 'அடுக்களைகளில் உலவும் பேர்வழிகள், அழுக்காடை சுற்றியவ ராயும், அட் டுப் பிடித்தவ ராயும், அரைப் பட்டினி கிடந்தவ ராகவுமே தோன்றுவாரா யிருக்கின்றனர். இத் தகைய மேனியரைத் தன் சேவகராய்க் கொண்டிருக்கும் ஒரு மிராசின் தனம், கற்பனையிலும் கணக்கிலும் மட்டிலும் உலவி வரும் தகைமை பெற்றதாயிருக்க வேண்டும் என்று ஒருவனுடைய புத்திக்குப் படுவதா யிருந்தால், அவனை நாம் குற்றம் கூற முடியாது.

கடைசியாக, சம்பத்தின் ஜீவரஸமே, மானுடர்மீது வகிக்கும் பிரபாவத்தில் அடங்குகின்றதால் அதன் பிர பாவத்தின் ஆட்சிக் குரியராக அமைகிற மானுடர்,
சம. உதார சீலங்களிலும் எண்ணும் தொகையிலும் எத் துணைக் கெத்துணை எறியவராக இருக்கின்றனரோ, அத் துணைக்கத்துணை அதிகமான மகத்துவத்தை அந்த சம் பத்தும் பெறுகிறது என்று போதராதா? சற்று ஆழமாக ஆய்ந்து பார்த்த பிறகு, தன் மாத்திரையில், அம் மனிதர் கள் தாமே சம்பத்தாகப் பலிக்கிறார்கள் என்ற காட்சியுங் கூடப் புலராலாம். அவரை எவலுடைமையில் ஆட்கொள்ளு தற்பொருட்டு, வழக்கமாக நாம் கையாளும் இப் பொற்காசு கள், வஸ்துதஹ, பளபளப்பான பட்டங்களையும் சுட்டிக் குஞ்சங்களையும் கொண்ட ஓர் வகை பிஸாந்து சேணத்தினை

விடத் திவலேகூட அதிகமான ஏற்றம் பெற்றில வென்றும் தீரலாம். அவற்றை மாட்டி வைத்தால், குதிரைகள் அவற்றையே பார்த்துப் பார்த்து மிரண்டு விழித்துக் கொண்டிருக்கும் தான். மிருகங்களின் அம் மிரண்ட பார்வையில், அவை மிக்க வனப்புப் பொருந்தித் தகதக வென்று விளங்கிக்கொண் டிருக்கும். ஆனால், வாயின் நுரையில் நனேயவும் செவியில் கிண்கிணென ஒலிக்கவும் செய்யும் இந்த பிஸாந்து பட்டஞ்சுட்டிகளைக் காதுகளிலும் கடிவாளங்களிலும் மாட்டாமற் படிக்குத் தவிர்த்து விட்டு, அதே பிராணிகளை வெறுமே ஸாரத்தியம் செய்யச் சாத்தியமாவதா யிருந்தால், அவற்றின் கடிவாளங்களை விட, அப் பிராணிகள் தம் மளவாலேயே அதிகதரமான பாக்கியம் பொலிய விளங்கும். வாஸ்தவத்தில், சம்பத்தின் உண்மையான ரேகைகள் குங்கும வர்ணமாகத் தா னிருக்கின்றன; ஆனல்,வன்பாறைகளி னூடாக வல்ல;மற்று,செழிய சதையினூடேயே அவை ஓடுகின்றன வென்றுங் கூடக் கண்டுபிடிக்கப்பட்டு விடலாம். ஒருவேளை, அடியில் வருவதுங்கூட நிதர்சன மாக நிரூபண மாகலாம்; அதாவது, சக்திக்கெட்டு கிறவரையிலும், பூர்ணபுள ராகவும், ஒளிரும் கண்ணராகவும், உவகை யூறும் உள்ளத்தின ராகவும், திண்டோள ராகவும் பொலிந்து நிகழவல்ல மானுட ஜீவரை அதிகம் அதிகமாகப் படைத்துத் தோற்று வித்தலே தான்,தனிக சம்பத்தால் நிகழ வேண்டுவ தான ஸகல ஸௌபாக்கியங்களும் அர்த்தங்களும் என்று தெளிவாதலென்க. என் புத்திக்குப் படுகிறது: தற்பொழுது நம்முடைய சம்பத்து இதற்கு நேர் மாறான வழியில் தான் நோங்கிச் சென்று கொண்டிருப்பதாக. அதிகதமமான தேசிய தனதாயகருடைய உத்தேசத்திலும், மனுஷ்ய ஜந்துக்கள் பெருங் கூட்ட மாகப் பெருகிப் பல்குவது சம்பத்தின் ஈட்டத்துக்கு உரம்

செய்வ தொன் றன்று ; அதவா, அப்படியே உரம் செய்வ தாக இருக்க வேண்டு மானல், உத்தம பட்சம், அவர்கள் அத்தனை பேரும், பஞ் சடைந்த கண்ணும், குறுகிக் குவிந்த மார்பும் கொண்ட யாக்கைகளோடாக வாவது கட்டாயம் பொருந்தி யிருக்க வேண்டும் என்று இருப்ப தாகத் தோன்றுகிறது.

இவ் வெல்லாம் எங்ஙன மேனும் ஆகட்டும். அடியில் வரும் கேள்வியை நிகழ்த்துவது முற்றும் பொருத்த
௪௧ முடைய தாகவே இருக்கும் என்பதைத் திரும்பவும் ஒரு முறை சொல்லிவிட்டு அதனைத் தீர்க்கமாக ஆலோசித்து முடிவு செய்யும் வேலையை வாசகருக்கு நான் விட்டு வைக்கிறேன். பொருளைப் பெருக்கக் கருதிப் பல 'தந்திர' தத்துவங்களைக் கண்டு பிடித்துப் புதிதுபுதிதான கைச்சரக்குகளைப் புனைந்து வெளியிடுகிற "கையாண்மை" களின் வரிசையிலே, ஸத் ஸ்வபாவம் செறிந்த ஆன்மாக் களை ஹஸ்த லாகவத்தால் சிருஷ்டித்து வைத்திட வல்ல ஒரு கையாண்மைக்கு "ஒன்றுமத்த" இடம் கொடுக்க வேண்டும் என்று முடிவிடத்துத் தீராதோ? என்ற கேள் வியை நிகழ்த்துவது தகுதி யுடைத்தாம். ஏன்? அந் நாள் இன்றைக்கு நெடுந் தொலைவாக இருக்கலாம்; கனவிலும் புல ராத ஓர் நாளாக இருக்கலாம்; என்றாலும் அத்தகைய ஓர் நாள் தோன்றவே போகிற தென்றும், அன்று கீழ்வரும் இக் காட்சி நடைபெறப் போகிற தென்றும் என்னால் தீர்க்க தரிசனம் செய்ய முடிகிறது. உடைமையால் பற்றிப் பிடித் திடும் பரிக்கிரக சம்பத்தினிட மாக முதன் முதலாக "அவக்கை" யுண்டானது காட்டாளம் சாதிகளிடையி லேயே தான். என்ற, இவ் வுண்மையை இங்கிலாந்து கண்டு, அப் பரிக்கிரக சம்பத்தைப் பற்றிய சிந்தனைக ளெல்லாம் மீண்டும் அக் காட்டாளம் சாதிகளையே சென் றடைவ

தெனத் தான் அவற்றை முற்றும் பரிகரித்துக்கொண்டு விடுவாள். அப்படியே, ஸிந்து நதி (பொன்) மணலையும், கோல் கோண்டாவின் வச்சிரத்தையும், போர்க் குதிரைகளின் கடிவாளங்களை இழுத்து விரைப்பாக வைத்துக் கொண்டிருக்கவும், (கடிவாளங்கள் தொய்யாமல் தங்கப்பட்டைகளை அடித்தலால் போலும். மொ—ன்) அடிமையின் பாகையிலிருந்து டால் வீசிக்கொண்டிருக்கவும் அவ்வணங்கு விட்டு வைப்பாள். அனைய பொருளுக்கு மேற்சொன்ன இவ் விடங்களைக் காட்டிக் கொடுத்துவிட்டு, அன்று ஒரு நாள் ஒரு முல்லைநில (Heathen) மாது எய்தியிருந்த அந்த வைபவங்களையும் பொக்கிஷங்களையும் தானும் கடைசியாக அடைந்து கொண்டவளாய், தனது குமாரர்களை முன் கொண்டுவந்து நிறுத்தி,

“யான் அணியுப் மணிகள் இவைகளே”

என்று சொல்லுந் தகைமையும் செறிந்திடுவாள்: இது நிகழும் ஓர் நாளும் உதிக்கத்தான் போகிறது. அதிற் சிறிதும் ஐயமின்று.

இரண்டாவது அத்தியாயம் முற்றிற்று.

---

## MIS-GUIDED YOUTH.

Oh! Glory and Splendour eternal for a youth that is Mis(s)—guided!

But! What is it that an elder attains to, when unto his guidance a 'stress' is added? Alas! Only, Infamy and Shame deathless!

R. A. K.

ஓம்

# பின்னுரை

இது ஓர் உத்தமமான தர்ம சாஸ்திரம். அதற் குரிய கௌரவம் கொடுத்து, அன்பர்கள் நாடோறும் பாராயணம் செய்யவேண்டும். பொழுது போக்காய் வாசித்து விட்டுச் சாக்கடை செல்லவேண்டிய நூலன்று இது என்றறிக. ஆதலால், ஒரு தரத்தோ டமையாது பலதரங்களும் படிப் பாருக்கு இது உண்மையாக ஒளி விடும்.

நான் பிறப்பால் பிராம்மணன்; அதோடு, பாரத்துவாஜ ஆசிரமத்தையும் சார்ந்தவன்; ஆக தனலட்சிய மின்றித் தர்ம லட்சியத்துக் காகவே வாழ வேண்டியவன். ஆதலால், இம் முயற்சியால் ஒரு செப்புக் காசை யேனும் ஊதிய மாக நான் எதிர் பார்க்க வில்லை; இனிமேலும் எதிர்பார்க் கப் போவதில்லை. இந் நூலுக்குத் தரப்படும் விலை முழு வதும், மெய் வருந்திச் செய்யும் உண்மைச் சேவகத் துக்கே போய்ச் சேரும். வேலை செய்ய வல்லாரை வேலை வாங்கி யாதரியாம லிருக்கும் வரையிலும் இவ் வுலகு நலம் பெறப்போவதில்லை. உலக மக்களுக்கு உண்மையிற் செய்ய.வேண்டிய தான தரும மெல்லாம் பயன் தரும் வேலை கொடுத்து ஏவுதல் ஒன்று தான். பிற வெல்லாம் பித்தலாட்டமே யாகும்.

இதையும் அடுத்த பாகத்தையும் மனங் கொண்டு வாசிப்ப தொன்றே ஆசிரியனுக்குத் தரவேண்டிய கூலி.

சென்னை.
புரட்டாசி ௩
பிரபவஞு

ரா. அனந்த கிருஷ்ணன்.